கல்கி

KALKI 25.5.2003 ரூ. 6.00



திருநள்ளாறு நாயகன்
-இலவச இணைப்பு

புதிய 'ஐச்வர்யம்'!

உள்ளே...





33 அமெரிக்காவில் அதிசய நோய்!

4 & 5 சமாதிகளுக்கும் ஆபத்து!





சண்டியரால் கலகமா? 16

கமிஷனருக்குக் கல்தா ஏன்? 12

கல்கி 25.5.2003

வட்டமேஜை

✉ படுபயங்கர டென்ஷன் போர்வழிகளைக் கூட 'ரிலாக்ஸ் மனமே ரிலாக்ஸ்' நிச்சயம் சாந்தப்படுத்திவிடும்.

கும்பகோணம், எஸ்.கே.மூர்த்தி

✉ 'போர்! போர் பத்திரிகைகள்மீது போர்' எனும் கட்டுரையில் 'வேகமும் விறுவிறுப்பும் நளினமும் அவையில் தாண்டவமாடுவதாகவும் அதற்கு முதல்வரே காரணம்' என்று பெருமைப்பட்டுக் கொள்கிறது 'தினமணி', என்று நக்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 'தினமணி' சொல்வது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை நடுநிலை நோக்கர்கள் வெகு நன்றாகவே அறிவர். முதல்வரின் சமயோசிதமும் நுண்மான் நுழைபுலமுமிக்க வாதத்திறமையும் ஒளிந்து கிடப்பதை அண்மைக்கால தமிழக சட்டப் பேரவை நிகழ்ச்சிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

தஞ்சை, எம்.சிவகுருநாதன்



✉ 'அட்மிஷன் அவஸ்தைகள்' கட்டுரையோடு 'பெற்றோருக்கு சில அட்வைஸ்கள்' என்று தனியாகக் கட்டம் கட்டி போட்டிருந்த குறிப்புகள் நல்ல எச்சரிக்கை உணர்வை ஊட்டின.

பூனாம்பாளையம், ஆர்.பி. ஜெயச்சந்திரன்

✉ முதல்வர் ஜெயலலிதா, கழகப் பெயருள் மின்னும் அண்ணாவின் தனிப்பெருமையை உணரவில்லை; எல்லாரையும் அணைத்துச் சென்றவர் அண்ணா. "Your days will be numbered" என்ற எதிர்க் கட்சி நண்பர் உரையாடலையும் ஏற்று "My steps are measured" என்று அமைதியாக பதில் சொன்னவர் பேரறிஞர்!

சென்னை, நந்தி அடிகள்

'பத்திரிகைகள்மீது போர்!' எனும் சஞ்சயன் கட்டுரை இன்றையத் தமிழகச்
சூழ்நிலையில், தமிழ் மக்கள் அனைவராலும், மிகவும் வரவேற்கத்தக்கது. பாராட்டத்
தக்கது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கொள்கைகளை உயிர் மூச்சாகக்
கொண்டு வாழ்ந்தவன், நமது மகாகவி பாரதி. அவன் வழியில் செல்ல முயலும்
ஏடுகளையும், இதழ்களையும், எழுத்தாளர்களையும், தமிழக ஆட்சியாளர்கள் பல்வேறு
வழிகளில் அடக்கி ஒடுக்க முயல்கின்றனர். இதனை முறியடிக்க, பாரதி பாதையில்
அனைவரும் ஒன்று பட்டு, உறுதியுடன் போராட வேண்டும். இறுதி வெற்றி, பாரதி
பாதைக்கே!

நெல்லை, இ.க.சி.

✉ எண்ணற்ற துணுக்கு பிரச்னைகளில் இருந்து விடுவிக்கும் அரிய மருந்தை இலவச இணைப்பாக கொடுத்தமைக்கு நன்றி பல!

காங்கயம், செல்வக்குமார்

✉ எலி பிடிப்பது பற்றியும் சல்வார் கமீஸ் பற்றிய ஆராய்ச்சியிலும் தீவிரமாகி, வெட்டி மன்றமாகி வரும் சட்டமன்ற செயல்பாடுகள் பற்றிய தலையங்கம் சரியான விளாசல்.

மயிலாடுதுறை, ஜெ. ரஜினிராம்கி



✉ ஆயுள் தண்டனைக் கைதிகளின் குழந்தைகளுக்காக தம் ஆயுளை அர்ப்பணித்திருக்கும் மனித நேயர் மணியின் சேவை மனத்தை நெகிழ வைத்தது.

ஈரோடு, ரஞ்சனிப்ரியன்

✉ 'உயிர்ப்பு' சிறுகதை அருமை. உண்மையான பாசமும் நேசமும் இருந்தால், பல்லாண்டுகள் பிரிந்திருந்தாலும் அந்த உறவு எவ்வளவு ஆத்மார்த்தமாக இருக்கும் என்பதை அழகாக வெளிப்படுத்தியது.

தூத்துக்குடி, சி.கஸ்தூரி ரத்தினம்

கட்டம் கட்டிய எச்சரிக்கை!

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : செ. ஏக்நாத் ராஜ், அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



• திருவண்ணாமலை ஸ்ரீ ராம்சுரத் குமார் ஆசிரமம்





• திருக்கோவிலூர் ஸ்ரீ ரகோத்தம ஸ்வாமிகள் பிருந்தாவனம்



மகான்களின் சமாதிகள் மற்றும் சித்தர்கள், ஆச்சார்யர்கள் உறையும் பிருந்தாவனங்கள் ஆகியவற்றை இந்து அறநிலையத் துறையின் நிர்வாக வரம்புக்குள் கொண்டு வரும் நோக்கத்தில் சட்டப் பேரவையில் சட்ட முன் வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏராளமான சொத்துக்கள் சமாதிகளை உள்ளடக்கிய ஆஸ்ரமங்களுக்குச் சொந்தமாக இருப்பதாலும், அங்கே நிறைய மக்கள் வழிபாட்டுக்கு வருவதாலும், அவற்றை மத அமைப்புகளாக அரசு கருதுவதாக சட்ட முன் வடிவில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் இந்த நடவடிக்கை தமிழகம் முழுதும் உள்ள ஆசிரம, குருபீட, அதிட்டான கோயில் நிர்வாகிகளிடையே கடும் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது.

''மகான்கள், சித்த புருஷர்கள் ஆகியோரை ஒரு மதக் குப்பியில் அடைக்க முடியாது. அவர்கள் மொத்த மனித சமுதாயத்துக்கும் பொதுவானவர்கள். பல்வேறு மதத்தினர், சித்தர்கள் சமாதிக்கு வருகிறார்கள். எனவே சமாதிகளை, மத அமைப்பாக முறைப்படுத்துவது சரியாகாது. ஆத்திகர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் ஜெயலலிதா அரசு, தவறான ஆலோசனையின் பேரில் இது போன்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது'' என்கிறார் முனைவர் ராமன். பாம்பன் ஸ்வாமிகள் துவக்கிய மகாதேஜோ மண்டல சபை என்ற அமைப்பின் தற்போதைய தலைவர் இவர். இது போன்ற ஒரு சட்டத்தை தமிழக அரசு கொண்டு வருவதற்கு காரணம் மகாதேஜோ மண்டல

சமாதிகளுக்கும் ஆபத்து!



* வடலூர் வள்ளலார் சமாதி

சபைக்கும், தமிழக அரசுக்கும் இடையே நடந்து வரும் வழக்குதான் என்றும் சொல்கிறார்கள்.

மகாதேஜோ மண்டல சபைதான் திருவான்மியூரில் உள்ள பாம்பன் சுவாமி சமாதியை நிர்வகித்து வந்தது. 1980களில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும் விதமாக சபை சில நடவடிக்கைகளை எடுத்தபோது, தனிப்பட்ட ஒருவரின் எதிர்ப்பு காரணமாக, சர்ச்சை எழ, பாம்பன் சுவாமி சமாதியை நிர்வகிக்கும் பொறுப்பை இந்து அறநிலையத் துறை எடுத்துக் கொண்டுவிட்டது. அதற்குச் சொன்ன காரணம் பாம்பன் ஸ்வாமி சமாதி மீது முருகன் சிலையும் பாம்பன் ஸ்வாமி சிலையும் இருக்கிறது என்றும், அதற்கு ஆகமமுறைப்படி பூஜைகள் நடக்கிறது என்பதும்தான். அறநிலையத்துறையின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கோர்ட்டுக்குச் சென்றது மகாதேஜோ மண்டல சபை. கீழ்க்கோர்ட்டு தீர்ப்புப்படி பாம்பன் ஸ்வாமி சமாதி நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொண்டது செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. நெற்றியடியாக 'சமாதி கோயில் இல்லை' என்று தீர்ப்பில் வலியுறுத்தி சொல்லப்பட்டது. ஆனால் தமிழக அரசு அப்பீலுக்கு மேல் அப்பீலாகச் செய்ய, இப்போது வழக்கு உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

இதற்கிடையில் இப்படிப்பட்ட சட்டத்தை அரசு நிறைவேற்றியிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேச பலர் தயங்குகிறார்கள். "அரசுக்கு வேறு பல வேலைகள் இருக்கின்றன. இந்த விஷயங்களில் தலையிடுவது சரியில்லை. சமாதிகள், பிருந்தாவனங்கள் ஆகியவற்றை வாழ்ந்து மறைந்த மகான்கள், சித்தர்கள் ஆகியோரின் சிஷ்யர்கள், அவர்கள் பால் பக்தி கொண்டவர்கள் ஆகியோர்கள்தான் ஏற்படுத்தி நிர்வாகம் செய்து வருகிறார்கள். அரசுக்கு இதில் எந்த சம்பந்தமுமில்லை. அப்படியிருக்க இந்தத் தலையீடு ஏன் என்று தெரியவில்லை. முழு விவரமும் தெரியாததால் இந்த சட்டத்துக்கு ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைத்து அமலுக்கு வரும்போது நீதிமன்றம் மூலம் பார்த்துக் கொள்ளலாம்" என்கிறார் திருவண்ணாமலை ஆஸ்ரம நிர்வாகி ஒருவர். திருவண்ணாமலையில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட மகான்களின் ஜீவ சமாதிகள் உள்ளன.

"சமாதிகள், பிருந்தாவனங்கள் ஆகியவை 'கோயில்' என்று வரம்புக்குள் எப்படி வரும்? அங்கே என்ன ஆறு கால பூஜை நடக்கிறதா? சித்த புருஷர்கள் சமாதிகளுக்கு வருபவர்கள், கற்பூரத்தை ஏற்றி வைத்து அவர்களே வழிபட்டுச் செல்வார்கள். வேறு பலர் தியானம் செய்வார்கள். "நட்ட கல்லைச் சுற்றி வந்து நாலு புஷ்பம் சார்த்தியே நமோ நமோ வென உச்சரிப்



* ஸ்ரீ ரெட்டியப்பட்டி ஸ்வாமிகள்



• ஸ்ரீ ரமணர்

பார்; நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள்ளிருக்கையில்?'' என்றார், பதினெண் சித்தர்களில் ஒருவரான சிவ வாக்கியர், எந்த அடிப்படையில் பார்த்தாலும் சமாதிகளையும், பிருந்தாவனங்களையும் அறநிலையத் துறையின் வரம்புக்குள் கொண்டு வருவது சரியாகாது'' என்கிறார் ராமன்.

காஞ்சி சங்கர மடத்தின் உள்ளே மகா பெரியவரின் பிருந்தாவனம் இருக்கிறது. "ஏற்கெனவே மடத்தின் கணக்கு வழக்கு விவகாரங்கள் அறநிலையத் துறையின் வரம்புக்குள் வருவதாலும், சமாதி, மடத்துக்குள்ளேய இருப்பதாலும், இந்த புதிய சட்டம் காஞ்சி மடத்தைப் புதிய வகையில் பாதிக்காது'' என்கிறார்கள். இப்போது உள்ள சட்டப்படியே மடங்களுக்கு நிர்வாகிகள் நியமிப்பதற்குக்கூட அரசுக்கு அதிகாரம் இருக்கிறதாம். நிதி வருவாய், செலவினங்கள் ஆகியவற்றை அரசு தணிக்கை செய்கிறது. இந்த அதிகாரத்தை சமாதிகளுக்கும் பொருந்த வைக்கப் பார்க்கிறது தமிழக அரசு.

இந்தப் புதிய சட்டத்துக்கான அடிப்படையாக வேறு ஒரு காரணமும் சொல்லப்படுகிறது. மகாபலிபுரத்தை ஒட்டியது போல் இருக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் ஆளவந்தார் டிரஸ்ட் என்னும் அமைப்புக்குச் சொந்தமானது. ஆளவந்தார் சமாதியை நிர்வகிக்கும் அமைப்பு இது. இந்தச் சொத்தைக் கையகப்படுத்தும் முயற்சியோ என்று கிசுகிசுக்கிறார்கள். "மக்கள் பணம் புரளும் இடங்களில் அரசு கட்டுப்பாடு இருப்பதில் என்ன தவறு?'' என்று ஒரு வாதமும் சட்டத்துக்கு ஆதரவாக உண்டு.

'ஏற்கெனவே கோயில்களில் அரசியல்வாதிகள் தலையீடு அதிகமாக இருக்கிறது. இப்போது சமாதிகளையும் பிருந்தாவனங்களையும் அரசின் கீழ் கொண்டு வந்துவிட்டால், அவ்வளவுதான்' என்ற பய உணர்வும் ஏற்பட்டிருக்கிறது. சட்டம் அமலுக்கு வரும் பட்சத்தில் ஏராளமான வழக்குகள் அதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்படலாம்.

- கௌசி

'மொய் எழுதும்போது 51, 101 என்று ஒரு ரூபாய் சேர்த்து எழுதுவது ஏன்?' என்று பேரையூர் வாசகர் எம்.கே. இளமதி கேட்டிருந்தார்.

'கொடுக்கும் தொகை பூஜ்யத்தில் முடியக் கூடாது. ஒன்று சேர்த்தால் மேலும் விருத்தியடையும் என்ற சென்டிமெண்ட் தான் காரணம். இந்தக் கேள்விக்கு, இதைவிட சுவையான பதில் இருப்பின், அதை ஒரு பக்கக் கதையாக எழுதும் வாசகருக்கு சன்மானத்துடன் ஒரு ரூபாய் சேர்த்துத் தந்தால் போச்சு' என்று 'நீங்கள் கேட்டவை'யில் -தராக பதில் அளித்திருந்தார். நிறைய வாசகர்கள் மொய்ப் பணத்தில் ஒன்று சேர்ந்த கதையை கற்பனை மிளிர எழுதி அனுப்பியிருந்தார்கள். பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று கதைகள் இங்கே....



செல்லமாய் கொக்கரக்கோ கூவி சோம்பல் முறித்தது சேவல். "அம்மா தாயே... காந்திமதி" என்று கோபுரத்தைப் பார்த்தவாறே எழுந்து கொண்டாள் கல்யாணி ஆச்சி. மகனை எழுப்பினாள். பாலுடையார் என்ற அவளுடைய மாமனார் பெயரை மகனுக்குச் சூட்டியிருந்ததால் பெயர் சொல்லி அழைக்காமல் 'ராசா' என்று செல்லமாக அழைப்பாள்.

"எய்யா... ராசா, கோழி கூவியாச்சு எழுந்திரு. அம்மான் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகணுமல்ல. இப்பவே புறப்பட்டாதான் வெயிலுக்கு எட்டாம போய்ச் சேரலாம்" என்று கரிசனையாக மொழிந்தாள்.

தாயின் உகப்பலைக் கேட்டு எழுந்த ராசாவும் தடபுடலாகப் புறப்படலானான். குளித்ததும் டிரங் பெட்டியிலிருந்த வெளுத்த வேட்டி, சட்டையை எடுத்து உடுத்திக் கொண்டு சரிகை வேய்ந்திருந்த விசிறி மடிப்பு நேரியலைக் கழுத்தைச் சுற்றி வல்லாட்டாக அணிந்து கொண்டு பயணித்திற்குத் தயாராகி, தாயிடம் சென்று செலவு வேண்டினான்.

தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும் என்பது போல் தமயன் வீட்டுத் திருமணத்திற்கு மகன் செல்வதினால் ஏற்பட்ட ஆனந்தம் உள்ளத்து உணர்ச்சிகளைத் தூண்டிவிட, பர

பழநியும் குமாரும் பல முறை கணக்கைக் கூட்டிப் பார்த்தனர். பணத்தை எண்ணி எண்ணிப் பார்த்தனர். எவ்வளவு முயன்றும் சரியாக வரவில்லை.

எழுதியதற்கும் இருப்புக்கும் வித்தியாசம் ஒரே ஒரு ரூபாய்தான்.

கணக்கில் கூடுகிறது. இருப்பில் குறைகிறது.

என்ன இது?

அந்தத் திருமணத்தில் மண்டப மொய்க் காப்பாளர்களாக பழநியும் குமாரும் பொறுப்பு ஏற்றிருந்தனர்.

அழைப்புச் சுருள்

கே.ஆர்.சுப்பிரமணியன்

வச நிலையடைந்தாள் கல்யாணி ஆச்சி.


"ராசா... அந்தக் காலத்தில் வெற்றிலைப் பாக்கு வைத்து அழைக்கும்போது, மாகாணி ரூபாயோ அல்லது அரைக்கால் ரூபாயோ சுருள் தருவார்கள். சுருளைப் பெற்ற நாம் மொய் முறை செய்யும்போது அந்தச் சுருள் பணத்தையும் சேர்த்து ஒன்றே மாகாணி ரூபாய், இரண்டே அரைக்கால் ரூபாய் என்று பதிவு செய்வோம். அதுவே இந்தக் காலத்தில் அழைப்புச் சுருள் ஒரு ரூபாயாக உசந்திருக்கு. நீயும் மறக்காமல் சுருள் பணத்தையும் சேர்த்து மொய் செய்துவிடு. இல்லன்னா சபையில் இளப்பமாப் பேசுவாங்க" என்று ஆதங்கம் கொட்டினாள்.

"அது சரியம்மா... அழைப்புச் சுருள் பெறாதவர்களும் இருபத்தொண்ணு, ஐம்பத்தொண்ணுன்னு மொய் செய்யறாங்களே. அது ஏம்மா?" என்று வினவினான் ராசா.

"அதுப்பா... நீ காரணத்தோடு இருபத்தொரு ரூபாய் மொய் செய்கிறதைப் பார்த்துக் கொண்டிருப்பவன், உன்னளவிற்கு அவனும் மொய் செய்து பெருமை பெற விரும்பி இருபத்தொரு ரூபாய் மொய் செய்றான். நீ செய்றதுலே ஒரு அர்த்தமிருக்கு. ஆனால் அவன் செய்யறதுலே அர்த்தம் இல்லை. ஆடம்பரம்தான் இருக்கு" என்றவள்...

"சரி... சரி... நீ போயிட்டு வா... மாப்பிள்ளைகாரப் பய எப்படியிருக்கான்னு பார்த்துட்டு வா" என்று மகனை அனுப்பி வைத்தாள்.

ஒன்று சேர்ந்த கதை



அட்டையில் மஞ்சளால் 'உ'லாபம் போட்ட மொய் ஏடு குமாரிடம் ; மஞ்சள் துணி 'டை' கட்டிய எவர்சில்வர் குடம் பழநியிடம்.

இருந்தாலும் ஒரு ரூபாய் குறைவு பிரச்னை இருவருக்கும்தானே.

குமார் சொன்னான்.

"பழநியண்ணே! இப்படிச் செய்யட்டுமா. யாருடைய (மொய்) கணக்கிலேயாவது ஒன்றை சைபராக மாத்திடலாமா?"

எழுதியவன் ஏட்டைக் கெடுப்பது இப்படித்தான் போலும். இதற்கு பழநி உடன்படவில்லை. குமாரின் தவறான யோசனையை சிறிது கடிந்து கொண்டான்.

"குமார் உனக்குக் கணக்கெழுத மட்டும் தான் தெரியும் போலிருக்கு... ஒரு ரூபாய் தானேன்னு திருத்தி எழுதினா, பின்னால்

இரா. பால்சாமி

தெரிய வரும்போது உறவுகள்ல சிக்கலே வந்து சேரும். வகையைத் திருத்தினாலும் தொகையைத் திருத்தவே கூடாது. இப்படி மொய்க் கணக்கில ஒன்று சேர்த்து வந்தா, அதற்கு அர்த்தமே வேறு!"

"என்ன அர்த்தம்?"

"கணக்கு நேராகிவிட்டதுன்னு அர்த்தம்!"

"புரியும்படி சொல்லண்ணே."

"சொல்றேன். நீ யார் வீட்டு விசேஷத்துக்காவது போய், ஒரு பத்து ரூபாய் மொய் செய்வதா வச்சுக்கோ... அவர் உன் வீட்டு விசேஷத்துக்கு மொய்யாக, பதினொரு ரூபாய் எழுதி கணக்கை நேர் செய்துடுவார். வாங்கியதைத் திருப்பிக் கொடுத்த அடையாளக் குறியீடுதான் அந்த ஒரு ரூபாய்..."

"இப்ப புரியுதண்ணே! இந்த மெ(ா)ய்யான விவரம் சொன்னதுக்கு, இப்ப கணக்குல வித்தியாசப்படுற ஒரு ரூபாய் நானே போட்டு நேர் செய்யறேன்... கிளம்புங் கண்ணே" என்றான் குமார்!

இதுதான்யா உன் வேகம்!

தினம் காலையில் 'ஜாக்ங்' செய்யும் போது எவ்வளவு தூரம் ஓடியிருக்கிறீர்கள், என்ன வேகத்தில் ஓடினீர்கள், அப்போது எத்தனை டிகிரி வெயில் என



அனைத்தையும் இந்தக் கருவி பதிவு செய்து கொடுக்கும்.

- பாரீஸ் பார்த்தசாரதி

சிவராமனின் பெண் கல்யாணத்துக்கு மொய் கவருடன் சென்றவர்களுக்கு அங்கு ஒரு புதுமையான சங்கதி இருந்தது. மண்டபத்தில் எல்லோருக்கும் தெரியும்படியாக ஓர் உண்டியல் வைக்கப்பட்டு அதனருகில் 'பெண்ணின் பேருக்கு மொய் எழுதுபவர்கள் இந்த உண்டியலில் பணத்தைப் போட்டுவிடவும். தயவு செய்து தங்கள் பெயரையோ விலாசத்தையோ எழுத வேண்டாம். அப்படி எழுதி உள்ளே போடப்படும் மொய் பணம் அவருக்கே திருப்பியனுப்பப்படும். பெண்ணிற்கு வரும் மொய் பணம் அத்தனையும் அனாதை மற்றும் முதியோர் ஆசிரமங்களுக்கு அப்படியே அளிக்க இருப்பதை தெரிவித்துக் கொள்கிறோம்' என்று எழுதிய அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. கூடவே 'மைக்' மூலம் அறிவிக்கப்பட்டது.

இதைப் பார்த்தவர்களின் எண்ணங்கள் பல்வேறாக இருந்தன. புண்ணிய கோடிக்குச் சற்று சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆபிஸர் சிவராமன் தப்பாக எடுத்துக் கொள்வாரோ என்று பயந்து ஒரு கணிசமான தொகையை மொய் எழுத வேண்டியுள்ளதே என்று மூக்கால் அழுது கொண்டு வந்தவருக்கு இந்த அறிவிப்பு ஆறுதலாக இருந்தது. கவரைத் தூக்கி எறிந்துவிட்டு கையில் கிடைத்ததை உண்டியலில் போட்டு, பந்திக்கு விரைந்தார்.

தம் பையன் கல்யாணத்திற்கு அந்தக் காலத்தில் சிவராமன் மொய்யாகத் தந்ததை முருகேசன் அந்தப் பழைய நாற்பது பக்க நோட்டில் தேடி எடுத்து அதையே மொய்யாகத் திருப்ப நினைத்தார். ஆனால் அவர் பெண்டாட்டி விடவில்லை. மேலும் சிவராமன் அவர் பெண்டாட்டி வகை சொந்தமாதலால் விருப்பப்படாத ஒரு தொகையை கவரில்போட்டு மூஞ்சியைத் தொங்கப்போட்டுக் கொண்டு வந்தவருக்கு இப்படி இந்த

பொய்யும் மெய்யும்!

அகிலா கார்த்திகேயன்

உண்டியல் சமாசாரமே கல்யாணவிருந்தாக இருந்தது. இன்னார் இன்னது கொடுத்தது எனத் தெரியப்போகும் வாய்ப்பில்லாத நிலையில் அல்பமான தொகையை மொய்யாகப் போட்டார்.

கனகசபை ரொம்பவும் கண்ணியமாக தாம் சாப்பிட்ட காபி, டிபன் மற்றும் சாப்பாடு இத்யாதிக்கு இலைக்கு இத்தனை ரேட் என்று கல்யாண காண்டிராக்டரிடம் விசாரித்து அதில் எழுபது சதவிகிதம் தள்ளுபடி செய்து (தன் டேஸ்டுக்கு ஒத்துவராததால்) சுசில சில்லரைகளை மனமுவந்து உண்டியலில் மொய்யாக்கினார்.

கோயில் உண்டியலில் சேர்ப்பதுபோல சிலர் வெறும் ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய், ஒரு ரூபாய் நாணயங்களைப் போட்டது ஒருபுறமிருக்க, உண்டியல் இருக்கும் புறத்திற்குப் பலர் வராது ஒதுங்கினர்.

கல்யாண கூத்தெல்லாம் முடிந்து உண்டியல் உடைக்கப்பட்டது. சொற்ப நோட்டுகளும், சில்லரைக் குவியலுமாக இருந்ததை எண்ணிப் பார்த்தனர்.

"என்ன இது அநியாயமா இருக்கு. நான் சுமார் நாலாயிரம் வரும்னு நினைச்சேன். வெறும் ஆயிரத்து சொச்சம்தான் இருக்கு. அத்தனையும் வெறும் அஞ்சு, ஒண்ணுன்னு சில்லரையா வேறே" என்று சிவராமனின் மனைவி அலுத்துக் கொண்டாள்.

"அடி பைத்தியமே. இதுதான் உண்மையான 'மொய்'. ஒரு நோட் புக்கிலே பெயரை எழுதி இந்த மொய்யை வாங்கி இருந்தா, நூற்று ஒண்ணு, ஐம்பத்து ஒண்ணுன்னு தங்களோட மதிப்பைக் காப்பாத்திக்கவும், தலையெழுத்தேன்னு முணுமுணுத்தும் சில பேர் கொடுத்திருக்கலாம். அதிலே அந்த நூறு ரூபாய், ஐம்பது ரூபாயெல்லாம் அனேகமா மனசார கொடுக்கற தொகையா இருக்காது. கூடவே ஒரு ரூபாயையோ இரண்டு ரூபாயையோ சேர்த்து வைக்கறதுதான் சில சமயம் மனம் ஒப்ப கொடுக்கறதாய் இருக்கும். ஆக அந்த நூறு, ஐம்பதெல்லாம் 'பொய்', ஒரு ரூபாய் மட்டுமே 'மெய்' இரண்டும் சேர்ந்தா 'மொய்'... இப்போ இந்த உண்டியில் விழுந்ததுதான் மெய்... மனுஷங்களோட மனப்பான்மையைச் சோதிக்கத்தான் இப்படி ஒரு ஏற்பாடு செஞ்சேன்" என்றார் சிவராமன்.

சிவராமனின் மனைவி தலையில் அடித்துக் கொள்ளாத குறை!





● விஜயகுமார்

கமிஷனருக்கு கல்தா ஏன்?

''நிலையில்லாதது எது?'' என்று கேட்டால் தற்போதைய சூழலில் ''சென்னை மாநகராட்சியின் ஆணையாளராகப் பொறுப்பு வகிப்பதுதான்'' என்று தயக்கமில்லாமல் சொல்லலாம்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுபேற்றதி லிருந்து இதுவரை, சமீபத்தில் கல்தா கொடுக்கப்பட்ட கலைவாணன் உட்பட ஆறு ஆணையாளர்கள் பொறுப்பு வகித்துள்ளனர். இப்போது ஏழாவது ஆணையாளராக விஜயகுமார் பொறுப்பேற்றுள்ளார். புது ஆணையாளர் ஒரு கண்டிப்பான அதிகாரி என்று சொல்கிறார்கள். இது ஒரு பக்கம் இருக்க, கலைவாணன் ரிப்பன் கட்டடத்திலிருந்து வெளியே அனுப்பப் பட்டதற்கு நிறைய காரணங்கள் உலா வருகின்றன.

சென்னை மாநகரில் விளம்பரப் பலகைகள் வைப்பதில் பெரும் அளவு ஊழல் நடந்திருப்பதாகச் சொல்கிறார்கள். புது விளம்பரப் பலகைகள் வைக்கக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவு இருந்தபோதும், கடந்த ஒரு வருட காலத்தில் 230 விளம்பரப் பலகைகள் சட்ட விரோதமாக சென்னையில் வைக்கப்பட்டிருக்கின்றன.


விளம்பரப் பலகைகள் என்பது பணம் விளையாடும் உலகம். விளம்பரப் பலகை ஏஜெண்டுகள் ஒரு சதுர அடிக்கு 25 பைசா தான் மாநகராட்சிக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் விளம்பரம் செய்யும் கம்பெனிகளில் வாங்குவது ஒரு சதுர அடிக்கு மூன்று ரூபாய் முதல் நான்கு ரூபாய். இந்த விளம்பரப் பலகை உலகத்தில் தி.மு.க. புள்ளிகளின் ஆதிக்கம் அதிகம். இதை ஒழித்துக் கட்டுகிறேன் பேர்வழி என்று ஆணையரும், துணை மேயரும் களத்தில் குதிக்க, கைகளில் சேற்றை அப்பிக் கொண்டார்கள் என்பது மாநகராட்சி வட்டாரத்தில் பேச்சு. கடந்த ஒரு வருட காலத்தில் சட்ட விரோத விளம்பரப் பலகைகள் மூலமாக இரண்டு கோடிக்கு மேல் சிலர் 'சம்பாதித்'துள்ளார்களாம். மேயர் இல்லாத நிலையில் மேயர் மேம்பாடு நிதி முறைகேடு வேறாம்.

இது தவிர குப்பை அகற்றும் காண்ட்ராக்டர் ஒனிக்ஸ் நிறுவனத்துடன் கமிஷனர் மோத, துணை மேயர் அந்நிறுவனத்துக்கு வக்காலத்து வாங்கினார் என்றும் சொல்கிறார்கள். கலைவாணன் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்து அவரை கமிஷனராகப் போட்டார் ஜெ. துணை மேயரும், அவரும் சேர்ந்து நகரை மேம்படுத்துவார்கள் என்று கருதினார் அவர். ஆனால் அவர் எதிர்பார்ப்பு பொய்யாகிப் போனதாம். இதற்காக சமீபத்தில் துணை மேயரைக் கூப்பிட்டு கடிந்து கொண்டதாகவும், அவரிடம் ராஜினாமா கடிதம் வாங்கி வைத்துக் கொண்டதாகவும் கூட மாநகராட்சி வட்டாரத்தில் கிசு கிசுக்கிறார்கள். இறுதியாக, விளம்பரப் பலகை விவகாரம் கமிஷனருக்குக் கல்தா கொடுக்க காரணமாயிற்றாம். இப்போது விளம்பரப் பலகைகளுக்கு உரிமம் கொடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியாளருக்கு மாற்றப்பட்டுவிட்டது.

மாநகராட்சியில் விஜிலன்ஸ் அதிகாரி பொறுப்பில் இருந்த பாஷாவும் மாற்றபட்டிருக்கிறார். ஜெயலலிதா ஐதராபாதிலிருந்து திரும்பி வந்தவுடன் கார்ப்பரேஷனில் இன்னமும் 'கலக்கல்கள்' இருக்கும் என்று ரிப்பன் பில்டிங் வட்டாரம் சொல்கிறது.

- சஞ்சயன்

படம் : ராஜன்



ஜெ.அரசின் 'சாதனை', தமிழகத்துக்குச் சோதனை!

அ.தி.மு.க.வின் இரண்டாண்டு ஆட்சி குறித்து புகழ்பாடி, சில நாளிதழ்கள் பத்தி பத்தியாக எழுதித் தள்ளுகின்றன. பதிலுக்குப் பக்கம் பக்கமாக விளம்பரங்களும் பெறுகின்றன.

போதாக்குறைக்கு, அரசின் சாதனைகளை விவரிக்கும் அரசாங்கப் பத்திரிகையான 'தமிழரசு', அறிவொளி இயக்கம் என்ற பெயரில் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் வினியோகிக்கப்படுகிறது.

இதுவும் காணாதென்று, அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறை, "தமிழக அரசின் சாதனைகளைப் பாரீர் பாரீர்" என்று நாளேடுகளில் விளம்பரம் செய்வதுடன், டி.வி. நிலையங்களுக்கு வீடியோவும் வினியோகம் செய்கிறது. இதற்கெல்லாம் மக்களின் வரிப்பணம் புழுதி போல் வாரி இறைக்கப்படுகிறது. (தண்ணீராக அல்ல; அதற்குத்தான் தட்டுப் பாடாயிற்றே!)


எந்த ஆட்சியிலும் சில வழக்கமான காரியங்கள், அபிவிருத்திப் பணிகள் நடைபெறவே செய்யும். அதற்காகத்தான் வரி வசூல் செய்வதும், பட்ஜெட் போடுவதும், செலவழிப்பதும். ஆனால், இவை சாதனைகள் ஆகிவிடாது. சாதனை என்பது இந்த சராசரிப் பணிகளிலிருந்து மேம்பட்டு உயர்ந்து நிற்க வேண்டும்; அல்லது குறைந்தபட்சம் லஞ்ச ஊழல் அற்ற, சட்ட ஒழுங்குக்குப் பழுதில்லாத நல்லாட்சியாகவாவது இருக்க வேண்டும். அத்தகைய சாதனை ஏதேனும் இந்த இரண்டாண்டுகளில் நடந்திருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும்.



கல்கி

2003 மே 25
சுபானு வைகாசி 11
மலர் : 61
இதழ் : 43

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



இன்றைய தமிழகத்தின் நிலைமை என்ன...?

தலைநகரில் தினந்தோறும் கொலை, கொள்ளைகள் ;

மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள் வேலை நிறுத்தம் ;

அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் ;

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத்திலும் நெல் கொள்முதல் கொள்கை குறித்தும் அதிருப்தி ;

தொழில்துறையில் தேக்கம் ;

அத்தியாவசியப் பண்டங்கள் கிடுகிடு விலை உயர்வு ;

பருவமழை பொய்த்ததால் விவசாய உற்பத்தியில் பாதிப்பு ;

காவிரிப் பிரச்னை தொடர்கிறது ;

கிருஷ்ணா நதி நீரும் கிடையாது ;

அமைச்சரவை மாற்றங்கள், அதிகாரிகள் பணிமாற்றம் ஆகியன மிக அதிகமாக நடைபெற்று அதிகாரிகள் - அமைச்சர்களைச் செயல்பட விடாமல் தடுக்கிறது.

இவற்றையெல்லாம் விமர்சிக்கும் பத்திரிகைகள் மீது மான நஷ்ட வழக்கு தொடரப்படுகிறது!... பதினான்கு வழக்குகள் போடப்பட்டு நிலுவையில் உள்ளன!

இந்த ஆட்சியை நல்லாட்சி என்று எவ்வாறு ஒப்புக் கொள்வது?

எழுபத்தைந்து நிமிடங்களில் 12 மசோதா திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றுவது எவ்வாறு ஜனநாயகமாகும்? சட்டங்களைக் காட்டிலும் சட்டத் திருத்தங்கள் முக்கியமானவை. அரசுக்கு ஏற்கெனவே தரப்பட்டுள்ள அதிகார பலத்தை அவை கூட்டப் போகின்றன. எனவே அனைத்துக் கட்சியினரும் விவாதித்தல்லவா முடிவெடுக்க வேண்டும்! ஆனால் திருத்தங்கள் விவாதத்துக்கே இடமின்றி நிறைவேற்றப்படுகின்றன.

போதாத குறைக்கு, சி.ஏ.ஜி. எனப்படும் தணிக்கைக் குழுவின் அறிக்கை, அரசு கணக்கு வழக்குகளைப் பரிசீலித்து, ஏகப்பட்ட முறைகேடுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

என்ன மாதிரி முறைகேடுகள்..? காவல்துறை கட்டுப்பாட்டு அறை ஒன்று கட்டுவதற்கு அனுமதி



வழங்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பொருத்த வேண்டிய மின்னணு சாதனங்களை எல்காட் நிறுவனத்திடம் வாங்க முடிவு செய்யப்பட்டு, உரிய தொகையான 1.27 கோடி ரூபாய் அந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், கட்டுப்பாட்டு அறைதான் கட்டி முடிக்கப்படவில்லை! எப்படி இருக்கிறது கதை!

சி.ஏ.ஜி.யின் கண்டனங்கள் வரிசையில் மாநகரப் போக்குவரத்துக் கழகமும் சென்னை மாநகராட்சியும்கூட இடம் பெற்றிருக்கின்றன. மாநகரப் போக்குவரத்துக் கழகச் செயல்பாட்டின் மெத்தனம் காரணமாக, ஒப்பந்தங்கள் நிறைவேற்றுவதில் தாமதமும், விளைவாக 89 லட்சம் ரூபாய் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஏற்கெனவே பெருநஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்க, இப்படிப்பட்ட அனாவசிய செலவுகளும் நஷ்டங்களும் அவற்றின் சுமையை மேலும் அதிகரிக்கின்றன.

சென்னை மாநகராட்சியோ நகரின் கேபிள் டி.வி. ஆபரேடர்களின் மொத்த எண்ணிக்கையை முறையாகக் கணக்கிடாததால் 51.84 கோடி ரூபாய் நஷ்டமடைந்துள்ளது. ஜூலை 2002 வரையில்தான் இந்தக் கணக்கு. அதன்பின் இன்னும் எத்தனை கோடியோ...!

சி.ஏ.ஜி. அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கும் இந்த முறைகேடுகள், பண விரயம், யாவுமே ஜெயலலிதா ஆட்சியில் மட்டுமே நடந்துவிடவில்லை. சில முறைகேடுகள் முந்தைய ஆட்சியிலேயே தொடங்கி இருக்கலாம்.

அவ்வாறாயினும் இன்றைய ஒட்டு மொத்தமான சீரழிவுக்கு அ.தி.மு.க. ஆட்சியே பெருமளவில் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

நிதி நிர்வாகம்தான் மோசம் என்பதில்லை; பிற துறைகளிலும் எடுத்தேன் கவிழ்த்தேன் நடவடிக்கைகள் அழுந்தப் பதிகின்றன. (உதாரணம் : ராணி மேரி கல்லூரி விவகாரம்)

பத்திரிகை, டி.வி. விளம்பரங்கள் மூலம் மக்களை மயக்கலாம்; ஆட்சியின் குறைபாடுகளைத் திரைபோட்டு மறைக்கலாம் என்ற எண்ணம் பலன் தராது. இன்றைய மாலை மயக்கம், நாளைய நேரடி அவஸ்தையின்போது இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும். வெறுப்புதான் ஓங்கி நிற்கும். நல்லாட்சியை மெகா சீரியல் மூலம் வழங்க முடியாது. ●



சண்டியரால் சாதிக் கலவரம் வருமா?

'நள தமயந்தி' படத்தில் பாலக்காட்டு சமையல்கார இளைஞராக வருகிறார் மாதவன். நட்சத்திர ஓட்டல் செஃப் கணக்காய் அவர் தோசை சுடும் ஸ்டைலைப் பார்த்துவிட்டு, "நிஜத்தில் சமையல் தெரியுமா?" என்றதும், படபடவென்று பதில் சொன்னார்.

"சமையல்காரராக நடிக்கத்தான் தெரியும். ஆனால், தோசை மட்டும் சூப்பராய் வரும். மெல்போர்ன் நகரில் ஷூட்டிங் பார்க்க நல்ல கூட்டம். நான் பாட்டுக்கு 'தோசை... தோசை... டேஸ்ட்டி தோசை... யாருக்கு வேணும்?' என்று கேட்டு, தோசை சுட்டு, விநியோகிக்க ஆரம்பித்துவிட்டேன். டைரக்டர் மௌலி கொஞ்சம் டென்ஷாகி, 'அப்பா மாதவா! ஷாட் எடுக்கிறபோது தோசை வார்க்க மாவு வேணும். நீ பாட்டுக்கு தோசைமாவைக் காலி செய்துவிட்டால், அப்புறம் திடீரென்று தோசைமாவுக்கு எங்கே போவது?' என்று என்னைக் கண்ட்ரோல் பண்ணவே, கனத்த மனத்துடன் என் இலவச தோசைத் திட்டத்தைக் கைவிட வேண்டியதாகிவிட்டது."

"உங்கள் தோசையைச் சாப்பிட்டு, யாருக்கும் எதுவும் ஆகிவிடவில்லையே!" என்று மாதவனை நக்கலடித்தால். "ம்... நேற்றுகூட என் தோசை சாப்பிட்ட ஒருவர் டெலிபோன் பண்ணி, என்னுடன் பேசினார். ஆஸ்திரேலியாவிலிருந்துதான் சார்! சொர்க்கத்திலிருந்து இல்லை!" என்று பதிலுக்கு நக்கலடித்தார்.

தோசை விஷயத்தை மட்டும் கேட்டுவிட்டு, சாப்பாட்டு ராமன் போல் திரும்ப முடியுமா? இலேசாக சர்ச்சையைக் கிளப்பினால்தானே, சாதா தோசையை மசாலா தோசையாக்க முடியும்? அருகிலிருந்த கமலைக் கிண்டினோம். "'சண்டியர்' படம் அரிவாள் கலாசாரத்தைத் தூண்டிவிடும். சாதிக் கலவரம் வரக் கூடும் என்று எதிர்ப்பு தெரிவித்திருக்கிறாரே டாக்டர் கிருஷ்ணசாமி" என்று கேட்டோம்.

"எனக்கு எந்த அளவு அரசியலைப் பற்றித் தெரியுமோ, அந்த அளவுக்குத்தான் கிருஷ்ணசாமிக்கு என் படத்தின் கதையைப் பற்றித் தெரியும். யாராவது, சாதிக் கலவரத்தைத் தூண்ட வேண்டும் என்பதற்காகப் படம் எடுப்பார்களா? சினிமாவுக்கு 'அமர்' என்றோ, 'அக்பர்' என்றோ, அல்லது 'அந்தோணி' என்றோ பெயர் வைத்தால், எங்கே மற்ற மதத்தினர் பார்க்க வரமாட்டார்களோ என்ற கவலையில் எல்லாத் தரப்பினரும் படம் பார்க்க வேண்டும் என்பதற்காக 'அமர், அக்பர், அந்தோணி' என்று பெயர் வைப்பவர்கள் சினிமாக்காரர்கள். எதிர்ப்பு தெரிவிப்பவர்கள்கூட, இந்தப் படத்தைப் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் 'சண்டியர்' படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்றார் கமல்.

- மௌலி

ஸ்வீட்டோ ஸ்வீட்!

* சிறப்பு பிரசவ அறை





முன்பெல்லாம், அதாவது அரை நூற்றாண்டுக்கு முன்பு, வீட்டில்தான் பிரசவம் நடக்கும். மருத்துவ வசதி இல்லாதது முக்கிய காரணம் என்றாலும், அந்தப் பெண்ணுக்கு, பாதுகாப்பாக வீட்டில் தான் இருக்கிறோம். அக்கம் பக்கம் உறவினர்கள் இருக்கிறார்கள் என்ற தெம்பும் தைரியமும் இருக்கும். ஆனால் இப்போதெல்லாம் அப்படியல்ல. கருத்தரித்த உடனேயே ஆஸ்பத்திரியில் போய் பதிவு செய்து கார்டும் வாங்கிக் கொள்கின்றனர்.

முதலில் ஒரு வார்டு. வலி எடுத்தவுடன் லேபர் ரூம், (இங்கு எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் ஆகலாம்) பிரசவித்தவுடன் வேறொரு ரூம், குட்டிப் பாப்பாவை இன்குபேட்டரில் வைத்தால் அதற்குத் தனி ரூம். இப்படி ரூம் ரூமாக மாடிக்கும் கீழுமாக தட்டாமாலைதான்.

உறவினர்கள் படும் அவஸ்தைகள் ஏராளம். "லேபர் ரூமுக்குக் கொண்டு போயிருக்கா. விஷயமே தெரியல்லையே, தாயுமானவா... காப்பாத்து" என உருகி வேண்டிக் கொண்டவாறே, கடந்து போகும் ஒவ்வொரு நர்ஸ் முகத்தையும் கவலை + ஆவல் பொங்க பார்க்கும் பெற்றோர். பாவம் என்ன தவி தவிக்கிறாளோ'? என வெளியில் பகிரங்கமாக சொல்லக் கூச்சப்படும் கணவன். உறவினர் கூட்டம் அதிகமாக நின்றால் "இங்கென்ன கூட்டமா? முக்கியமா இரண்டு பேரு இருங்க. மத்தவங்க போகலாம்' என நிர்வாகம் விரட்டியடிக்கும்.

பிரசவித்த ஒரு வாரத்துக்கு ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் காபி, சாப்பாடு துணிமணி... என, பஸ், ஆட்டோ பிடித்து படும் இம்சை இருக்கிறதே... (அதுக்கு பிரசவ வலியே தேவலை என்கிறார் ஒரு தாய்க்குலம்).

இத்தனை பிரச்னைகளுக்குமே தீர்வு சொல்லியிருக்கிறது பெங்களூர் ஜெயநகரிலிருக்கும் சாகர் அப்போலோ மருத்துவமனை.

வெளிநாட்டில் மட்டுமே இருந்து வருகிற 'பர்திங் ஸ்வீட்ஸ்' (சிறப்பு பிரசவ அறை) இந்திய மருத்துவமனைகளில் முறையாக... பெங்களூரில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.



* பர்திங் ஸ்வீட்

ஒரு பெரிய ஹால், உறவினர் தங்க ஒரு பெட்ரூம், கர்ப்பிணிப் பெண்ணுக்கென மிகப் பெரிய ரூம், கிச்சன், அதி நவீன டாய்லெட்டுகள், என ஐந்து நட்சத்திர ஹோட்டல் கணக்காக ஜொலிக்கிறது.

சோபா செட்கள், கட்டில்கள், டீ.வி. ஸ்டீரியோ, டிவிடி, ஃப்ரிஜ், கம்ப்யூட்டர்

(இன்டர்நெட் வசதியுடன்) கேஸ், மைக்ரோஅவன், ஷோகேஸ்கள், டேபிள்கள், என அத்தனை வசதிகளுடனும் சுமார் 15 லட்ச ரூபாய் செலவில் நிர்மாணித்திருக்கிறார்கள்.

கர்ப்பிணிப் பெண்ணிற்கென தரப்பட்டிருக்கும் படுக்கை, அவளுக்கு வலி எடுத்தவுடன் லேபர் டேபிளாக மாறுவது மாயாஜாலம். மேல் நாட்டைப் போலவே கணவன் அல்லது நெருங்கிய உறவினர்கள் கூட இருக்கலாம். இதனால் பேறு காலத்தில் மனோரீதியாக ஒரு பெண்ணுக்கு பலம் கிடைக்கிறதாம்.

வலியற்ற பிரசவம் (லேபர் அனல்ஜெஸியா) என்ற முறையும் இங்குண்டு. தேர்ச்சி பெற்ற நர்ஸ் எப்போதுமே கூடவே இருக்கிறார். கவுன்சலிங் கொடுக்கிறார். வீட்டைப் போல சௌகர்யம், ஆஸ்பத்திரியின் பாதுகாப்பு இரண்டுமே ஒரு சேரக் கிடைக்கும் என்கிறார்கள்.

இந்தச் சிறப்பு அறை, நார்மல் பிரசவத்துக்கு மட்டுமே மூன்று நாட்களுக்கு கால் லட்சம் கட்டணம். இப்போதெல்லாம் அலுவலகத்தில் கணவன் மனைவி இருவருக்குமே பிரசவக் கட்டணம் கொடுத்து விடுவதால், பணமெல்லாம் பிரச்னையே இல்லையாம்.

இனி ஒவ்வொரு ரூமாக ஓட வேண்டாம். பிரசவம் எப்படி நடக்கிறதோ, ஒரு சேதியும் தெரியவில்லையே என தாய் அரற்ற வேண்டாம், ஆபிஸில் தலைபோகிற வேலை, டயத்தில் முடிக்க வேண்டும் என சாஃப்ட்வேர் கணவன்கள் கவலைப் பட வேண்டாம் (அங்கேயே நெட்டில் பட்டென்று முடிக்கலாம்) 'மெட்டி ஒலி', 'அலைகள்' பார்க்க முடியவில்லையே என தாத்தா பாட்டி (ஏன்-கர்ப்பிணி பெண் கூட) ஆதங்கப்பட வேண்டாம்.

எல்லாம் ஒரே ரூமில்... "பர்திங் ஸ்வீட்ஸ்... ஸோ ஸ்வீட்.!" என்கிறார்கள் பலனடைந்தவர்கள்.

- லதா சேகர்

இடையை மாற்று!

உடையை மாற்றுவது போல் இடையை மாற்றும் அறுவை சிகிச்சை புதுடெல்லியிலுள்ள ஆர்மி ரிசர்ச் மற்றும் ரெஃபரல் மருத்துவமனையில் சமீபத்தில் நடந்தது. நடத்தியவர் ரோபோ!

இடை மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமை ஊர்மிளா தேவிக்குக் கிடைத்திருக்கிறது.


ஐந்து வருடங்களுக்கு முன்பு பிறந்த முதல் குழந்தை பிறந்ததையடுத்து இடுப்பில் உருவான வலி அப்படியே படிப்படியாக விசுவரூபமெடுக்க, இதற்கான தீர்வாக மார்ச் மாத கடைசி வாரத்தில் நடைபெற்ற இடை மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இந்த செயற்கை மாற்று உறுப்பு சரிவரப் பொருத்தப்பட்டால் இந்த இடை மாற்ற உறுப்பு பதினைந்திலிருந்து இருபது வருடங்களுக்கு தாக்குப் பிடிக்குமாம். ரோபோவின் உதவி கொண்டு பொருத்தப்படும் இந்த ரோபோடாக் ப்ராஜக்ட் ஐந்து கட்டங்களாக பதினாறு வருடங்களுக்கு யு.எஸ். மற்றும் ஜெர்மனியில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே இப்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

ஹிப் ஹிப் ஹுர்ரே!

செய்தி : 'தி வீக்'

- சுறுசுறுப்புத் திலகம்



• ஊர்மிளா

★ 200-க்கும் மேற்பட்ட எமது இலக்கிய வெளியீடுகள் ★



புதுமைப்பித்தன் கதைகள் *(103 கதைகளின் முழுத் தொகுதி)*

பக்கம்: 768 விலை: ரூ. 275/-

புதுமைப்பித்தன் மொழிபெயர்த்த உலக இலக்கியம்

பக்கம்: 496 விலை: ரூ. 200/-



வ. உ. சி. நூல் திரட்டு *(13 நூல்களின் முழுத் தொகுதி)*


தொகுப்பு : பேராசிரியர் வீ. அரசு

பக்கம்:848 விலை: ரூ. 300/-



வண்ணதாசன் கதைகள் *(117 கதைகளின் முழுத் தொகுப்பு)*

பக்கம்: 960 விலை: ரூ. 375/-



வண்ணநிலவன் கதைகள் *(88 கதைகளின் முழுத் தொகுதி)*

பக்கம்: 688 விலை: ரூ. 250/-

க. நா. சு.மொழிபெயர்த்த உலக இலக்கியம்

(நாவல்களும் சிறுகதைகளும்)

பக்கம்: 624 விலை: ரூ. 250/-



புதுமைப்பித்தன், அறிஞர் அண்ணா, தாகூர், தாஸ்தாயெவ்ஸ்கி, வெ. சாமிநாதசர்மா, வண்ணதாசன், வல்லிக்கண்ணன், சக்கரியா, வைக்கம் முஹம்மது பஷீர், எம். டி. வாசுதேவன் நாயர், வேல ராமமூர்த்தி, அகிரா குரோசாவா, ஆர்சன் வெல்ஸ், விக்ரமாதித்யன், கந்தர்வன், தத்துவமேதை டி. கே. சீனிவாசன், ஜாக் லண்டன், இவான் துர்கனேவ், ஜோர்ஜ் லூயி போர்ஹே, எம். முகுந்தன், சத்யஜித் ரே, எர்னெஸ்ட் ஹெமிங்வே, ஸ்டீபன் க்ரேன், தாமஸ் மன், விபூதி பூஷண் வந்த்யோபாத்யாய, ஆஸ்கார் ஒயில்ட், ஜான் ஸ்டீன்பெக், ஆர்பெர் காம்யு ஆகியோரின் படைப்புகள் கிடைக்கும்.

சென்னையில் - லேண்ட் மார்க், ஒடிசி, ஹிக்கின்பாதம்ஸ்,
நியூ புக் லேண்ட்ஸ் மற்றும் என்.சி.பி.ஹெச் அனைத்து கிளைகளிலும்
விரிவான விலைப்பட்டியலுக்கு...

புதுமைப்பித்தன் பதிப்பகம்

சந்தியா பதிப்பகம்

52 , முதல் தளம், நான்காவது தெரு, அஞ்சுகம் நகர்,
அசோக் நகர், சென்னை - 600083.
தொலைபேசி : 044 - 24899968 / 24896979 / 55855704 / 31045211

இல்லை, இட ஒதுக்கீடு!

சலுகையின்றி, செல்வாக்கால் முதலிடம் பிடித்த மும்பை அம்மணிகள்!

007 காதலி

'நீ அழகி என்ற உணர்வே இல்லாதபோது, இன்னும் அழகாக இருக்கிறாய்' என்று சும்மாவா சொன்னார்கள்? எல்.கே.ஜி.யில் இருக்கும்போதே, தன்னை ஏன் யு.கே.ஜி. பையன்கள் சுற்றி வந்து, கன்னத்தைத் தொட்டு 'ஸோ க்யூட்' என்கிறார்கள் என்று புரியாமல் வளர்ந்ததால்தான், பின்னாளில் உலக அழகியாய் ஆனாரோ?



• ஐஸ்வர்யா.....

பெயரும்தான் 'சிக்'கென்று பொருந்துகிறதே? நிறைய பேருக்கு பங்களா, கார் வசதி இருக்கலாம். ஆனால் மும்பையின் போயஸ்ஸான 'கார்'ல் பெரிய பங்களா (அதுவும் ராம் 'லஷ்மி' நிவாஸ்), வாயிலில் பதினொரு 'கார்'கள், பாதுகாப்புக்குப் பூனைப் படை, வைர நகை விளம்பரம் மூலம் விளம்பரம் என்றிருப்பவருக்கு 'ஐஸ்வர்யா' என்று பெயர் வைத்தது 'யஹி ஹை ரைட் சாய்ஸ் பேபி' பாட வைக்கிறதே? பின்னாளில் அவரும் அதற்கு 'ஆஹா' என்றார் என்பது வேறு கதை.

ஆர்க்கிடெக்சுரல் இஞ்சினியரிங்கின் நஷ்டம் பாலிவுட்டின் லாபமாகி, கோலிவுட்டின் கோலாகலமானது தெரிந்த கதை. தற்சமயம் கோலிவுட்டிலும் களை கட்டி வருவது புதுக் கதை. ரிது பர்னோ சென்னின் 'சோகர் பாலி'க்காக குரலை மட்டும் இரவல் வாங்கிக் கொண்டு, மற்றபடி 'ஒரிஜினல் வங்காளியாகியிருக்கிறார். 'காக்கி' யூனிஃபார்ம் கார அமிதாப், அக்ஷய்யுடன் ஆடிப் பாடிய கையுடன் ஹாலிவுட்டை 'இன்வேடர்ஸ்' மூலமாக முற்றுகையிட்டிருக்கிறார். ஜேம்ஸ் பாண்டின் காதலி விஷயம்தான் இன்னும் மீடியா மசாலாகவாவே இருக்கிறது. தன் ஏஜெண்ட்டுகளை விட்டுத் துப்பறியச் சொல்லி இருக்கிறார். கான் (Cannes) திரைப்பட விழா



• டினா முனிம்

ஜுரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது 'வைரக் கிரீடம்' சூட்டிக் கொண்டிருப்பது போல என்கிறார். சல்மானுடன் உல கறிய டூயட் பாடிவிட்டு, அப்புறம் 'டூ' விட்டு, அவர் உறவுடன் தம் காலையும் முறித்துக் கொண்டது, 'வைரக் கிரீடம்' சூட்டிக் கொண்டது போல என்கின்றனர் விசிறிகள். காலைப் பிடித்த சனியன் நீங்கிவிட்டதென்று 36 நாள் ரெஸ்ட்டுக்குப் பிறகு 'க்யோன், ஹோகயா நா?" என்று விவேக் ஒபிராயுடன் டூயட்பாட வந்துவிட்டார்.



• நைனா - மீரா

அம்மா கதை எழுத, அண்ணா ஆதித்யா இயக்க, ஒரு 'ஹோம் ப்ரொடக்ஷனுக்கும் தயாராகிவிட்டார். ஆனால் ஹைதராபாத் ஜோசியர் அனிதா ராஜ் நாராயண், இந்த வருட இறுதிக்குள் ஐஸ்வர்யா, சல்மானைத் திருமணம் செய்து கொண்டு விடுவார் என்று சொல்லியிருப்பது பலித்துவிட்டால்?... எல்லோரும், 'க்யோன், ஹோகயா நா?' என்று 007 உதவியுடன் துப்பறிய வேண்டியதுதான்.



• சோஹா அலிகான்

மாமனார் மெச்சிய மருமகள்



• ஸ்மிதா தாக்கரே

மாமனார் அரசியல்வாதியாக இருந்தால், அவருக்கு ஆரத்தி சுற்றி திலகமிடுவதுடன் பல மருமகன்கள் கதை முடிந்துவிடும். ஆனால் ஆரத்தி சுற்றி மாலையிடும் நிலைக்குத் தம்மையும் உயர்த்திக் கொண்டிருப்பவர் ஸ்மிதா தாக்கரே - பால் தாக்கரேயின் மருமகளேதான்! சாதாரண மிடில் கிளாஸ் சூழலில் வளர்ந்தவர்தான். தாக்கமிக்க தாக்கரே குடும்பத்தில் அடி எடுத்து வைத்தவுடன், முதலில் ப்யூட்டி பார்லர் ஆரம்பித்தார். அப்புறம் சினிமா தயாரிப்பில் இறங்கினார். அடுத்து, 'முக்தி ஃபவுண்டேஷன்' எனும் அமைப்பை, எய்ட்ஸ் நோயாளிகளுக்கு உதவும் வகையில் தோற்றுவித்தார். சினிமா தொடர்புகளை வைத்துக் கொண்டு, நிறைய கலை நிகழ்ச்சிகளை நடத்தி, நிதி திரட்டி, சமூக சேவையில் தம்மை ஐக்கியப் படுத்திக் கொண்டுள்ளார். தற்சமயம், இந்தியத்

திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார். தயாரிப்பாளர்கள், தங்கள்பட உரிமைகளை ஓராண்டுக்குள் டீ.வி. சானல்களுக்கு விற்கக் கூடாது என்ற விநியோகஸ்தர்களின் கோரிக்கையை, ஏற்க மறுக்கிறார். இன்றிருக்கும் நிலைமையில், படத் தயாரிப்பாளர்களுக்கு ஏற்பட்டு வரும் கஷ்ட நஷ்டங்களை எடுத்துச் சொல்லி, விநியோகஸ்தர்களின் கோபத்தைத் தணிக்கப் பார்க்கிறார். நவராத்திரி விழா சமயங்களில் டாண்டியா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி ஓரிரு வார்த்தைகள் குஜராத்தியிலும் பேசுவார். அரசியலில் 'அஃபிஷியலாக' அடி எடுத்து வைக்கவில்லை. மாமனாருக்கு உதவும் வகையில், 'ஜெய் மஹாராஷ்ட்ரா' போடுவதோடு சரி.

புலிக்குப் பிறந்தது

அப்பாவோ இந்திய கிரிக்கெட் புலி. அம்மாவோ இந்தியத் திரை உலகில், திறமையுடன் அழகும் போட்டி போட்டுக் கொண்டு மோதும் பெண் புலி. புரிந்துவிட்டதா சோஹா அலிகான் யாரென்று? நம் மன்சூர் அலிகான் படௌடிக்கும், ஷர்மிளா டாகூருக்கும் பிறந்த மகள்தான். இந்த அழகுக் குயிலின் வாயிலில், வெற்றிலை பாக்குத் தட்டுடன் காத்திருக்கும் பாலிவுட் தயாரிப்பாளர்களின் கூட்டத்துக்குப் பஞ்சமில்லை. போதாக் குறைக்கு அண்ணன் ஸயிஃப் அலிகான், அண்ணி அமிர்தாசிங் இருவர் உடலிலும் பாலிவுட் இரத்தத்துக்குக் குறைச்சலில்லை. இவர்களுடனேயே சோஹா வசிக்கும்போது 'இரத்த பாசம்' தலைகாட்டாமலிருக்குமா? ஆனால் அதிசயமாக, சோஹாவுக்கும் சரி, அவர் தங்கை சபாவுக்கும் சரி (டில்லியில் பெற்றோருடன் வசிக்கிறார்.) திரையுலகில் நாட்டமேயில்லை.


சபா, ஜுவல்லரி டிசைனிங் செய்கிறார் என்றால், சோஹா பொருளாதார நிபுணி. சிடி பாங்கில் பணி புரிகிறார். சில விளம்பரப் படங்களில் அப்பாவுடன் தலை காட்டியிருப்பது என்னவோ உண்மைதான். இன்னும் அம்மா வழியில் முழு மூச்சுடன் இறங்கவில்லை. சினிமா ஆஃபர் ஒன்றும் அவ்வளவு 'கவர்ச்சி'யாக இல்லையாம்! பார்க்கும் வேலையே பிடித்திருக்கிறதென்கிறார். ஆமாமாம். பொருளாதாரத்தைக் காட்டிலும் கவர்ச்சியான விஷயம் உலகில் வேறென்ன இருக்க முடியும்?

இரு மலர்கள்

ஒரே வருடத்தில் பிறந்து, ஒரே பள்ளியில் படித்து, ஒரே சமயத்தில் மேற்படிப்புக்கு ஹார்வர்ட் சென்று, ஒரே நேரத்தில் மணந்தது (ச்சீ. ஒரே மனிதனை என்று எங்கே சொன்னோம்?) பெரிசில்லை. ஆனால் ஒரே காலத்தில் முதல் திருமணம் முறிந்து, கணவரை டைவோர்ஸ் செய்து, இரண்டாம் திருமணம் முடித்து, குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதென்பது அதிசயம் தான்.

ஒருவர் நம் நாட்டின் முன்னணி முதலீட்டு வங்கியாளர் மற்றவர் முன்னணி

சர்வதேச



"எத்தனையோ கலைவல்லுநர்கள் இருக்க, ஐஸ்வர்யாராயை, 'கான்' திரைப்பட விழாவுக்கு, நடுவராகத் தேர்ந்தெடுத்தது வெறும் பப்ளிசிட்டிக்காகவா?" என்று யூகி சேதுவிடம் கேட்டபோது...

"கிளாமருக்காக மட்டுமே என்று சொல்லிவிட முடியாது. ஆனால் அதுவும் ஒரு காரணம். சர்வதேசப் புகழ் பெற்று விளங்கும் கலைத் துறைப் பிரபலங்களை

இயக்குனர். ஆசிய அளவில் மூன்றாவது இடத்தையும் உலகளவில் 'முதல் 15 டாப் பிஸினஸ் பெண்மணிகளில் ஒருவர்' என்ற பெருமைமிக்க இடத்தையும் முதலாமவர் பிடித்திருக்கிறார் என்றால் இரண்டாமவர் தமது முதல் படமான 'சலாம் பம்பாயி'ல் துவங்கி, அண்மையில் 'மான்சூன் வெட்டிங்' வரையில் தான் என்ன... ஆஸ்கர் நாமினேஷன் என்ன என்று உலகையே கலக்கிக் கொண்டிருக்கிறார். இப்போது புரிந்து கொண்டிருப்பீர்களே. நாம் குறிப்பிடுவது நைனாலால் கித்வாயையும் மீரா நாயரையும் தான்.

பள்ளிப் பருவத்தில் 'ஸ்கூல் காப்டன்' பதவிக்கு இருவரிடையேயும் போட்டி இருந்ததாம். வென்றவர் நைனாதான்! மீரா மனம் தளராமல் எழுத்து, நாடகம் என்று தமது திறமையை வளர்த்துக் கொண்டு, 'மான்சூன் வெட்டிங்'கில் நைனாவின் மகள் கெமையாவுக்குப் பிரதான பாத்திரம் அளித்திருக்கிறார். மீரா மகன் ஜோஹ்ரானும் கெமையாவும் நல்ல நண்பர்கள். கணவர்கள் முகமதும் ரஷீதும் அப்படியே! மீரா நைனா நட்புக்கு வயசு 30 ++++...

கௌரவம்!

மட்டுமே நடுவராகத் தேர்ந்தெடுப்பது 'கான்' ஃபிலிம் ஃபெஸ்டிவல் வழக்கம்.

சர்வதேசக் கலைத் தூதராக ஓர் இந்தியர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதன் முறை. இயக்குநர் சத்யஜித்ரேயை இந்த விழாவுக்கு அழைத்து 'லீஜன் ஆஃப் ஆனர்' பட்டம் கொடுத்து கௌரவித்திருக்கிறார்கள். ஆனால் ஜூரியாகப் பணியாற்ற அழைக்கப்படவில்லை. அந்த வகையில் ஐஸ்வர்யாவுக்கு இது மிகப் பெரிய கௌரவம்.

'தேவதாஸ்' படம் 'கான்' திரைப்பட விழாவில் திரையிடப்பட்டதும், ஐஸ்வர்யாமீது சர்வதேச கவனம் ஒட்டு மொத்தமாகத் திரும்பியது. இதுவும் ஒரு முக்கிய காரணம்.

தேர்வுக் கமிட்டியின் ஆதரவோடு புதிய பதவியில் ஐஸ்வர்யா ஜமாய்த்து விடுவார் என்றே நம்புகிறேன்."

'பெரிய' இடத்துப் பெண்

மஹா பெரிய குடும்பம். ஒன்பது சகோதர சகோதரிகளின் கடைக் குட்டியாகப் பிறந்தவருக்கு மும்பையின் மாபெரும் தொழிலதிபரின் குடும்பத்தில் மருமகளாகப் போகும் அதிர்ஷ்டமடிக்கும் என்று யார் கண்டார்கள்? வெறும் 'டினா'வாக ஓடியாடியவர், விளையாட்டாக, 'ஃபெமினா மிஸ் டீன்' போட்டியில் கலந்து கொள்ள, நிஜமாகவே க்ரீடம் கிடைத்து விட்டது. ஃபாஷன் டிசைனிங் பண்ண வேண்டுமென்று நினைத்தவரை, தேவ் ஆனந்திடமிருந்து வந்த சினிமா வாய்ப்பு திசை திருப்ப, 'தேஷ் பர்தேஸ்' மூலமாக டினா முனிம் என்ற தாரகை திரை வானுக்குக் கிடைத்தது.

அமெரிக்கா சென்றிருந்தபோது, அம்பானியின் இளைய மகன் அனிலுடன் சிநேகிதம் ஏற்பட்டது. மூன்று வருட மௌனக் காதலுக்குப்பின் ஒரு நாள் டினா முனிம் டினா அம்பானி ஆனதை மீடியா மகிழ்ச்சியுடன் கொண்டாடியது.

இன்று, ஜெய் அன்மோல், ஜெய் அன்ஷுல் என்ற இரண்டு சிங்கக் குட்டிகளுக்குத் தாயாகிப் பூரித்து நிற்பவரை, ஒரு முறை மாமனாரும் மாமியாரும் ஆப்ரிக்க 'லயன் ஸஃபாரிக்கு' அழைத்துச் சென்றிருந்தனராம். அங்கிருந்த சிங்கம் ஒன்றைச் சுட்டி, "உன் கணவனை நீ சிங்கமாகக் கருதுகிறாயா?" என்றாராம் மாமனார் அம்பானி. "ஆமாம்" என்றாராம் டினா. "இந்த சிங்கத்துக்கு பதினாறு மனைவிகள்; இன்னும் உன் கணவனை சிங்கத்துக்கு ஒப்பிடுவாயா?" என்றாராம் மூத்தவர். "ஆமாம்" என்றாராம் டினா.

டினாவுக்கு அனில் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் இல்லை. எவ்வளவு பிஸியாக இருந்தாலும் தமக்கும் குடும்பத்துக்கும் தவறாமல் நேரம் ஒதுக்குவாராம். டினாவின் நடவடிக்கைகளில் தலையிடுவதில்லையாம். அதனால்தான், சமைக்கும், குழந்தைகளைப் பேணும் நேரம் போக, டினாவால் நிறைய 'ஹார்மனி ஷோ'க்களெலாம் நிகழ்த்தமுடிகிறதோ?

- ஜெயஸ்ரீ ராஜ்

நடக்கலாம் நம்பிக்கையோடு!



ராக்கெட், விமானம் போன்றவற்றை தயாரிக்கப் பயன்படும் உலோகம் அது. ரெஸின், பிளாஸ்டிக், பருத்தி இழை போன்றவற்றால் உருவாக்கப்பட்ட அந்த 'காம்போஸிட் மெட்டீரியல்' மிகவும் உறுதி வாய்ந்தது. அதே சமயம் ரொம்ப இலேசானது. "ராணுவப் பயன்பாட்டுக்குப் பிறகு எஞ்சும், மிச்சம் மீதி காம்போஸிட் மெட்டீரியல் உலோகத் துண்டுகளை, செயற்கைக் கால்கள் தயாரிக்கப் பயன்படுத்தலாமே. திறமையும் அனுபவமும் மிக்க தொண்டு உள்ளம் கொண்டவர்கள் யாராவது கிடைப்பார்களா?" என்று டாக்டர் அப்துல் கலாம் தேடிக் கொண்டிருந்தார்.



அதே சமயம், டாக்டர் ஜி. கிருஷ்ணனின் பேட்டி, பிரபல நாளிதழில் வெளியாகியிருந்தது.

"இந்தியாவில் தயாரிக்கப்படும் செயற்கைக் கால்கள் கனமாகவும், ஆயுட் குறைந்ததாகவும் இருக்கின்றன. செயற்கைக் காலும், ஊனமுற்ற காலும் இணையும் இடத்தில் சிராய்ப்பு ஏற்படுத்துகிறது. இதை எல்லாம் மனத்தில் கொண்டு, வெளிநாட்டுத் தரமுள்ள செயற்கைக் கால்களை இங்கேயே தயாரிக்க திட்டமிட்டு, உருவாக்கினோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. ஊனமுற்றவர்களுக்கு, முழு சௌகரியத்தைத் தரக் கூடிய செயற்கைக் கால்களை உருவாக்க, முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம்" என்று தங்களுக்கு இருந்த சிரமத்தை எல்லாம் பேட்டியில் சொல்லியிருந்தார் ஜி. கிருஷ்ணன்.

அதை அப்போதைய 'டைபாக்' (இது மத்திய அரசு அமைப்பு. தற்போது இதன் தலைவர் டாக்டர் அப்துல் கலாம்) இயக்குநர் பேராசிரியர் வெங்கட்ராமனின் பார்வைக்கு, அவரது மனைவி செல்லம் வெங்கட்ராமன் கொண்டு சென்றிருக்கிறார். அவர் உடனே டாக்டர் ஜி. கிருஷ்ணனுக்கு ஃபேக்ஸ் அனுப்பி, தொழில் நுட்ப உதவிகள் செய்து தரத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

அப்துல் கலாமின் சேவை எண்ணம், வெங்கட்ராமனின் நம்பிக்கை, டாக்டர் ஜி.கிருஷ்ணனின் அறிவாற்றல் இவை மூன்றும் நேர்க் கோட்டில் சந்திக்கவும். கால் இல்லாதவர்களின் கண்ணீரைத் துடைக்கும் தொழில் நுட்பத் திட்டம் உருவானது.

"இந்த ஆராய்ச்சியில், சென்னை எம்.ஐ.டி. விமானத் தொழில் நுட்பத்துறை பேராசிரியர் பி. பாஸ்கர் மற்றும் வி. பாஸ்கர், சென்னை ஐ.ஐ.டி. பயோ இன்ஜினியரிங் பேராசிரியர் பட்டேல், 'டைபாக்' இயக்குநர் பிஸ்வாஸ், அப்துல் மிட்டல்

ஆகியோர் முழு மூச்சாக ஈடுபட்டோம். எங்களது ஒன்றரை வருட முயற்சியில் இன்டோ லைட் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. இந்த செயற்கைக் கால்கள் உறுதியானவை. நீண்ட ஆயுள் கொண்டவை. உலகத் தரம் வாய்ந்தவை. வெளிநாட்டில் நாற்பத்து ஐந்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள, செயற்கை உறுப்பை, ஆறாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குத் தர முடிகிறது என்பதே பெருமைக்குரிய விஷயம்தானே?

"அதுமட்டுமல்ல... சமீப காலம் வரை, முட்டிக்குக் கீழே கால் இழந்தவர்களுக்குத்தான் செயற்கைக் கால் பொருத்த முடியும் என்ற நிலமை இருந்தது. ஆனால் தற்போது முட்டிக்கு மேலே கால்களை இழந்தவர்கள் கூட, பயனுறும் வகையில் உருவாக்கியிருக்கிறோம். மோல்டட் பி.யூ ஃபோம் பாதங்கள், கணுக்கால், முட்டி அசைவுகள், என எல்லாமே இயற்கையாக இருப்பதால், பாதங்களைப் பதித்து இயல்பாக



* அப்துல்கலாம், முரளிமனோகர் ஜோஷியுடன் ஜி. கிருஷ்ணன்

நடக்க முடிகிறது" என்றார் ஜி. கிருஷ்ணன்.

இந்த செயற்கைக் கால்களை, டெல்லியில் நடந்த விழாவில் டாக்டர் அப்துல் கலாம், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் முன்னிலையில் அறிமுகப்படுத்தி, கால் இழந்த ஐந்து பேருக்கு, பொருத்தியும் காட்டியிருக்கிறார்கள்.

இதை அறிந்த குஜராத் அரசு, பூகம்பத்தால் கால் இழந்த முந்நூறு பேருக்கு, செயற்கைக் கால்களைப் பொருத்த அழைப்பு விடவே, ரோட்டரி கிளப் ஆஃப் மசானா சார்பில், செயற்கைக் கால்களைப் பொருத்தி, பூஜ் மக்களின் கண்ணீரைத் துடைத்து விட்டு வந்திருக்கிறார்கள்.

இந்தத் துறையில் டாக்டர் கிருஷ்ணனுக்கு ஈடுபாடு ஏற்பட்டது எப்படி?

"கை, கால்கள் இழந்தவர்கள் படும் அவதியை நேரில் பார்த்து வருந்தியிருக்கிறேன். அதனால் அந்தத் துறையில் கல்வி கற்று, சென்னை பொது மருத்துவமனையில் இருந்த 'ஆர்ட்டிஃபிஷியல் லிம்ப் சென்டரில்' பணிபுரிந்தேன். பின்பு மத்திய அரசு, செயற்கைக் கால்கள் அமைப்பில் 'இன்ஸ்ட்ரக்டர்' பதவி வகித்தேன். ஊனமுற்றவர்களின் பிரச்னைகளை உணர்ந்தவன் என்ற முறையில் புதிய யோசனைகள் தோன்றவே, அவற்றைச் செயலாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். டாக்டர் எம்.நடராஜனின் ஆலோசனையின் பேரில் சென்னையில் 'மோகனா ஆர்த்தோடிக்ஸ் – பிராஸ்தடிக்ஸ்' என்ற செயற்கை உறுப்புகள் தயாரிக்கும் நிறுவனம் தொடங்கினேன்" என்றார் ஜி. கிருஷ்ணன். சென்னை ஐ.சி.எஃப்

• பொருத்துகிறார் டாக்டர் அப்துல் கலாம்...



பஸ் நிலையம் அருகே இயங்கு கிறது இந்நிறுவனம்.

செயற்கைக் கால்களை முதலில் உருவாக்க ஆரம்பித்த இவர், பிறகு, மார்பகப் புற்று நோயால் மார்பகம் இழந்தவர் களுக்கு, செயற்கை மார்பகம், போலியோவால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு அலுமினிய காலிபர், வீல் சேர், ஊன்று கோல், டிராக்ஷன் செட், குதிகால் செருப்புகள் என நிறைய கருவி களைத் தயாரித்து வருகிறார்.

ஜி. கிருஷ்ணனின் அடுத்த லட்சியம்?

செயற்கைக் கைகளைத் தயாரிப்பதுதானாம்.

''முழுமையான அசைவு களை, விரல்களின் இயற்கை யான பயன்பாட்டைக் கொண்ட கைகளைத் தயாரிக்கும் முயற்சி யில் தீவிரமாக இறங்கியிருக் கிறோம். விரைவில் சாதிப்போம் என்ற நம்பிக்கையிருக்கிறது'' என்கிறார்.

செயற்கைக் கால் தொழில் நுட்பத் துறையில், இவரது சேவை யையும், கண்டுபிடிப்பு ஆற்றலை யும் பாராட்டி அமெரிக்க பல்கலைக் கழகம் ஜி. கிருஷ் ணனுக்கு, டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

ஆதர்ஷ்

ஒவ்வொரு குறிப்பும் உணர்த்தும் விடையை எதிரே உள்ள கோடுகளில் நிரப்புங்கள். வட்டத்துக்குள் உள்ள எழுத்துகளை மட்டும் ஒழுங்குபடுத்தினால் விடைப் பகுதியில் உள்ள குறிப்பு உணர்த்துவது கிடைத்துவிடும்.



1. சிவாஜி கணேசனுக்குப் பெரும் புகழ் தந்த சரித்திரப் பாத்திரம் _ ○ _ _ _ _ _ _

2. இந்தப் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஒன்பது கதாநாயகிகள்! _ ○ _ _ _ _ _ _

3. தினத்தந்தியில் 'முடிவே இல்லாதவன்' _ ○ _ _ _ _

4. 'போறாளே பொன்னுத்தாயி' பாடல் இந்தப் படத்தில ○ _ _ _ _ _ _

5. உகாண்டாவை ஆண்ட கொடுங்கோலன் _ ○ _ _ _ _

6. கப்பல்கள் நிற்குமிடம் ○ _ _ _ _ _

பார்த்துப் பிழையுங்கப்பா!



ஆளை விழுங்கி ஏப்பம் விடும் கணக்கு! _ _ _ _ _ _ _

— ஜி.எஸ்.எஸ்.

கந்துவட்டி

விடைகள்: 1.கட்டபொம்மன் 2. நவரத்தினம் 3. சிந்துபாத் 4 கருத்தம்மா 5. இடி அமீன் 6. துறைமுகம்



நடிகன்

“இந்தாப்பா பல்ராம், உன்னை அமர் ஸார் கூப்பிடறார்” என்றான் அவன்.

“இதோ வந்துட்டேன்” என்றபடி எழுந்து கொண்டான் பல்ராம்.

“என்ன பல்ராம், கொஞ்ச நாளாவே அமர் ஸார் உன்னை கூப்பிட்டு கூப்பிட்டுப் பேசறார். என்ன விஷயம்?” என்று கேட்டான் பீட்டர்.

“எனக்கென்ன தெரியும்? ஒரு நாள் அவராதான் கூப்பிட்டு என்னைப் பத்தி விசாரிச்சார். அன்னியிலிருந்து தினமும் கூப்பிட்டுப் பேசறார்” என்றான் பல்ராம்.

“என்ன காரணத்தாலோ உன்னை அவருக்குப் பிடிச்சுப் போச்சு. அவரோட பார்வையில விழுந்துட்டே. இனிமே எங்கேயோ போகப் போறே பார்” என்றான் பாலாஜி.

அந்த வார்த்தைகள் பல்ராமுக்கு பெருமிதத்தையும் வெட்கத்தையும் உண்டாக்கின. “அதெல்லாம் ஒண்ணுமில்லே. சும்மா இருங்கப்பா.” என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு விலகி நடந்தான்.

அந்த இடம் ஒரு பிரபல சினிமா ஸ்டுடியோவின் படப்பிடிப்புத் தளம். அலுவலகம் போல் செட் போடப்பட்டிருந்தது. உணவு நேரம் என்பதால் படப்பிடிப்புக் கருவிகள் ஓய்வில் இருந்தன. ஊழியர்கள் ஆங்காங்கே கும்பலாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டும், சாப்பிட்டு முடித்தவர்கள் பேசிக் கொண்டும் இருந்தார்கள்.

பல்ராம் மேக்கப் அறையை நெருங்கி கதவைத் தட்டினான்.

“வா பல்ராம்” என்று குரல் வந்ததும் உள்ளே நுழைந்தான்.

அமர், ஒரு நாற்காலியில் அமர்ந்து இருந்தார். எதிரே ஒரு குட்டையான டேபிள். அதன்மீது உணவுப் பாத்திரங்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஐயிட்டத்தைச் சுமந்திருந்தது.

“உட்காரு பல்ராம். சாப்பிடேன்” என்றார்.

“வேணாம் சார். இப்பதான் ஆச்சு” என்றான் பல்ராம்.

“அட, பரவாயில்லை, லைட்டா சாப்பிடு. நண்டு வறுவல் இருக்கு. சாப்பிட்டு என் வீட்டு டேஸ்ட் எப்படின்னு சொல்லு. உட்காரு. தட்டை எடுத்து வைச்சுக்க” என்றார்.

இனி மறுப்பது சரியில்லை என்று நினைத்த பல்ராம் அமர்ந்து கொண்டான். தட்டை எடுத்துக் கொண்டதும் அமரே எல்லாவற்றையும் பரிமாறினார். பரிமாறியவாறு பேசலானார்.

அமர் தமிழ் முன்னணிக் கதாநாயகர்களில் ஒருவர். பதினைந்து வருடங்களுக்கு முன்பு அறிமுகமானவர். ஆரம்பம் முதல் இன்று வரை சீரான முன்னேற்றம். இடையிடையே சில சறுக்கல்களைச் சந்தித்தாலும் அவற்றை எல்லாம் மீறி ஜெயித்துக் கொண்டிருப்பவர்.

பல்ராம் துணை நடிகன். தாய் மொழி தமிழாக இருந்தாலும் பிறந்தது



வளர்ந்தது எல்லாம் திருவனந்தபுரத்தில். அதனால் பேச்சில், உச்சரிப்பில் மலையாள வாடை இருக்கும். அப்பா நகைக் கடை வைத்திருந்தார்.

பல்ராமுக்கு சிறு வயது முதலே சினிமா பார்ப்பதில் அப்படியொரு ஈர்ப்பு. அம்மாவுடன் ஒருமுறை, அப்பாவுடன் ஒருமுறை, நண்பர்களோடு ஒருமுறை என்று ஒரே படத்தை மூன்று முறை பார்த்து அதே கனவுகளுடன் உலாவ ஆரம்பித்தான்.

இதனால் வீட்டில் பிரச்னை உண்டானது. உருப்படுகிற வழியைப் பார் என்று ஏசினார்கள். பல்ராம் நடிகனாகும் எண்ணத்தில் உறுதியாக இருந்தான். வீட்டை விட்டு கிளம்பி சிங்காரச் சென்னையில் இறங்கினான். வாய்ப்புத் தேடிச் சென்றபோது தான் தனக்கு முன்பு எவ்வளவு நீளமான வரிசை நின்றிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டான்.

பல வருட போராட்டத்துக்குப் பின்னர் தான் துணை நடிகனாகும் வாய்ப்பே கிடைத்தது. கிடைத்ததைப் பிடித்துக் கொள்வோம் என்று பிடித்துக் கொண்டான். பெற்றவர்களும் இனி இவனிடம் சொல்வதற்கு எதுவுமில்லை என்று முடிவு செய்து, திருமணம் செய்து வைத்தார்கள். இரண்டு வாரிசுகளையும் உருவாக்கிவிட்டான்.

அமரின் முந்தைய படத்தில் அவரது தங்கையின் கணவனாக நான்கு காட்சிகளில் நடித்தான். அதன்பிறகு துணை நடிகர்களின் ஏஜெண்டான சுந்தரம் இவனது வீட்டிற்கே வந்தான்.

ஆரணி யுவராஜ்



''போலீஸ் ஸ்டேஷன்ல கல்யாணம் பண்ணி வைக்கப்போக நமக்கு ஒரு மரியாதையே இல்லாமப் போச்சு...''

''என்ன விஷயம்?''

''கல்யாணம் பண்ண வந்த ஜோடி ஊர்வலத்துக்கு போலீஸ் ஜீப்பைக் கேட்குது!''

- அம்பை தேவா

"பல்ராமா, ஒரு சந்தோஷமான விஷயம். அமர் ஸாரோட அடுத்த படத்துல உனக்கு ஃபிரண்ட் காரெக்டர் கிடைச்சிருக்கு. நிறைய காட்சிகள்லே வருவே. இதுக்கு சிபாரிசு செய்தது யார் தெரியுமா? அமர் ஸாரேதான்'' என்றான்.

" நிஜமாவா?'' என்று வியந்தான் பல்ராம்.

"அட ஆமாங்கறேன். பல்ராமா, இது நல்ல சான்ஸ். அமர் ஸாரோட பார்வை உன்மேல விழுந்துடுச்சு. இனி உனக்கு யோகம்தான். புத்திசாலித்தனமா நடந்துகிட்டு முன்னேறப் பாரு'' என்றான்.

பல்ராம் முதலில் இதை அவ்வளவாக பெரிதாக நினைக்கவில்லை. ஏதோ குருட்டாம் போக்கில் தனது பெயரை அமர் சிபாரிசு செய்திருக்க வேண்டும் என்றுதான் நினைத்தான். ஆனால் அவர் தினமும் தன்னோடு பேச ஆரம்பித்ததும், மனம் வண்ண வண்ணக் கனவுகளுடன் சிறகடிக்கத் தொடங்கியது.

இப்போதும் அப்படித்தான் சாப்பிட்டவாறு பேசினார் அமர். குடும்பத்தைப் பற்றி விசாரித்தார். திருவனந்தபுரத்தில் எப்படி இருந்தாய், எங்கெல்லாம் சுற்றுவாய் என்றெல்லாம் கேட்டார். எல்லாவற்றுக்கும் சளைக்காமல் பதில் கூறினான்.

இரவு, மனைவி பத்மாவிடம் விஷயத்தைச் சொன்னான்.

"சரி, நான் சொன்ன விஷயத்தைப் பேசினீங்களா?'' என்று கேட்டாள்.

"என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

"என்னவா? அவரோட அடுத்த படத்திலும் சான்ஸ் கேட்கச் சொன்னேனே!''

''அவர் இந்த அளவுக்கு என்னோடு அக்கறையா பேசறப்பவே என் மேல ஒரு கவனம் வந்துட்டதுன்னுதான் அர்த்தம். அதனால அவரா சான்ஸ் கொடுப்பாருன்னு நினைக்கிறேன். அதுக்குள்ளே அவசரப்பட்டு பேசக் கூடாதுன்னுதான் சும்மா இருக்கேன்'' என்றான்.

"அவசரப்படக் கூடாதுன்னு சொல்லிக்கிட்டு கோட்டை விட்டுடப் போறீங்க..''

''அதெல்லாம் பார்த்துப்பேன். இந்த ஃபீல்டுல எத்தனை வருஷ அனுபவம் இருக்கு? யார்கிட்டே எப்போ எப்படி பேசணும்னு எனக்குத் தெரியும்'' என்றான்.

"என்னமோ செய்யுங்க. பெரிய ஹீரோ ஆகலைன்னாலும் ஓரளவுக்கு வசதியா இருக்கிற மாதிரியான நிலைக்கு வந்தா போதும்'' என்றாள் பத்மா.

"சரிதான். ஹீரோ சான்ஸ் வந்தாலும் நீயே வேண்டாம்னு சொல்லி அனுப்பிடுவே போலிருக்கே'' என்று சிரித்தான் பல்ராம்.

இந்த உரையாடல் நடந்த சில நாட்களுக்குப் பிறகு மாற்றங்கள் ஏற்பட்டன. முன்பு போல் பல்ராமை அழைத்துப் பேசவில்லை. அவன் சம்பந்தப்பட்ட காட்சிகளும் முடிந்துவிட்டதால் அமரைப் பார்ப்பதும் குறைந்து போனது.

படம் வெளியாகி அடுத்த படம் பற்றிய அறிவிப்பும் வெளியானது. இதிலும் தனக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று காத்திருந்த பல்ராம் ஏமாற்றமடைந்தான். சின்ன வேடம் கூடக் கிடைக்கவில்லை.

"நீங்களே போய் அவரைப் பார்த்துப் பேசுங்களேன்'' என்றாள் பத்மா.

படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்கே சென்றான். அமர் ஓய்வாக அமர்ந்திருந்த போது தயக்கத்துடன் பக்கத்தில் சென்று 'வணக்கம்' போட்டான்.

தலையை உயர்த்திய அமர் ''என்னப்பா நல்லா இருக்கியா?'' என்று கேட்டார்.

"நல்லா இருக்கேன் சார்'' என்றான்.

''என்ன இங்கே? இந்தப் படத்துல ஏதாவது ரோல் கொடுத்திருக்காங்களா?''

"இல்லை சார் சும்மா...' என்று முடிக்கும் முன்பு, அவர் திரும்பி உதவி இயக்குநரோடு

பேச ஆரம்பித்துவிட்டார்.

பல்ராம் சிறிது நேரம் நின்றுவிட்டு வந்துவிட்டான்.

அதன் பிறகு வழக்கம்போல் "எதையும் இருபத்துநாலு மணி நேரம் கழிச்சுத்தான் சொல்ல முடியும்" என்கிற மருந்துவனாக, "உங்களோட சுயரூபத்தை மக்களுக்கு தெரியப்படுத்தறேன்" என்கிற பத்திரிக்கை நிருபராக, நடித்துக் கொண்டிருந்தான்.

அமரின் அடுத்த படம் வெளியானது. அதில் அவருக்கு கேரளாவிலிருந்து தமிழ் நாட்டுக்கு வேலை தேடி வரும் இளைஞன் வேடம். அற்புதமாக நடித்திருந்தார். எல்லோரும் 'ஆகா ஓகோ' என்று பாராட்டினார்கள்.

ஒரு தனியார் தொலைக்காட்சி அமரிடம் பேட்டி எடுத்து ஒளிபரப்பியது.

"படத்துல ரொம்ப இயல்பா, தமிழோடு கொஞ்சம் மலையாள வாடை வாற மாதிரி பேசி இருக்கீங்களே எப்படி?" என்று கேட்கப்பட்டது.

"இந்தக் கதையை டைரக்டர் ஆறு மாசத்துக்கு முன்னாடியே சொன்னார். அப்போ இருந்தே இதுக்குன்னு சில பயிற்சிகள் செய்தேன். எனக்குத் தெரிந்த கேரள நண்பர்கள், சில நடிகர்களோடு பேசுவேன். அதாவது, இதுக்காகத்தான்னு விஷயத்தைச் சொல்லாம சாதாரணமா பேச்சுக் கொடுப்பேன். அவங்க பேசறதை நல்லா கவனிப்பேன். சில வார்த்தைகளை அவங்க வித்தியாசமா உச்சரிக்கும்போது மனசுல பதிச்சுப்பேன். இப்படித்தான் பேசக் கத்துக்கிட்டேன்" என்று புன்னகையுடன் சொன்னார்.

தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பத்மா திரும்பி, பல்ராமைப் பார்த்தாள். அவன் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகளுக்கு என்ன பெயர் என்று அவனுக்குத் தெரியவில்லை. ●

உடையாம அள்ளுங்க!



நீளநீளமாக நகம் வளர்ப்பதும், அதற்கு விதவிதமாக வர்ணங்கள் பூசி அலங்கரிப்பதும்தான் டோக்கியோ நகரத்து இளம்பெண்களின் லேட்டஸ்ட் பித்து!

பேய் நகங்களை வைத்துக் கொண்டு உடையாமல் பராமரிப்பது இலேசுப்பட்ட காரியமா என்ன? அதனால் இளம் தேவதைகளின் கவிதீர்க்க என்றே ரெடிமேட் நகங்கள் அழகிய டிசைன்களில் விற்கப்படுகின்றன. பிடிச்ச நகத்தை எடுத்து, ஒரிஜினல் நகத்தின் மீது ஒட்டிக் கொண்டு அழகாய்ப் போஸ் கொடுக்க வேண்டியதுதான்.

பெண்களின் ஒட்டுமொத்த வரவேற்பில் ஒட்டு நகங்களின் பிஸினெஸ் அப்படி அள்ளுகிறதாம். பார்த்து அள்ளுங்க.. நகம் உடைஞ்சுடப் போகுது!

- ஜஸ்





மௌனமாய் தகிக்கும் கவிதைகள்!

புக் பேங்க்

அழகிய பெரியவன்

வீட்டுக்கும் வெளியுலகுக்குமான ஒப்புமைகளாக நாம் கருதும் சிறை அல்லது கட்டுப்பாடு, விடுதலை ஆகிய குறியீட்டின் தளங்களில் உருவாகியிருப்பவை உமா மகேஸ்வரியினுடைய கவிதைகள்.

விடுதலையை விரும்பும் ஒரு பெண்ணின் உள் மனக் குமுறல்களாக இக்கவிதைகள் இருக்கின்றன. பெண் என்கிற எளிய ஜீவனின் மீது வலியச் சுமத்தியிருக்கும் எந்தத் தளைகளையும் சுட்டி, அறுதியாய்க் கோடிட்டுக் கேள்வி கேட்பதில்லை இவரின் கவிதைகள். மாறாய், அந்தத் தளையின் வலிகளைக் கூர்மையான மொழியில், கவிதையில் பதிவதின் வாயிலாக, எந்தக் கேள்வியைவிடவும் உக்கிரமானதொரு எதிர்ப்புணர்வை உண்டாக்கி விடுகிறார். இன்று எழுதிக் கொண்டிருக்கும் பெண் கவிஞர்களிடையே இந்த அம்சமே இவரைத் தனித்துத் தெரிய வைக்கின்றது.

மென்மையான, எளிமையுடைய, நேரடித் தன்மை கொண்ட, திருகலற்ற மொழி இவருடையது. தயக்கமின்றி, பதற்றமின்றி, வாசிக்கிறவனை எதிரில் மௌனமாய் அமர்த்திவிட்டு ஆழமாய்ப் பேசுகின்றன. வீட்டைத் தாண்டாத ஒரு பெண்ணின் கவிதைகளாக இவை வெளிப்பாட்டுத்தன்மை கொண்டிருப்பதால், அப்பெண்ணுக்குக் கிடைத்த வீடு, வாசல், கோலம், மழை, பறவைகள், சன்னல், பூ, மாடி, இரவு, சமையலறை, நட்சத்திரங்கள், புத்தகங்கள் ஆகியவற்றுடனான அனுபவங்களே பெரும்பாலான கவிதைகளின் உட்பொருட்களாக உள்ளன. ஆனால் உயிருடனும், உயிரற்றும் இருக்குமிவை, பல கவிதைகளில் குறியீட்டு வடிவம் கொள்கின்றன. எளிமையானவைகளின் உள்ளீடாக அமையும் பிரம்மாண்டமும், பேருரு வாழ்க்கையும் அக்கவிதைகளில் காணக்கிடைக்கின்றன.

சன்னல், பறவை, மழை, நூல்கள் ஆகியவை மிகக் குறிப்பான கட்டுப் பொருட்களாக மீண்டும் மீண்டும் வருகின்றன. மழை குறித்தும், பறவை மற்றும் சன்னல் குறித்தும் மிகச் சிறந்த கவிதைகள் இத்தொகுப்பில் இருக்கின்றன. ஆண்களின் கவிதைகளில் வரும் பறவைகள், ஆன்மா, தரிசனம், பரவசம் ஆகிய மனநிலைகளின் உருவகங்களாகவே பெரும்பாலும் அமைந்துவிடுகின்றது. இவரின் கவிதையில் வரும் பறவைகள் விடுதலையை, சிறைப்படும் வலியை சுட்டுபவை. வீட்டுக்குள்ளிருந்தபடியே மனத்தை பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று வருவதால், புத்தகங்கள்கூட பறவைகளாகவும் இளைப்பாறும் கூடாரங்களாகவும் ஆகிவிடுகின்றன.

இத்தொகுப்பின் பின்பகுதிக் கவிதைகள் தொடக்கக் காலத்தில் எழுதப்பட்டிருப்பதால், அவற்றை விடவும் முன்பகுதிக் கவிதைகள் பேசும் சிக்கலிலும், அடர்த்தியிலும் வேறுபடுகின்றன. இருவேறு மனநிலை, கால நிலைகளில் எழுதப்பட்டிருக்கும் இவற்றில், ஏதாவது பேசு (பக். 43), கர்சீஃப் (206) ஆகியவற்றையும் ஏதோ ஒரு பறவை (15), பிரியம் (198) ஆகியவற்றையும் மழை பற்றிய கவிதைகளையும் ஒப்பிட்டு வாசிப்பது, மனநிலைகளின் மீதான ஈர்ப்பைத் தூண்டுகிறது.

பெண்ணை புணர்ச்சிக்கும், பிள்ளைப் பேற்றுக்கும், வீட்டு வேலைக்கும் உரியவளாகவே கருதும் பார்வையை மீண்டும் மீண்டும் மறுத்துப் பேசுகின்றன, இவரின் நான் / நீ என்கிற கவிதைகள்.

அடைபட்டிருக்கும் குறுகிய வட்டத்தையே பெரும் அண்டத்தின் வடிவமாக்கி, அதை தனக்கானதாக மாற்றிக் கொள்ளும் வலிமையையும், எப்போதும் விடுதலையை நேசிக்கும் விருப்பத்தையும் கொண்டிருப்பவை இவரது கவிதைகள்.

வெறும் பொழுது - உமா மகேஸ்வரி. தமிழினி, 342, டி.டி.கே. சாலை, சென்னை - 600 014. விலை ரூ.100.

நாடோடி... போக வேண்டாம்!



சமீபத்தில் அமெரிக்கப் பள்ளிகளில், வருடாந்திர மருத்துவப் பரிசோதனை நடந்தபோது, ஒரு 'கருக்' அதிர்ச்சி காத்திருந்தது. ஐம்பது சதவிகிதத்துக்கும் மேற்பட்ட பள்ளிச் சிறுமிகளுக்கு அந்த வித்தியாசமான நோய் கண்டிருந்தது.

பின் கழுத்தைச் சுற்றி சிறு கழலைகள், காதுகளின் பின்புறம் சிவப்புத் திட்டுகள், மண்டையில் ரத்தக் கீறல்கள், கையிடுக்குகளில் வீக்கம்... என ஒரே மாதிரியான அறிகுறிகள் ஏகப்பட்ட பள்ளிச் சிறுமியருக்கு இருக்கவே, பதறிப் போனது அமெரிக்க ஆரோக்கிய மேம்பாட்டு வாரியம்.

என்னவோ ஏதோ என்று பதறிப் போய், 'தடாபுடா' என்று பரிசோதித்து, ஆராய்ச்சி செய்ததில், அத்தனை பேருக்கும் 'வேகபாண்ட்ஸ் டிஸீஸ்' என கண்டுபிடிக்கப்பட்டதாம். இந்த நாடோடி வியாதிக்கு முழு மூல காரணம், மிஸ்டர் பேனப்பன்.

உடனே, பேனால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளை வீட்டுக்கு 'பேக்' செய்துவிட்டு, 'நோ நிட் பாலிஸி' என்ற மருத்துவச் சான்றிதழோடு வந்தால் மட்டுமே அனுமதி என்று கறாராகச் சொல்லிவிட்டதாம் அமெரிக்க அரசு! அப்புறம் என்ன, அம்மாக்களும் குழந்தைகளும் பேன் கொல்லிகளைத் தலையில் பூசிக் கொண்டு, குளியோ குளி என்று குளித்து... 'பேன் இல்லை' என்று சர்டிஃபிகேட் வாங்க க்யூவில் நின்றார்களாம்!

இதைக் கேள்விப்பட்ட மெடிக்கர் ஆன்ட்டி லைஸ் தயாரிக்கும் 'மெரிகோ இன்டஸ்ட்ரீஸ்' நிறுவனம், உடனே உஷாராகி, ஹரியானா மாநிலம் முழுவதும் சாம்பிள் சூறாவளி பிரசாரம் மேற்கொண்டது. 'யுனெஸ்கோ' மற்றும் ஹரியானா அரசின் உதவியுடன் பள்ளி மாணவர்களிடையே பரிசோதனை நடத்திய போது அமெரிக்காவை விட ஹரியானா மேல் என்று தெரியவந்ததாம். அந்தரங்க சுத்தம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தியதோடு, 'பேன்' பற்றிய விளக்கக் கையேடுகளையும் இலவசமாக விநியோகித்திருக்கிறது மெடிக்கர் நிறுவனம்.

விநியோகிக்கப்பட்ட கையேடுகளில் உள்ள சுவையான குறிப்புகளில் ஒரு சில.

• பேன்களும் ஈறுகளும் குஞ்சும் குளுவானுமாகக் கொட்டமடிக்கும் நிலைக்கு 'வெடிகுலோஸிஸ்' என்று பெயர். இந்த நிலைமையில் பெண் குழந்தைகள் அசுத்த உணர்வு, தாழ்வு மனப்பான்மை, கவனமின்மை என மனத்தளவில் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ரத்தத்தில் இருக்கும் புரதத்தை இவை உறிஞ்சிக் குடிப்பதால், புரதச் சத்துக் குறைவால் நோஞ்சானாகி விடுகிறார்கள்.

• தலையோடு தலை உரசும் சமயங்களில் இந்நோய் தொற்றுவதால், பேன் பிரச்னை கொண்ட பெண்களுடன் நெருங்கிப் பழக விடாதீர்கள். பெண் குழந்தைகளின், டவல், பிரஷ், சீப்பு, தலையணை, ஸ்கார்ஃப், ரிப்பன் என எல்லாமே தனியாகவும், சுத்தமாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

• சில தாய்மார்கள், பேன்களைப் போக்க மண்ணெண்ணெய் கொண்டு தலையை அலசுகிறார்கள். இது தவறு. மெடிக்கரில் உள்ள பெர்மெத்ரின் என்ற பூச்சிக் கொல்லி மருந்து, மிகுந்த வீரியமுள்ளது மட்டுமல்ல. தலைமுடிக்கும் சருமத்துக்கும் பாதுகாப்பானது. இந்த பெர்மெத்ரின், பேன்களின் மூளை மண்டலத்தைத் தாக்கி, செயலிழக்க வைத்துவிடுவதால், பேன்கள் அடியோடு அழிந்து விடுகின்றன.

– மஞ்சுஸ்ரீ

வர்த்தமானன் பதிப்பகத்தின்
புதிய ஷோரூம் திறப்பினை முன்னிட்டு
வரலாறு காணாத சலுகை தொடர்கிறது !

பட்டியலில் மேலும் புதிய நூல்கள் :

நூல்கள்	பக்கங்கள்	விலை	சலுகை விலை
1. திருவருட்பா - மூலமும் தெளிவுரையும் (7 தொகுதிகள்)	3415	1100.00	**700.00**
2. நாலாயிர திவ்வியப்பிரபந்தம் - மூலமும் தெளிவுரையும் (9 தொகுதிகள்)	4736	1000.00	**600.00**
3. வில்லிபாரதம் - மூலமும் தெளிவுரையும் (4 தொகுதிகள்)	2062	650.00	**425.00**
4. பெரிய புராணம் - மூலமும் தெளிவுரையும் (6 தொகுதிகள்)	2391	600.00	**400.00**
5. திருவிளையாடல் புராணம் - மூலமும் தெளிவுரையும் (5 தொகுதிகள்)	1959	500.00	**275.00**
6. திருமந்திரம் - தெளிவுரையும் (3 தொகுதிகள்)	1823	450.00	**225.00**
7. சீவகசிந்தாமணி - மூலமும் தெளிவுரையும் (3 தொகுதிகள்)	1533	300.00	**175.00**
8. திருப்புகழ் - மூலமும் தெளிவுரையும் (4 தொகுதிகள்)	2300	400.00	**180.00**
9. அரிச்சந்திர புராணம் - மூலமும் தெளிவுரையும்	747	180.00	**80.00**
10. சிவபுராணம் - மூலமும் விளக்கவுரையும்	418	78.00	**50.00**
11. திருவடிப் புகழ்ச்சி - மூலமும் விளக்கவுரையும்	328	75.00	**50.00**
12. நன்னூல் - மூலமும் விளக்கவுரையும்	408	125.00	**70.00**
13. அறநெறிச்சாரம் - மூலமும் விளக்கவுரையும்	200	70.00	**40.00**
14. நற்றிணை - மூலமும் தெளிவுரையும்	685	125.00	**70.00**
15. குறுந்தொகை - மூலமும் தெளிவுரையும்	541	100.00	**60.00**
16. அகநானூறு - மூலமும் தெளிவுரையும் (3 தொகுதிகள்)	1593	275.00	**150.00**
17. புறநானூறு - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	808	150.00	**90.00**
18. கலித்தொகை - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	951	170.00	**120.00**
19. பரிபாடல் - மூலமும் தெளிவுரையும்	591	100.00	**65.00**
20. ஐங்குறுநூறு - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	813	150.00	**85.00**
21. பதிற்றுப்பத்து - மூலமும் தெளிவுரையும்	654	125.00	**75.00**
22. பத்துப்பாட்டு - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	1347	250.00	**150.00**
23. சூளாமணி - மூலமும் தெளிவுரையும்	800	200.00	**120.00**
24. திருவாசகம் - மூலமும் தெளிவுரையும்	471	70.00	**35.00**
25. தமிழ் - தமிழ் அகராதி	908	100.00	**60.00**
26. சுக்கிர நீதி	456	70.00	**40.00**
27. வள்ளலாரின் உரைநடை நூல்	731	200.00	**150.00**
28. மகாபாரதம் நீதிகள்-கிளைக்கதைகள்	204	50.00	**25.00**
29. வில்லிபாரதத்தில் கண்ணன்	264	86.00	**48.00**

30. பயன் தரும் பாராயணம்	171	35.00	**20.00**
31. திருமுறைத்தியானம்	365	60.00	**35.00**
32. சுய முன்னேற்ற நூல்கள் 1. சிகரத்தைத் தொடுவோம், 2.வாழ்ந்து காட்டுகிறேன் 3.மனதை வென்றால் உலகை ஆளலாம், 4.மனோசக்தி 5. வெற்றி உங்கள் கையில், 6.வல்லுநர் வரலாற்றுச் சுருக்கம்	1201	225.00	**125.00**
33. இவ்வளவுதான் ஆங்கிலம் - தமிழ் விளக்கத்துடன்	504	265.00	**120.00**
34. இங்கிலீஷ் ஸ்பீகிங் கோர்ஸ் - தமிழ் உச்சரிப்புடன்	200		
35. Dictionary of Synonyms & Antonyms *with Tamil Meaning*	300	40.00	**24.00**
36. Dictionary of Proverbs *with Tamil Translation*	304	40.00	**24.00**
37. Dictionary of Quotations *with Tamil Translation*	406	40.00	**24.00**
38. Dictionary of Idioms & Phrases *with Tamil Translation*	522	80.00	**50.00**
39. Letter Writing தமிழ் மொழிப்பெயர்ப்புடன்	458	60.00	**32.00**

கையடக்கப்பதிப்பு

1. நாலடியார்- மூலமும் தெளிவுரையும்	176	10.00	**6.00**
2. சிலப்பதிகாரம்- மூலமும் தெளிவுரையும்	500	45.00	**35.00**
3. மணிமேகலை- மூலமும் தெளிவுரையும்	437	45.00	**35.00**
4 பழமொழி நானூறு - மூலமும் தெளிவுரையும்	192	15.00	**10.00**
5. திருக்குறள்-நாமக்கல் கவிஞர் உரையுடன்	284	20.00	**10.00**
6. பொய்மான் கரடு, கள்வனின் காதலி, மகுடபதி, தியாகபூமி - கல்கி	1001	130.00	**78.00**
7. நாயன்மார் வரலாறு- திரு.வி.க.	334	40.00	**28.00**
8. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - திரு.வி.க.	480	45.00	**30.00**
9. வாழ்விக்க வந்த காந்தி- தமிழில் : ஜெயகாந்தன்	272	40.00	**25.00**
10. நாமக்கல் கவிஞர் பாடல்கள்	541	60.00	**30.00**
11. கீதைப்பேருரை	568	60.00	**30.00**

★ நேரில் பெற : எமது புதிய விற்பனை நிலையத்தில் சலுகை விலையினை மட்டும் ரொக்கமாகச் செலுத்தி நூல்களை உடனே பெறலாம். நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை இடைவேளையின்றி.

★ தபாலில் பெற : கடிதம் மூலம் தொடர்பு கொள்க. விபரம் தெரிவிக்கின்றோம்.

புதிய விற்பனை நிலையம் : வர்த்தமானன் பதிப்பகம்
40, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை -17. (உஸ்மான்ரோடு- கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

கோவையில், ஸ்டேட் பேங்க் சாலையில் அமைந்துள்ள அண்ணாமலை அரங்கில் (சாந்தி தியேட்டர் அருகில் - ஹோட்டல் ஆரியாஸ் மாடியில்) **விஜயா பதிப்பகம்** நடத்தும் புத்தகக்கண்காட்சியில் இதே சலுகை விலையில் நூல்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சலுகை 31.5. 2003 அல்லது ஸ்டாக் உள்ள வரை மட்டுமே !

மோதும் எருதுகள்

பலவேசம் கோஷ்டியை வெளியேற்றிவிட்டு, 'அப்பாடா' என்ற பெருமூச்சுடன் விளக்குமாறை எடுத்து பெருக்க ஆரம்பித்தாள்.

"ஆமா, வீட்ல சேர்ந்த குப்பையெல்லாம் நீக்கியாச்சுல்ல, செண்பகத்துக்குப் பெரிய நிம்மதி வந்தாச்சாக்கும்" நக்கலாகக் கேட்டுக் கொண்டு வந்தான் கண்ணன்.

"ஒரு ஆம்பளைக்குப் பொழைப்பு பிரச்னை தீர்ந்து போச்சுல்ல. இனிமே என்ன, அவங்க அவங்க காரியங்களைப் பார்த்துட்டுப் போக வேண்டியதுதானே?" என்று புன்னகை செய்தாள் செண்பகம்.

"மத்தவங்ககிட்ட பேசும்போது தெளிவா பேசுற. எனக்காகப் பேசும்போது என்னைக் கவுக்குறமாதிரி பேசுற. அதை மத்தவங்களும் ஏத்துக்குறாங்க."

"உங்க நல்லதுக்காகச் சொல்றேன்னு எல்லாரும் புரிஞ்சுக்குறாங்க. நீங்க மனசுக்குள்ள வேறே எதையோ போட்டுக் குழம்பிட்டுயிருக்கிங்க. அதனாலதான் உங்களுக்குக் கோபம் வருது."

"உடனே வெட்கத்துடன் கண்ணன், "நான் மாமா வீட்ல கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக வந்தேன். அதை விட்டுப்புட்டு ஒரு கழுசடை அயோக்கியன்கிட்ட என்னை தள்ளப்பாக்குறே." என்றான்.

"எங்க அப்பாக்கிட்ட இருக்குற சொத்தும் உங்களுக்கு உரிமைப்பட்டதுதான். அதைக் கைப்பற்றி நீங்க பயன்படுத்துறத நினைச்சு நடுங்குறீங்க. எதிர்காலத்துல எப்படிக் காப்பாத்தறதுன்னு பயப்படுறீங்க. அதுக்குக் காரணம் உங்க ஆத்ம பலம் செத்துப் போச்சு" என்ற செண்பகம் நேரே வீட்டுக்குள் நுழைந்தாள்.

இரண்டு சமபல எருது பொம்மைகளை எடுத்துக் கொண்டு வந்து தன் அத்தை மகன் முன்னால் வைத்தாள். பின் அதை எல்லோரிடமும் காட்டினாள்.


"இரண்டு சமபல பொம்மைகள்தானே" என்று கேட்டாள்

சிலுவைக் கருப்பட்டி

தாமரை மணாளன்

எல்லாரும் தலை ஆட்டினார்கள். பின் பக்கத்திலிருந்த கத்தியலை எடுத்துப் படாரென்று ஒரு எருதின் நெஞ்சில் அடித்தாள். அது சில்லி சில்லியாக உடைந்தது. மற்றவர்கள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அத்தான், இரண்டு சமமான எருதுகளில் ஒன்று பலவீனமானதுக்குக் காரணம் என்ன? அது மனத்துணிச்சலை இழந்துவிட்டது. இதனால் சமமான எதிரியைச் சந்திக்க முடியாமல் நொறுங்கிவிட்டது. நான் அடிச்ச அடிக்கே இப்படி நொறுங்கிப் போனால் இன்னொருவர் வஞ்சத்துடன் அடித்தால் என்ன ஆகும்? அதுதான் ஓர் ஆண் தைரியமாக இருக்க வேண்டிய





மறைந்த எழுத்தாளர் தாமரை மணாளனுக்கு 'கல்கி' அஞ்சலி செலுத்துகிறது. தெள்ளு நடையில் அவர் எழுதி வந்த 'சில்லுக்கருப்பட்டி' தொடர், திட்டமிட்டபடி தொடரும்.

(ஆசிரியர்)

இடம். நீங்கள் மட்டும் பிரகாசமாகச் செயல்பட்டால் உங்கள் தங்கை செல்வியைத் தண்டபாணிக்கே திருமணம் செய்து வைத்து அவன் தலைமுடியைப் பிடித்து உங்கள் தங்கையிடம் கொடுத்துவிடலாம்'' என்றாள் செண்பகம், கிளர்ச்சியூட்டும் விதமாக.

எல்லாரும் செண்பகத்தை அதிசயமாகப் பார்த்தார்கள். வீட்டுக்குள் இருக்கும் செல்வி என்னும் சின்னப் பெண்ணை, செண்பகம் வேண்டுமென்றே பேச்சில் இழுக்கிறாளே! அதன் பின்னணியில் ஏதேனும் காரணம் இருக்குமோ, என்று ஆவேசத்துடன் குரலை உயர்த்தினான் கண்ணன்.

"ஏன் செண்பகம், என் தங்கச்சி நிம்மதியா வீட்டுலே இருக்கிறது பிடிக்கலையா? அது அந்த பொண்ணுக்கு நல்லதா முடியுமா?" என்று சீறினான் கண்ணன்.

"ஒரு பொண்ணு சிறப்பா வாழறதும் தைரியமா வாழ்க்கை நடத்துறதும் அவ மனசைப் பொறுத்தது. ஆனால் ஊர் உலகத்துல அயோக்கியன், உலக அளவுல அயோக்கியன் என்று சொல்லப்பட்ட பல பேருக்கு மஹா உத்தமி மனைவியா கிடைச்சிருக்கு. இராவணனுக்கு மண்டோதரி, வாழ்க்கைப்படலையா? இப்படிப் பல பேர். வாழ்க்கையை தன்னம்பிக்கையுடன், மனோதிடத்துடன் நடத்துபவளுக்கு என்றும் தோல்வியே இல்லை. கல்யாணம்ங்கிறது அவங்க அவங்க பிரச்னை. எதிர் நீச்சல் அடிச்சா வெற்றி கிடைக்கும். ஜெயத்துல மிதக்கலாம். இல்லைன்னா கரையில் இருந்து விரல் சூப்பிக்கிட்டுப் பார்க்க வேண்டியது தான். இதுக்குமேல ஒண்ணு நான் சொல்றதுக்கு இல்ல. உன் தைரியத்தை வைச்சு, உன் தங்கச்சியை தண்டபாணிக்கோ, இல்லை அவனைவிட பணக்காரனுக்கோ கட்டிக் கொடுங்க அல்லது உங்க இஷ்டம்."

கண்ணனும் ராமக்கனி அம்மாளும் வீட்டுக்குள் சென்றனர். வாசலிலேயே நின்று இவர்கள் பேசுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பூமணி அம்மாள். அவள் முகத்தில் மினுமினுப்பான சபல சந்தோஷம் பரவிக் கொண்டிருந்தது. 'இந்தப் பணக்கார வீட்டுச் சம்பந்தம் நம் பொண்ணுக்கு ஏற்பட்டால், நமக்கும் பலம்தானே, இது புரியாமல் கண்ணன் சும்மா வாயைப் போட்டு அலம்பிக் கொண்டிருக்கிறான்' என்று பூமணியம்மாள் மனசுக்குள் அரற்றிக்கொண்டு நின்றாள்.

கிட்டத்தட்ட அதே வேளையில் சொகுசு அக்காவிடம் கடிகடியென்று கடித்தான் தண்டபாணி.

"உங்களை மாதிரி கிழடுகளுக்கெல்லாம் புத்தி இருக்காதா? என்ன காரியத்துக்கு செண்பகம் வீட்டுக்குப் போனீங்க? போய்ப் பார்க்கிறது. முன்னே பின்னே கலாட்டா பண்ணினா, அவளைத் தூக்கி நம்ம கார்ல போட்டு மெட்ராஸுக்குத் தூக்கிட்டுப் போக வேண்டியதுதானே? நாம ஒழுங்கா நடந்தா மட்டும் யோக்கியன்னு சொல்லிடப் போறாங்களா? 'அம்மா அம்மா' என்று சொன்னால், அந்த செண்பகம் தலைக்கு மேல ஏறுது." என்று தண்டபாணி சீறிக் கொண்டே போனான்.

"அரிவாளை நம்பு! அந்த கத்திரிக்காய்ப் பொண்ணை காலுக்குள்ள வைச்சு நசுக்கிப் புடலாம். ஆத்திரப்படாதே!" என்றாள் சொகுசு அக்கா.

"சொகுசு அக்கா, எங்க அப்பா கண்ணனை அழைச்சுட்டுப் போய் ஒரு கடையில உட்கார வைக்கிறேன்றாரே... உண்மையில அந்தக் கடையை ருத்ரம்மா என்ற பொண்ணுக்கு நான் கொடுத்துட்டேன். அது எங்க அப்பனுக்குத் தெரியாது. அந்த பத்திர கண்டிஷன்லதான் அவ மசிஞ்சா. இப்ப எல்லா விவகாரமும் ருத்ரம்மா அப்பன் பீமராஜுவுக்குத் தெரியும். அந்த சொத்தோட நிழல்ல காத்துப்பட்டாக்கூட, பீமராஜு பொங்கி எழுந்துடுவான். அவனுக்குக் கை கால் எடுக்குறதுதான் கஷ்டம். உயிரை வாங்குறது சுலபம்" என்றான் தண்டபாணி ஆயாசத்துடன்.

(தொடரும்)



எழுத்தாளர் **திருப்பூர் கிருஷ்ணனின்** அண்ணா
எம்.எஸ்.எஸ். அண்ட் கோ ஆடிட்டர் **எஸ்.சுப்பிரமணியனின்**
புதல்வர் **தனஞ்ஜயனுக்கும்** தென்காசி பேராசிரியர்
ராமசுப்பிரமணியன் புதல்வி **விஜிக்கும்** அண்மையில்
திருப்பூரில் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



சிவகாமியின் சபதம்

மூன்றாம் அத்தியாயம்

ருத்ராச்சாரியார்

காஞ்சி நகரமானது முன்னம் மகேந்திரவர்ம சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்ததுபோல் கலைமகளும் திருமகளும் குதூகலமாகக் கொலு வீற்றிருக்கும் பெருநகரமாக இப்போது விளங்கியது.

இருபுறமும் கம்பீரமான மாடமாளிகைகளையுடைய விசாலமான வீதிகளில் எப்போது பார்த்தாலும் 'ஜே ஜே" என்று ஜனக் கூட்டமாயிருந்தது. மாடு பூட்டிய வண்டிகளும் குதிரை பூட்டிய ரதங்களும் மனிதர் தூக்கிய சிவிகைகளும் ஒன்றையொன்று நெருங்கி வீதியையும் அடைத்தன.

ஸ்திரீகளும் புருஷர்களும் விதவிதமான வர்ணப் பட்டாடைகளும் ஆபரணங்களும் அணிந்து அங்குமிங்கும் உலாவினார்கள்.

ஆலயங்களிலே பூஜாகாலத்து மணி ஓசையும் மங்கள வாத்தியங்களின் கோஷமும் இடைவிடாமற் கேட்டுக் கொண்டிருந்தன.

சம்ஸ்கிருத கடிகைகளில் வேத மந்திரங்களின் கோஷமும் சைவத் தமிழ் மடங்களில் நாவுக்கரசரின் தெய்வீகமான தேவாரப் பாசுரங்களின் கானமும் எழுந்தன.

சிற்ப மண்டபங்களில் கல்லுளியின் 'கல் கல்' ஒலியும், நடன மண்டபங்களில் பாதச் சதங்கையின் 'ஜல் ஜல்' ஒலியும் எழுந்து கலைப்பற்றுள்ளவர்களின் செவிகளுக்கு இன்பமளித்தன.

வீதிகளை நிறைத்திருந்த ஜனக்கூட்டத்தில் இடையிடையே கத்தி கேடயங்களைத் தரித்த போர்வீரர்கள் காணப்பட்டார்கள். அவர்கள் எதிர்ப்புறமாக வரும் வீரர்களைச் சந்திக்கும்போதெல்லாம் ஒருவருடைய கத்தியை ஒருவர் தாக்கி முகமன் கூறிக் கொண்டார்கள்.

இவ்வாறு வீரர்கள் சந்திக்கும் இடங்களிலெல்லாம் ஜனங்கள் கூடி, "மாமல்லர்

அமரர் கல்கி

வாழ்க!", "புலிகேசி வீழ்க!" "காஞ்சி உயர்க!", "வாதாபி அழிக!" என்ற கோஷங்களை எழுப்பினார்கள்.

கலகலப்பு நிறைந்த காஞ்சி நகரின் வீதிகளின் வழியாக மாமல்ல சக்கரவர்த்தியின் ரதம் சென்று, பிரசித்தி பெற்ற ருத்ராச்சாரியாரைத் தலைமை ஆசிரியராகக் கொண்ட சம்ஸ்கிருத கடிகையின் வாசலை அடைந்து நின்றது.

உள்ளேயிருந்து ஆசிரியரும் மாணாக்கரு மாகச் சிலர் வெளிவந்து "ஜய விஜயீ பவ!" என்று கோஷித்துச் சக்கரவர்த்தியை வர வேற்றார்கள். மாமல்லரும், மானவன்மனும் கடிகைக்குள்ளே பிரவேசித்தார்கள்.

அந்த நாளில் பரத கண்டத்திலேயே மிகப் பிரபலமாக விளங்கிய அந்தச் சர்வ கலாசாலையின் கட்டடம் மிக விஸ்தார மாயிருந்தது. அழகான வேலைப்பாடமைந்த தூண்கள் தாங்கிய மண்டபங்களிலே ஆங்காங்கு வெவ்வேறு வகை வகுப்புக்கள் நடந்து கொண்டிருந்தன.

ரிக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம்ஆகியவற்றை வெவ்வேறு மண்டபங் களில் தனித்தனியாக வித்தியார்த்திகள் அத்தியயனம் செய்து கொண்டிருந்தார்கள்.

வேதங்களிலும் வேதாகமங்களிலும் பூரணப் பயிற்சியுள்ள ஆசிரியர்கள் அந்தக் காலத்தில் காஞ்சி கடிகையிலேதான் உண்டு என்பது தேசமெங்கும் பிரசித்தமாயிருந்தது.

இன்னும் வெவ்வேறு மண்டபங்களில் சாஸ்திர ஆராய்ச்சியும், காவிய படனமும் நடந்து கொண்டிருந்தன.

ஒரு மண்டபத்தில் வியாகரண சாஸ் திரம் படித்துக் கொண்டிருந்தார்கள். மற் றொரு மண்டபத்தில் வால்மீகி இராமா யணம் படிக்கப்பட்டது. இன்னொரு மண் டபத்தில் பகவத் கீதை பாராயணம் நடந் தது. வேறொரு மண்டபத்தில் காளிதாசனு டைய சாகுந்தல நாடகத்தை மாணவர்கள் நாடகமாக நடித்துக் கொண்டிருந்தார்கள்.

இதெல்லாவற்றையும் பார்த்துக் கொண் டும் கேட்டு கொண்டும் மாமல்லரும் மானவன்மனும் மேலே சென்றார்கள்.

கடைசியாக அவர்கள் வந்து சேர்ந்த மண்டபம், சிறிதும் சந்தடியில்லாத நிசப்தமான ஒரு மூலையில் இருந்தது. அந்த மண்டபத்தின் மத்தியில் போட்டிருந்த கட்டிலில், கிருஷ்ணாஜினத்தின் மீது ஒரு தொண்டுக் கிழவர் சாய்ந்து படுத்திருந்தார். தும்பை மலர் போல நரைத்திருந்த அவரு டைய தாடி நீண்டு வளர்ந்து தொப்புள் வரையில் வந்திருந்தது. அவருடைய சடாமகுடம் வெள்ளை வெளேரென்று இலங்கியது. இந்தக் கிழவர் தான் அந்தப் புகழ் பெற்ற சம்ஸ்கிருத கடிகையின் தலை வர் ருத்ராச்சாரியார். அவர் படுத்திருந்த கட்டிலுக்கருகில் ஆசிரியர்கள் நாலு பேர் தரையிலே உட்கார்ந்து தைத்திரீய உபநிஷ தம் பாடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாமல்லரின் வருகையைப் பார்த்ததும் அவர்கள் பாடத்தை நிறுத்திவிட்டு எழுந்து சக்கரவர்த்திக்கு வணககம் செலுத்திவிட்டு அப்பால் சென்றார்கள்.

"பல்லவேந்திரா! தங்களை எழுந்து வர வேற்பதற்கும் அசக்தனாகப் போய் விட் டேன். மன்னிக்க வேணும். விஜயதசமி யன்று புறப்படுகிறீர்கள் அல்லவா?" என்று ஆச்சாரியார் கேட்டார்.

"புறப்படுவதற்கு எல்லா ஆயத்தமும் ஆகிவிட்டது. ஆனால், பாண்டிய குமாரன் இன்னும் வந்து சேரவில்லை. வராக நதிக் கரையிலேயே தங்கியிருக்கிறான். ஏதோ தேக அசௌக்கியம் நேர்ந்து விட்டதாம்!"

"பிரபு! பாண்டியன் வந்தாலும், வரா விட்டாலும் நீங்கள் விஜயதசமியன்று கிளம்பத் தவற வேண்டாம். இந்த விஜய தசமி போன்ற கிரக நட்சத்திரச் சேர்க்கை ஆயிரம் வருஷத்துக்கு ஒரு தடவைதான் ஏற்படும். இராமபிரான் இலங்காபுரிக்குப் படையெடுத்துப் புறப்பட்டது இம்மாதிரி நாளிலேதான்."

"அப்படியானால் இராமபிரானைப் போலவே நானும் வெற்றியுடன் திரும்புவேன் அல்லவா?" என்று மாமல்லர் கேட்டார்.

"அவசியம் விஜய கோலாகலத்துடன் திரும்புவீர்கள். ஆனால் அதைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிட்டாது."

"குருதேவா! அப்படிச் சொல்லக் கூடாது!" என்று மாமல்லர் பரிவுடனே கூறி னார்.

"அதனால் என்ன? நான் இவ்வுலகை விட்டு மேல் உலகம் போன போதிலும் இந்தக் காஞ்சியையும் கடிகையையும் என்



னால் மறந்திருக்க முடியாது. மாமல்லரே! தாங்கள் வாதாபியிலிருந்து திரும்பிவரும் நாளில் நான் தங்கள் தந்தை மகேந்திர சக்கரவர்த்தியையும் அழைத்துக் கொண்டு இந்தக் கடிகைக்கு மேலே வந்து நிற்பேன். நாங்கள் இருவரும் தேவலோகத்துப் பாரிஜாத மலர்களைத் தூவித் தங்களை வரவேற்போம்" என்று ருத்ராச்சாரியார் கூறியபோது மாமல்லரின் கண்கள் கலங்கிக் கண்ணீர் கசிந்தது.

நான்காம் அத்தியாயம்

நாவுக்கரசர்

ஏகாம்பரேசுவரர் கோயில் சந்நிதியில் இருந்த சைவத் திருமடத்திலும் அன்று மிக்க கலகலப்பாக இருந்தது.

திருநாவுக்கரசர் பெருமான் சில நாளாக அந்த மடத்தில் எழுந்தருளியிருந்தார். அப்பெரியாரின் இசைப் பாடல்களை மாணாக்கர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். கண்களில்ஆனந்தக் கண்ணீர் பெருக நாவுக்கரசர் அப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு அருகில் அமர்ந்திருந்த ஆயனச் சிற்பியின் கண்களும் கசிவுற்றிருந்தன.

ஏகாம்பரேசுவரர் கோயிலில் உச்சிக் கால பூஜைக்குரிய மணி அடித்தது; பேரிகை முழக்கமும் கேட்டது.

மாணாக்கர்கள் பதிகம் பாடுவதை நிறுத்தி உணவு கொள்வதற்காகச் சென்றார்கள்.

நாவுக்கரசரும் ஆயனரும் மட்டும் தனித்திருந்தார்கள்.

"சிற்பியாரே! பத்து வருஷத்துக்கு முன்னால் இதே இடத்தில் உம்முடைய புதல்வி அபிநயம் பிடித்தாள். அந்தக் காட்சி என் கண் முன்னால் இன்னமும் அப்படியே நிற்கிறது. 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்று மாணாக்கர்கள் சற்று முன் பாடியபோது உம் புதல்வியை எண்ணிக் கொண்டேன். என்னை அறியாமல் உடனே கண்ணீர் பெருகிவிட்டது" என்றார்.

"அடிகளே! எனக்கும் அந்த நினைவு வந்தது; அன்றைக்கு நாங்கள் புறப்படும் போது என்னைப் பின்னால் நிறுத்தித் தாங்கள் எச்சரித்தபடியே நடந்துவிட்டது!"

"ஆம், ஆயனரே! எனக்கும் அது ஞாபகம் வருகிறது. 'இப்பேர்ப்பட்ட தெய்வீகக் கலைத்திறமை பொருந்திய பெண்ணுக்கு உலக வாழ்க்கையில் கஷ்டம் ஒன்றும் வராமல் இருக்க வேண்டுமே!' என்ற கவலை ஏற்பட்டது. அதைத்தான் உம்மிடம் சொன்னேன்."

"சுவாமி, தங்களுடைய திரு உள்ளத்தில் உதயமான எண்ணம் எவ்வளவு உண்மையாய்ப் போய்விட்டது! சிவகாமிக்கு வந்த கஷ்டம் சொற்பமானதா? கனவிலும் எண்ணாத பேரிடியாக அல்லவா என் தலையில் விழுந்து விட்டது? பச்சைக் குழந்தையாகத் தொட்டிலில் கிடந்தபோதே அவளை என்னிடம் ஒப்புவித்துவிட்டு அவள் தாயார் கண்ணை மூடிவிட்டாள். அது முதல் பதினெட்டு வயது வரையில் என் கண்ணின் மணியைப் போல் அவளைப் பாதுகாத்தேன்; ஒரு நாளாவது நாங்கள் ஒருவரையொருவர் பிரிந்து இருந்ததில்லை. அப்படி வளர்ந்த குழந்தையைப் பிரிந்து இன்றைக்கு ஒன்பது வருஷமாயிற்று. இன்னமும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன். அடிகளே! ஒரு பாவமும் அறியாத எங்களைக் கருணைக் கடலான பெருமான் ஏன் இத்தகைய சோதனைக்கு ஆளாக்கினார்? நாங்கள் இறைவனுக்கு என்ன அபசாரம் இழைத்தோம்?" என்று ஆயனர் கேட்டபோது, அவருடைய கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

"ஆயனரே! வருந்த வேண்டாம். இறைவனுடைய திருவுள்ளத்தின் இரகசியங்களை மானிடர் அறிவது கடினம். அடியேனும் என் மனமறிந்து இந்தப் பூவுலகில் யாருக்கும் எந்தத் தீமையும் செய்ததில்லை. ஆயினும் இந்தச் சட உடலும் எத்தனையோ துன்பங்களை அநுபவித்தது. சிற்பியாரே! அடியேன் கண்ட உண்மையை





உமக்குச் சொல்கிறேன். நாம் துன்பம் என்று நினைப்பது உண்மையில் துன்பம் அல்ல! இன்பம் என்று கருதுவது உண்மையில் இன்பம் அல்ல. இன்ப துன்ப உணர்ச்சியானது உலக பாசத்தினால் ஏற்படுகிறது. இந்தப் பாசத்தைத்தான் பெரியோர் மாயை என்கிறார்கள். மாயை நம்மைவிட்டு அகலும்போது இன்பமும் இல்லை, துன்பமும் இல்லையென்பதை அறிவோம். அந்த இறைவனுடைய திருவருளாகிய பேரின்பம் ஒன்றுதான் மிஞ்சி நிற்கக் காண்போம்..."

"சுவாமி! தங்களுடைய அமுத மொழிகளில் அடங்கிய உண்மையை நான் உணர்கிறேன். ஆயினும், என்னை விட்டுப் பாசம் அகலவில்லையே? என்ன செய்வேன்?"

"பாசம் அகலுவதற்கு வழி இறைவனை இறைஞ்சி மன்றாடுவதுதான்!" என்றார் நாவுக்கரசர்.

"நான் மன்றாடவில்லையா? மன்றாடியை எண்ணி, இடை விடாமல் மன்றாடிக் கொண்டுதானிருக்கிறேன். ஆயினும் என் மகள் மேல் உள்ள பாசம் விடவில்லையே! ஈசனைப் பிரார்த்திக்க நினைக்கும்போதெல்லாம் தூர தேசத்திலே, பகைவர்களின் கோட்டையிலே சிறையிருக்கும் என் மகளின் நினைவுதானே வருகிறது? "இறைவா! என் மகளைக் காப்பாற்று. என் வாழ்நாள் முடிவதற்குள்ளாகச் சிவகாமியை இந்தக் கண்கள் பார்க்கும்படி கருணை செய்!" என்றுதானே வரங் கேட்கத் தோன்றுகிறது! என்ன செய்வேன்!" என்று ஆயனர் கூறி விம்மினார்.

"வேண்டாம், ஆயனரே! வருந்த வேண்டாம்!" என்று அவருக்கு ஆறுதல் கூறினார், உழவாரப்படை தரித்த உத்தமர். மேலும், "உமது மனோரதந்தான் நிறைவேறப் போகிறதே. மாமல்ல சக்கரவர்த்தி வாதாபி படையெடுப்புக்குப் பெரும் படை திரட்டியிருக்கிறாரே? இறைவன் அருளால் உம் மகள் திரும்பி வந்து சேருவாள். கவலைப்பட வேண்டாம். அதுவரையில் நீர் என்னுடன் இந்த மடத்திலேயே தங்கியிருக்கலாமே? அரண்ய வீட்டில் தனியாக ஏன் இருக்க வேண்டும்?" என்றார்.

"அடிகளே! மன்னிக்க வேண்டும். பல்லவ சைனியத்தோடு நானும் வாதாபிக்குச் செல்கிறேன்..." என்று ஆயனர் கூறியது வாகீசருக்குப் பெரும் வியப்பை அளித்தது.

"இதென்ன, ஆயனரே? போர்க்களத்தின் பயங்கரங்களைப் பார்க்க ஆசை கொண்டிருக்கிறீர்களா? மனிதர்களின் இரத்தம் ஆறுபோல் ஓடுவதைப் பார்க்க விரும்புகிறீரா? வெட்டப்பட்டும் குத்தப்பட்டும் கால் வேறு, கை வேறு, தலை வேறாகக் கிடக்கும் சடலங்களைப் பார்க்கப் பிரியப்படுகிறீரா?" என்று பெருந்தகையார் வினவினார்.

ஆயனர் சிறிது வெட்கமடைந்தவராய், "இல்லை அடிகளே! அதற்காகவெல்லாம் நான் போகவில்லை. என் மகளைப் பார்த்து அழைத்து வரலாமே என்ற ஆசையினாலேதான் போகிறேன்" என்றார்.

இந்தச் சமயத்தில் மடத்தின் வாசற்புறத்திலிருந்து சில ஸ்திரீ புருஷர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நமக்கு ஏற்கெனவே தெரிந்தவர்கள்தான்.

சேனாதிபதி பரஞ்சோதி, அவருடைய மனைவி உமையாள், நமசிவாய வைத்தியர், அவருடைய சகோதரி ஆகியவர்கள் உள்ளே வந்து நாவுக்கரசருக்கு நமஸ்கரித்தார்கள்.

எல்லாரும் உட்கார்ந்த பிறகு, நமசிவாய வைத்தியர், "சுவாமி! விடை பெற்றுப் போக வந்தேன்" என்றார்.


"ஆகா! ஊருக்குத் திரும்பிப் போகிறீர்களா? எனக்குக் கூடத் திருவெண்காட்டு இறைவனைத் தரிசிக்க வேண்டுமென்றிருக்கிறது. மறுபடியும் சோழ நாட்டுக்கு யாத்திரை வரும்போது தங்கள் ஊருக்கு வருவேன்" என்றார் வாகீசர்.


"இல்லை, அடிகளே! நான் திருவெண்காட்டுக்குப் போகவில்லை. வடக்கே வாதாபி நகருக்குப் போகிறேன்."

"இது என்ன! காஞ்சி நகரிலே ஒருவருமே மிஞ்சமாட்டார்கள் போலிருக்கிறதே? ஆயனர்தாம் அவருடைய மகளை அழைத்து வருவதற்காகப் போகிறார்; நீர் எதற்காகப் போகிறீர் வைத்தியரே?"


"வைத்தியம் செய்வதற்குத்தான் போகிறேன். சுவாமி! சைனியத்தோடு ஒரு பெரிய வைத்தியர் படையும் போகிறது.

அதன் தலைவனாக நானும் போகிறேன். சளுக்கர்கள் தர்ம யுத்தம் அதர்மயுத்தம் என்ற வித்தியாசம் இன்றி யுத்தம் செய்கிறவர்கள். முனையில் விஷம்





அருள்வாக்கு



நிவேதனம்

பகவானுக்குக் காட்டி விட்டுச் சாப்பிட வேண்டு மென்பது முக்கியம். வேறே பூஜை என்ற பெரிசாகப் பண்ணாவிட்டாலும் நமக்குக் கையைக் கொடுத்து அந்தக் கையாலேயே சமைத்துக் கொள் ளணும் என்று புத்தியைக் கொடுத்து ஸ்வயம்பாகம் பண்ணிக் கொள்ள வைத் தவனுக்கு அதைக் காட்டி, நிவேதனமாக்கி, அதில் இருக்கக்கூடிய கொஞ்சம் நஞ்சம் தோஷத்தையும் போக்கி விட வேண்டும்.

தெலுங்கு தேசத்தில் ஆயிரம் பேர் ஸமாராதனை என்று உட்கார்ந்தாலும், ப்ராணாஹுதி பண்ணுவதற்கு முன்னாடி ஒவ்வொருத்தனும் இஷ்ட தெய்வத்தை நினைத்து ஸ்வாமி நைவேத்யம் பண்ணித் தான் சாப்பிடுவான்.

வேறே மூர்த்தி, விக்ரஹம் இல்லாவிட் டாலும், பிரத்யக்ஷ பகவானாயிருக்கிற ஸூர் யனுக்காவது நைவேத்யம் செய்யணும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

ஏற்றிய வாள்களையும் வேல்களையும் உப யோகிப்பவர்கள். நம் மகேந்திர சக்கர வர்த்தி மீது விஷக் கத்தி பாய்ந்த செய்தி தங்களுக்குத் தெரியுமே? சக்கரவர்த்திக்குச் சிகிச்சை செய்தபோது அந்த விஷத்துக்கு மாற்றுக் கண்டுபிடித்தேன். அதன் பயனாக, யுத்தத்துக்கு நானும் வர வேண்டுமென்று பல்லவ சேனாதிபதியின் கட்டளை பிறந் தது!" என்று கூறிய நமசிவாய வைத்தியர், சேனாதிபதி பரஞ்சோதியைப் பெருமை யுடன் பார்த்தார்.

"ஆ! இந்தப் பிள்ளைதான் தேசமெல் லாம் பிரசித்தி பெற்ற பல்லவ சேனாதி பதியா?" என்று கூறித் திருநாவுக்கரசர் பரஞ்சோதியை உற்றுப் பார்த்தார். "இவனுடைய முகத்தில் சாத்விகக் களை விளங்குகிறதே? மகோந்நதமான சிவ பக்திப் பெருஞ் செல்வத்துக்கு உரியவனாகக் காணப்படுகிறானே? இவன் ஏன் இந்த கொலைத் தொழிலில் பிரவேசித்தான்?" என்று வினவினார்.

இதைக் கேட்டதும் நமசிவாய வைத் தியரும் அவருடைய சகோதரியும் ஒரு வரையொருவர் பார்த்துப் புன்னகை புரிந் தார்கள். உமையாளும் தன் கணவனுடைய முகத்தைச் சிறிது நாணத்துடன் பார்த்துக் குறுநகை புரிந்தாள். பரஞ்சோதியின் முகத் திலும் புன்னகை தோன்றவில்லையென்று நாம் சொல்ல முடியாது.

"சுவாமி! தங்களுடைய திருமடத்தில் சேர்ந்து தமிழ்க்கல்வி கற்பதற்காகத்தான் இவனைப் பன்னிரண்டு வருஷத்துக்கு முன் னால் காஞ்சிக்கு அனுப்பினோம். விதி யானது இவனை இந்த நிலைக்குக் கொண்டு சேர்த்தது. இவனோடு என் னையும் சேர்த்துக் கட்டிப் போர்க்களத் திற்கு இழுக்கிறது" என்றார்.

"நாவுக்கரசர் பரஞ்சோதியை இன் னொருமுறை உற்றுப் பார்த்துவிட்டு, "இவனையா விதி இழுத்துச் செல்கிறது என்கிறீர்கள்! விதியையே மாற்றி அமைக்கக் கூடிய உறுதி படைத்தவன் என்று இவன் முகக் களை சொல்கிறதே?" என்றார்.

தளபதி பரஞ்சோதி அந்தக் கணமே எழுந்து திருநாவுக்கரசரின் அடிபணிந்து, "குருதேவரே! தங்களுடைய திருவாக்கை ஆசிமொழியாகக் கொள்கிறேன்!" என்று சொன்னார்.

பரஞ்சோதியின் தாயார் அப்போது எழுந்து நின்று வணக்கத்துடன், "சுவாமி! முன்னொரு சமயம் தாங்கள் திருவெண் காட்டுக்கு வந்திருந்தபோது இவன் தங்களை நமஸ்கரித்தான். 'சீக்கிரம் விவாகம் ஆக வேண்டும்' என்று கூறினீர்கள். அதன்படியே விவாகம் நடந்தது" என்று சொல்லி நிறுத்தினாள்.

"என் வாக்குப் பலித்தது பற்றி மிகவும் சந்தோஷம், அம்மா!" என்றார் வாகீசப் பெருமான்.

"தங்களுடைய திருவாக்கிலே எது வந்தாலும் அது பலிக்கும். கருணை கூர்ந்து இவனுக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும் படி ஆசீர்வதிக்க வேண்டும்" என்று அந்த மூதாட்டி கூறினாள்.

திருநாவுக்கரசர் மலர்ந்த முகத்துடன் பரஞ்சோதியையும் உமையாளையும் பார்த்தார். "கதைகளிலும் காவியங்களிலும் பிரசித்தி பெறப்போகும் உத்தமமான புதல்வன் இவர்களுக்கு உதிப்பான்!" என்று அருள் புரிந்தார். (தொடரும்)



கூட்டணிக்குக் கிடைத்த தோல்வி!

இந்திரனும் தேவர்களும் சபைக்கு வரும்போது திடீரென்று ஒரு பளீர் மின்னல். தொடர்ந்து ஒரு குரல்: 'அகந்தையும் பெருமையும் கொள்ள வேண்டாம்' என்று! அப்படி யாராவது சவால் மாதிரி சொல்லி விட்டால், சும்மா இருந்து விடுவதா? கண்ணுக்குத் தெரியாத அந்த எதிரியை எதிர்த்துப் போருக்குத் தயாராகிறார்கள். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். எனவே எதிரி ஒரு புல்லை அனுப்புகிறார். வாயுவும், அக்னியும், வருணனும் தனித்தனியாக அந்தப் புல்லை ஒரு கை பார்க்கிறார்கள். முடியவில்லை! கூட்டணி அமைத்துப் போரிடுகிறார்கள். அதிலும் தோற்றுப் போகிறார்கள்.

கண்ணுக்குப் புலப்படாத அந்த எதிரி, ஆதிபராசக்திதான். இதை யாராவது நம் தமிழ்நாட்டு அரசியலோடு அநாவசியமாகப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் இது கேனோபனிஷத்தில் வருகிற சம்பவம்!

'தத்வலோகா' என்ற சிருங்கேரி பீட மாதப் பத்திரிகையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது, அனிதா குஹாவின் மாணவிகள் 'சர்வம் சக்தி மயம்' நாட்டிய நாடகத்தை மேடை ஏற்றினார்கள்.

முன்னாள் சென்னை தொலைக்காட்சிக் காரர் டி.எஸ். நாராயணசுவாமி இந்தப் புராண சம்பவத்தை நாட்டிய நாடகமாக வழங்க யாரை அணுகலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, இளம் பரத நாட்டிய குரு அனிதா குஹாவின் பெயரைச் சொன்னாராம் தனஞ்சயன். 'தத்வலோகா' ஆசிரியர் ராமச்சந்திரன் 'ஓகே' சொல்லி விட்டார்!

தம் எழுபது மாணவிகளில் பொருத்த மானவர்களாக இருபத்து மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து, பதினைந்து நாள் இரவு பகல் பாராது ரிகர்சல் பண்ண வைத்தார் அனிதா குஹா.

"இரண்டு மாதங்களில் பண்ண வேண்டியதை, இரண்டே வாரத்தில் செய்ய வேண்டியிருந்தது. அதனால் அவர்கள் அநேகமாக சாப்பாடு, தூக்கம் என்று பார்க்காமல் என்னோடேயே இருக்க வேண்டியிருந்தது" என்கிறார் அனிதா.



"சரண்யா ரங்கநாதன் (பார்வதி), பிரதிபா (சிவன்), சரஸ்வதியாக (ஐச்வர்யா நாராயண சாமி) மூவரையும் போலவே, சாத்விகா (அக்னி), ஜனனி (வருணன்), மேதா ஹரி(வாயு) மூவரையும் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்" என்கிறார்.

மேடையிலேயே நெருப்பைக் காண்பிக்க, ஸ்லைடு புரொஜக்டரை உபயோகித்து, திரை முழுக்க எரிகிற மாதிரி ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் செய்திருக்கிறார். அம்பாள் ஒளிமயமானவள் என்று காண்பிக்க, இருளான பின்னணியில் ஒளி வீசும் பந்தைத் தொங்க விட்டிருக்கிறார். அதே போல் பாற்கடலைக் கடையும் காட்சியையும் பின்னால் வெண் திரையில் காட்டி, பாற்கடலிலிருந்து



• அனிதா குஹா, பத்மா சுப்ரமணியம்

அம்பாள் தோன்றுவதைக் காண்பித்திருக்கிறார். மின் கலைஞர் கோபி இந்த மாதிரி அம்சங்களில் எல்லாம் அசத்தியிருக்கிறார். பி.ஆர். வெங்கடசுப்பிரமணியன் என்பவர் பாடல்களும் எழுதி, மெட்டமைத்து, கோர்டையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

அனிதா குஹாவுக்கு முதல் குரு அம்மா, கார்த்யாயினி. பிறகு குரு கோவிந்தராஜ பிள்ளை. இப்போது பன்னிரண்டு வருடங்களாகச் சென்னையிலேயே நாட்டியப் பள்ளி நடத்தி வருகிறார் அனிதா.

குரு கிருஷ்ண குமாரி நரேந்திரன்தான் இம் மாதிரிப் புராண சம்பவங்களை நாட்டிய நாடகமாக்கி, வெற்றிகரமான ஹவுஸ் ஃபுல் ஷோக்களாக நடத்திக் கொண்டிருக்கிறார். அந்தப் பாதையில் இப்போது குரு அனிதா குஹாவும் சேர்ந்து விட்டார் போல. "எல்லாருக்கும் நிறைய மாணவிகள் சார். எல்லாருக்குமே ஸோலோ சான்ஸ் கிடைக்கிறதில்லையே!" என்கிறார் அனிதா.


— **எஸ்.வி.என்.**

''ரமேஷ், நாம காதலிக்க ஆரம்பிச்ச சமயத்துல தொடங்கிய மெகா சீரியல்கூட முடியப்போவுது. இன்னமும் நம்ம கல்யாணத்தைப் பத்தி பிடிகுடுத்துப் பேசமாட்டேங்கறீங்களே... இது நியாயமா?''

— சாவித்திரி



நடக்குமென் பார்; நடக்கும்!



மேஷம் : ஒரு தினப் போட்டிகள், டெஸ்ட் தொடர்கள் என எதில் இறங்கினாலும் வெற்றி வாகை சூடி விடுகிறது ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி. அதுபோல் நீங்கள் எடுத்த காரியங்களைத் திட்டமிட்டபடி செயல்படுத்தி வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். எதிலும் தெளிவான மனநிலை யுடன் செயல்படுவீர்கள். புதிய தொழில் முயற்சிகளில் இருப்பவர்களுக்கு அனுகூலமான சூழ்நிலை உருவாகும். இதுவரை இருந்து வந்த பொருளாதார நெருக்கடி விலகும். வர வேண்டிய பாக்கி வந்து சேரும்.



ரிஷபம் : 'ஆசை... ஆசை இப்பொழுது..' என்று டூயட் பாடாத குறைதான் உங்களுக்கு. கணவன் - மனைவி உறவு ரொம்ப இனிமையாக இருக்கும். இதுவரை தாமதமாகி வந்த காரியங்கள் மளமளவென்று நிறைவேறும். கோர்ட் வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வரும். புத்தகம், ஸ்டேஷனரி, பதிப்புத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றம் தரும் வாரம். புதிய முயற்சிகள் பலன் தரும்.



மிதுனம் : தூள், சாமி என்று விக்ரம் காட்டில் வெற்றி மழை பொழிவதுபோல. கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு இது அமோகமான வாரம். பெயரும், புகழும் தானாக வந்து சேரும். பண நடமாட்டம் அதிகரிக்கும். அலுவலகத்தில் அனுகூலமான திருப்பம் உண்டாகும். உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். அலுவலக வேலையாக வெளியூர் செல்ல வேண்டியது வரும். அந்தப் பயணத்தாலும் உங்களுக்கு ஆதாயம் கிடைக்கும்.




கடகம் : இந்தியா - பாகிஸ்தான் இடையே மீண்டும் பேச்சு வார்த்தை துவங்கியிருப்பது குறித்து அனைவரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். அதேபோல் இதுவரை முறைத்துக் கொண்டிருந்தவர்கள் மீண்டும் நட்பாக ஒன்று சேரக் கூடிய தருணம் அமையும். இயந்திரம், காண்ட்ராக்ட்ஸ், இண்டஸ்ட்ரீஸ், டிராவல்ஸ் ஆகிய துறைகளில் லாபம் அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் துறையில் அளவான லாபமே கிடைக்கும்.



சிம்மம் : பிரபல ஃப்ரிட்ஜ் விளம்பரத்துக்கு வரும் துறுதுறு ப்ரீத்தி ஜிந்தாவைப் பார்த்தாலே நமக்கும் உற்சாகம் சுறுசுறுப்பு, சந்தோஷம் ஒட்டிக் கொள்கிறது இல்லையா! அதே போல் இந்த வாரம் முழுவதும் உற்சாகத்துக்கும் சந்தோஷத்துக்கும் குறைவிருக்காது. எடுத்த காரியங்களில் வெற்றி நிச்சயம். எதிரிகள் ஓடி ஒளிந்து கொள்வர். வெளிநாட்டிலிருந்து மகன் / மகள் உங்களைப் பார்க்க வருவர். குடும்பத்தில் விருந்து, கேளிக்கை என்று ஒரே மகிழ்ச்சிதான்.



கன்னி : உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி மூலம் இந்தியக் குழுவுக்கு 11.46 கோடி வருமானம் கிடைத்துள்ளது. இதில் மைதானத்தில் இறங்கி விளையாடாத வீரர்களுக்குக்கூட 72 லட்ச ரூபாய் கிடைத்திருக்கிறது. அதேபோல நீங்கள் என்ன தொழில் செய்தாலும் வியாபாரம் 'ஓஹோ'ன்னு போகும். லாபம் கொட்டோ கொட்டென்று கொட்டும். அலுவலகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு தேடி வரும். சிலருக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றமும் கிடைக்கும்.



துலாம் : விபத்துக்குப் பிறகு உடல் நிலை தேறி மீண்டும் உற்சாகமாக வலம் வருகிறார் ஐஸ்வர்யா ராய். அதுபோல் இதுவரை இருந்து வந்த உடல் உபாதைகள் மறையும். நண்பர்கள், உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். சிறுசிறு பிரச்னைகள் வந்தாலும் உங்களது திறமையாலும், புத்திசாலித்தனத்தாலும்




• ரபிபெர்னார்ட் மனைவி பிரமீளாவுடன்

படம் : ஸ்ரீஹரி


எடுத்த காரியங்களில் வெற்றி காண்பீர்கள். புதிய முயற்சிகளைச் சற்றுத் தள்ளிப் போடவும். புதிய சொத்து வாங்க நேரிடும்.



விருச்சிகம் : 'எங்கள் வீட்டில் எல்லா நாளும் கார்த்திகை. எங்கள் நிலவில் என்றும் இல்லை தேய் பிறை' என்று குடும்பத்துடன் சேர்ந்து பாடி, ஆடி சந்தோஷமாக இருக்கப் போகிறீர்கள். அத்துடன் சுபகாரியம் ஒன்றும் நடக்கப் போகுது. மாணவர்களுக்கு வெற்றிகரமான வாரம். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல வாய்ப்பு வரும். இப்பயணங்களால் உங்களுக்கு நன்மை வந்து சேரும்.




தனுசு : சின்ன மேடமுக்கு உயர்ந்த இடத்திலிருக்கும் பெரிய மேடம் தோழியாகக் கிடைத்தது போல் உங்களுக்கும் முக்கியஸ்தர் களின் நட்பு கூடி வரும். அப்புறம் என்ன? இதுவரை தாமதமாகி வந்த காரியங்கள் கிடுகிடுவென வெற்றி நடை போடப் போகுது. சுய தொழில், வியாபாரத்தில் பொருளாதார வளர்ச்சியைக் காண்பீர்கள். பழைய கடன் தொல்லைகள் குறையும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் கூடும்.



மகரம் : சீனாவில் சார்ஸ் பீதி காரணமாக ஆடை ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 15% ஏற்றுமதி இந்தியாவுக்கு அதிகரித்து உள்ளது. அதே போல் உங்கள் தொழிலிலும் உற்பத்தி அதிகரிக்கும். நல்ல லாபம் கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு உடனே திருமணம் நடக்கும். திருமணமானவர்களுக்கு மகப்பேறு பாக்கியம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும்.



கும்பம் : முக்கிய எதிர்க்கட்சிகள், ஆளும் கட்சியின் ஆதரவு இருந்தும் பெண்களுக்கான 33% இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற முடியவில்லை. இருந்தாலும் பெண்களுக்குத் தெளிவான மனநிலையும், தெய்வ பலமும், பொன்-பொருள் சேர்க்கையும் கூடி வரும். மனை, நிலம், ரியல் எஸ்டேட் ஆகிய வகையில் இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் யாவும் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. நல்லவர்கள் நட்பு நன்மையைக் கொண்டு வரும்.



மீனம் : திட்டமிட்டபடி ஜிஎஸ்எல்வி -டி2 ராக்கெட் வெற்றிகர மாக விண்ணுக்குச் செலுத்தப்பட்டது. அதே போல் நீங்கள் திட்டமிடும் காரியங்கள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் உங்கள் சமயோசித புத்தியால் சாமர்த்தியமாகச் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். அதனால் உயர் அதிகாரிகளின் பாராட்டு தாராளமாகக் கிடைக்கும். நீங்கள் எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். ஏற்றுமதி, இறக்குமதி களில் லாபம் கொட்டும். பெண் களுக்கு எல்லா வகையிலும் சிறந்த வாரம்.


அக்னிசர்மா பக்கம்

மே 21 முதல் மே 27 வரை

● டி. சுப்ரமணியன், மேலையூர்.

? பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் இராணி மேரிக் கல்லூரியின் முதல் மாடி வெராண்டா இடிந்து விழுந்ததில் ஊனமுற்ற பெண்ணுக்கு, இப்போது நஷ்டஈடு தொகை வழங்கியுள்ளாரே முதல்வர்?

! அந்த மாணவி நன்றி சொல்ல வேண்டியது கலைஞருக்கு!



• மீண்டும் ஒரு வலம் வரும்....

சம்பவங்களைத் தொடர்ந்து உன்னிப்பாகக் கவனித்து வந்தவர்கள் இதை ஒப்புக் கொள்வார்கள்.

● பொன்விழி, அன்னூர்.

? 'சிவகாமியின் சபதம்', வானொலியில் கேட்டீரா?

! நாவலில் ஒரு கதாபாத்திரம் தனக்குத் தானே பேசிக் கொள்வதை நிதானமாகப் படித்து ரசிக்க முடியும். நாடகத்தில் அது குறைந்த பட்சமாகக் குறைக்கப்பட வேண்டும். மற்றபடி, 'கல்கி'யின் கதாபாத்திரங்களுக்குக் குரல் கொடுப்பவர்கள் உணர்ச்சி பிறழாமல் உள்ளத்தைத் தொடுகிறார்கள். போதாதோ!

● ப. ராமகிருஷ்ணன், காயக்காடு. ❐


? வலியில்லாமல் கருக் கலைப்பு செய்து கொள்ள புதிதாக வந்துள்ள ஆர்.யூ.486 மாத்திரையை டாக்டர்களே அங்கீகரிக்கும் போது பெண்ணுரிமை அமைப்புகள் எதிர்ப்பது சரியா...?

! கருக் கலைப்பு என்பது பெண்ணின் உடலுக்கும் மனதுக்கும் கேடு விளைவிக்கிற செயல். அது சிசுக் கொலைதான். பிரசாரமும் வசதிகளும் கருத்தடைகளுக்குத்தான் செய்யப்பட வேண்டும்; கருக்கலைப்பு, சட்டபூர்வமாகவே தடை செய்யப்படவேண்டும். எதிர்ப்பு சரிதான்.

● இ.வி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை

? எம்.பிக்கள் தொலைபேசிக் கட்டணம் ரூ:12.34 கோடி செலுத்தப்படாமல் பாக்கி இருக்கிறதாமே...? செலுத்துவார்கள் என நம்பலாமா?

! ஊஹூம்; நம்ப முடியாது; ஆனால மக்கள் இவர்களை மறுபடி தேர்தலில் தேர்ந்தெடுத்து எம்.பி. ஆக்குவார்கள் என்று நிச்சயம் நம்பலாம்! நம் நாட்டின் ஜனநாயகம்



குடும்பப் படங்களுக்கு 'குட்டை' தானா?

இந்த லட்சணத்தில்தான் இருக்கிறது.

● டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு.

? மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் குறித்து...?

! 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்' என்பதை மறந்து விட்டார்கள். போராட்டமே மக்கள் ஆதரவைப் பெறுவதாக இருக்க வேண்டும்; வெறுப்பைச் சம்பாதிப்பதாக இருந்தால், அந்தப் போராட்டம் வெற்றி பெறாது.

● டி.ஆர். ராஜா, மதுரை _ 20.

? குடி தண்ணீரைக்கூட அளவாய்ச் சாப்பிட வேண்டும்; இல்லையெனில் நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்று டாக்டர்கள் கருத்து கூறியிருப்பது குறித்து...?

! சிங்காரச் சென்னையிலே இதெல்லாம் ஒரு பிரச்னையே இல்லீங்க... 'கேன்' தண்ணி கூட 'புக்' பண்ணித்தான் வாங்கறோம். அளவா அளந்துதான் குடிக்கிறோம்.

● எஸ். பாலசந்தர், திருவாரூர்.

? நமது முதல்வர் ஹிட்லருடன் ஒப்பிடப்படுகிறாரே... அவ்வளவு கொடுமைக்காரரா...?

! சர்வாதிகாரப் போக்கு என்பது வேறு; கொடுங்கோன்மை என்பது வேறு. ஹிட்லர் சர்வாதிகாரி மட்டுமல்ல; அவனைப் போன்ற கொடுங்கோலன் உலக வரலாற்றில் வேறு யாருமே இருந்த தில்லை. நமது முதல்வரை நிச்சயம் அந்த ரகத்தில் சேர்க்க முடியாது.

● எஸ். இளங்கோவன், கீழப் பெருமழை.

? தமிழக சினிமா மார்க்கெட் சிறியது; வேலையில்லா இளைஞர் கூட்டம் பெரியது. கோடிகளை நல்ல முறையில் முதலீடு செய்து அயல்நாட்டு டாலர்களுக்குக் குறி வைக்கலாமல்லவா?

! சினிமாத் துறையில் வேலை வாய்ப்பு இல்லை என்று யார் சொன்னது?... ஒரு தொழிலகத்தில் உள்ளதைவிட, ஒரு ஸ்டுடியோவில் வேலை வாய்ப்புகள் அதிகம். டாலர்கள் சம்பாதிக்கவும் திரைத்துறையில் நிறைய வாய்ப்பு உண்டு. ஒரே சங்கடம், அதை ஒரு தொழிலாகக் கருதாமல் சூதாட்டம் போல் செயல்படுவதுதான். அதனால்தான் துன்பம்.

● தேவந்தி துரைராஜ், திருவண்ணாமலை.

? மகளிர் ஒதுக்கீடு மசோதாவை ஒதுக்கும் கட்சிகளின் உள்நோக்கம் என்ன?

! 33 சதவிகித இட ஒதுக்கீடு கொடுத்து விட்டால், நாடாளுமன்றத்தில் 180 பெண்களின் குரல் ஒலிக்கும். அந்த அளவுக்கு ஆண் எம்.பிக்களின் பதவிகள் பறிபோகும். அந்தப் பயம்தான் ஆணாதிக்கமாகச்

• வரலாற்றை ஏற்க வேண்டும்!



• நன்றி கூற வேண்டும்!



செயல்படுகிறது!

● கு.அருணாசலம், தென்காசி.

? ஆக்ஷன் படங்கள்தான் திரையரங்கில் கொஞ்சம் நாளாவது ஓடுகின்றன. குடும்ப / சமூக நீதி கதைகளுக்கு இனி விடை கொடுக்க வேண்டியதுதானா?

! சின்னத்திரை சீரியல்கள் காரணமாக சினிமா தயாரிப்பில் பிரமிப்பை உருவாக்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் சினிமா பார்க்க வீட்டை விட்டுக் கிளம்பி வருவார்கள் என்ற நிலை. எனினும் பிரமிப்பு மட்டுமே மக்களை வெகு காலம் ஈர்க்காது; அத்துடன் அழுத்தமான கதை அம்சமும் சேர வேண்டும் என்பதை, திரையுலகம் விரைவில் புரிந்து கொள்ளும்.

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? 'மொழிக்காகப் போராடியது தி.மு.க; ஆனால், மரம் வெட்டிய கட்சி பா.ம.க.' என்று முதல்வர் கூறியுள்ளாரே?

! அடுத்த தேர்தல் நெருங்கும்போது, அன்புமணியின் மரம் வளர்ப்பை 'ஒரு பசுமை இயக்கம்' என்று அவரே வர்ணித்தால் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

● ஷோபனாதாசன், நாட்டரசன் கோட்டை.

? காவிரி நீர்ப் பிரச்னையை நீதி மன்றத்துக்கு வெளியே தீர்த்துக் கொள்ளலாம் என்று எஸ்.எம். கிருஷ்ணா சொல்கிறாரே?

! அரசியல் கபடி ஆட்டத்தில் கிருஷ்ணா கெட்டிக்காரர். இன்று பாய்வார், நாளை பின்வாங்குவார், பதுங்குவார், மறுபடி பாய்வார். காவிரியில் மட்டும் நீர் பாயாது. அவரை ஒரே அமுக்கா அமுக்கணும்னா, ஒரே வழி நீதிமன்ற நண்டுப்பிடிதான்!

● கல்லன் கிருஷ்ணராஜ், குன்னூர்-5 ✱

? பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற தமிழ்த் தத்துவத்தின் பரிமாணம்தானே கம்யூனிஸம்... பிறகேன் அது தற்காலத் தமிழனுக்கு அன்னியமாய்த் தோன்றுகிறது?

! 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்ற கோட்பாடு, தனிமனித தர்மமாகத்தான் செயல்பட முடியும். அதைக் கட்டாயத்தின் பேரில் அனைவர் மீதும் திணித்து அமுல் படுத்துவதில் வெற்றிகாண முடியாது. இதை கம்யூனிஸ்டுகள் இப்போதுதான் புரிந்து கொண்டிருக்கிறார்கள்; தமிழனுக்கு அன்றே தெரியும்!

சார்ஸ்




முதல்வர் சொன்ன மருந்து சரிதானா?

சார்ஸ் நோய்க்கு வைத்தியமாக மஞ்சள், மிளகு கஷாயமும், பப்பாளியும் சாப்பிடச் சொல்லி, சட்டசபையில் ஆலோசனை வழங்கியிருக்கிறார் முதல்வர் ஜெ! இது சரியான மருந்துதானா? சித்த மருத்துவர் மூலிகைமணி வேங்கடேசனைக் கேட்டோம்:

“முதலமைச்சர் சொன்ன மருந்து சரிதான். ஆனால், அவர் குறிப்பிட்டபடி ஒரு ஸ்பூன் அளவுக்கு மஞ்சளையும், மிளகையும் சாப்பிடக் கூடாது. வழக்கமாய் மொத்த குடும்பத்துக்கும் சமைக்கிறபோதே கொஞ்சமாகத்தானே மஞ்சளையும், மிளகையும் சேர்க்கிறோம்? பத்து முதல் அதிக பட்சம் இருபது மிளகு, ஐந்திலிருந்து பத்து சிட்டிகை மஞ்சள் சேர்த்து கஷாயம் செய்து அதிலே சிறிது தேன் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இதுதான் சரியான மருந்து. முதல்வர் சொன்ன பப்பாளி கூட, நம் ஊரின் வெப்பமான கிளைமேட்டுக்குப் பலன் தராது.”

“சார்ஸ், இது ஒன்றும் புதிய வியாதி இல்லை. சித்த வைத்தியத்தில் இதற்கு ஈளைக் காய்ச்சல் என்று பெயர். அதிக காய்ச்சல், சளி, இருமல், பேதி, உடம்புவலி இவைதான் ஈளைக்காய்ச்சலுக்குரிய அறிகுறிகள். ஆஸ்துமா, சைனஸ், காசநோய் ஆகியவற்றால் கஷ்டப்படுகிறவர்களைத்தான் இந்தக் காய்ச்சல் அதிகம் தாக்கும். சித்த மருத்துவ தியரிபடி, அதிக அளவில் சீதளம் (குளிர்ச்சி) ஏற்படுத்தும் பொருட்களை மிகுதியாகச் சாப்பிடுவது இந்தக் காய்ச்சலுக்கு முக்கிய காரணம்.



“ஈளைக் காய்ச்சல் என்று வரும் நோயாளிகளுக்கு தூதுவளை, கருந்துளசி, விஷ்ணு கரந்தை, பற்பாடகம், ஆடாதோடை ஐந்தையும், சுக்கு, மிளகு, திப்பிலி சேர்த்து, கஷாயம் வைத்து தேன் கலந்து, காலை, மாலை இருவேளை அருந்தச் சொல்லுவோம். கோதுமைக் கஞ்சியும், பூண்டு, மிளகு ரசமும் உணவு. இரவு பார்லிக் கஞ்சி. கருவேப்பிலை, புதினா துவையல் சாப்பாடு. ஐந்து நாளில் இதனைக் கட்டுப்படுத்தலாம். அப்படிக் கட்டுப்படவில்லை என்றால், சில சூரணங்களைக் கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும்.


“இதற்கும் ஜுரம் குறையாத பட்சத்தில் அடுத்த கட்டமாக, கருந்துளசி, நில வேம்பு, மஞ்சள், மிளகு, சித்தரத்தை, அதிமதுரம் கொண்டு கஷாயம் தயாரித்து, தேன் கலந்து, தினம் ஒருவேளையாய் ஐந்து நாட்கள் சாப்பிட்டால் போதுமானது.

“சார்ஸ் என்கிற ஈளைநோய் பரவாமல் தடுக்க, நோயாளியின் வசிப்பிடத்தில் குங்கிலியம், வெண் கடுகு, சாம்பிராணி, மஞ்சள் பொடி. இவற்றைக் கொண்டு புகை போட்டால் நல்ல பலன் கிடைக்கும்.”

— கௌதம்

திருவிழா முடிந்து விட்டது! ஆனாலும் இன்னும் அந்தத் திருவிழாக் களை கலையவில்லை. பந்தல் பிரிக்க வில்லை. பந்தலைச் சுற்றிக் கட்டிய தடுப்பையும் அகற்றவில்லை. கோவிலைச் சுற்றி அடிக்கப்பட்ட சுண்ணாம்பு வெள்ளையும், செம்மண் காவியும் கலைய வில்லை. சாஸ்தவராயனுக்கும், கருப்பசாமிக் கும், கன்னிமார்களுக்கும் சாத்திய செவ்வந்தி மாலையும், மரிக்கொழுந்து கதம்பமும், இன்னும் மணமாகத்தான் இருக்கிறது! பரிவட்டத்தின் பளபளப்பும் காண்டா மணியின் குரலும் குறைவில்லாமல்தான் இருக்கிறது! ஏன், தழுகை கூட இன்னும் எடுக்கவில்லை. பொரியும் அவலும் பத்தி குத்திய வாழைப் பழமும் எறும்பூற இன்னும் கிடந்தது!

காலையும் மாலையும் கல்பீடம், சரமும் மாக் கோலமுமாகத்தான் காட்சி தருகிறது. ஒவ்வொரு பந்தல் காலிலும் இறுக்கிக் கட்டிய வாழை மட்டும் தான் வாடல்! கழுத்து துவண்டு, இடுப்பு ஒடிந்து தொங்கிற்று. வருகிற கூட்டத்திற்கும் போகிற கூட்டத்திற்கும் அதைத் தொடாமல் முடிய வில்லை. சிறுசுகளுக்குச் சொல்லுவானேன்! கூச்சலும் கும்மாளமுமாய் அந்த வாழை மரத்தின் மீதுதான் போய் விழுகிறது! அடுக்கடுக்காய் அதன் உடலைக் சுழற்றித் தரையில் போட்டுத் தேய்க்கிறது! நான்கு ஐந்து மட்டைகளைப் போட்டு, அதில் ஒன்றில் உட்கார வைத்து,



மினி தொடர்

ஏழு எட்டு வாண்டுகள் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஓடுகின்றனர்! தெருவே புழுதி மிதப்பு! இழுக்கிற விசையில் ஒன்றிரண்டு மல்லாந்து விடுகிறது! அப்போது கேட்க வேண்டுமே! கிழடுகளும் சிடுசிடுப்பவர்களும் சபித்துவிட்டுப்போக, அப்படி ஒரு கூச்சல்!

மறுபூசை முடிகிற வரைக்கும் இந்த சிறுசுகளின் கும்மாளம் இருக்கும். கூச்சலும் கூப்பாடும் இருக்கும். அதற்குப் பிற்பாடும் கூட இருக்கும். எட்டு நாளோ பத்து நாளோ, அந்தப் பரபரப்போடுதான் திரியும். பந்தலைப் பிரித்துப் போட்டு விட்டால் அவ்வளவுதான். அரசமரத்து நிழலையும் வேப்ப மரத்தின் நிழலையும் நம்பி யார் வருவார்கள்? இதோ இந்த அய்யாக்குட்டியும், மூக்கையா ஆசாரியும், அதோ பூக்கட்டிக் கொண்டு இருக்கிறதே முத்து பண்டாரம், இதுக தான் வந்து உட்காரும், சுற்றுச் சுவரில் முதுகைக் கொடுத்து, காலை நீட்டிவிடும். ஆடு புலி ஆட்டம், தாயக்கட்டம், பரமபதம் என்று இறங்கிவிடும். இல்லாவிட்டால் இந்த வழியாகப் போகிறவர்களையும், வருகிறவர்களையும் விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்!

முப்பது வயது பால் பாண்டி வாத்தியார் உட்கார்ந்திருந்த இடத்தில் நல்ல காற்று! எங்கிருந்தோ கொட்டுவது போல காற்று கொட்டிக் கொண்டிருந்தது. அந்தக் காற்றுக்கு பந்தல் காலும் கிடுகும் கிடுகிடுவென்று ஆட்டம் கொடுத்தது. கல் பீடத்தைக் கழுவி விட்டிருந்தார்கள். பீடம் என்றால் கருங்கல்லால் ஆன சதுர வடிவ மேடை. இருபது, முப்பது பேர் காலை நீட்டி, கையைப் பரத்திப் படுக்கலாம். பீடத்தின் நடுவில் ஒரு மாடப் பிறை. அங்கு வெள்ளி, செவ்வாய்க்குத்தான் விளக்கெரியும். அந்தக் கருங்கல் பீடத்தின் நடுவில் தான் வேம்பு. கல்லைக் குடைந்து எழும்பியது போல் நிற்கும். வயதான வேம்பு, ஆனாலும் இலையும் கிளையுமாய்ப் படர்ந்து நிற்கும்!

பால்பாண்டி வாத்தியார் எழுந்து கொண்டார். அவருக்கு அந்த ஆத்மாவைப் பார்க்க வேண்டும் போல பரபரப்பு. வசந்தி வருகின்ற நேரம் இதுவல்ல. ஆனாலும் பரபரப்பு! கோவிலைச் சுற்றி உலாவினார். கோவில் வாசலில் நாலு வண்டி ஆற்று மணல். நெறு நெறுவென்று காலில் புதைந்தது. சிறிது நேரம் எதிர்த் தோட்டத்தைப் பார்த்தார். இறங்கி வந்து பந்தல் நிழலில் சற்று நின்று கொண்டார். தன் கூடவே, தனக்குள்ளயே காற்று சுழல்வது மாதிரி இருந்தது. காலைப் பொழுது ஏறுகின்ற வேளையிலோ, மாலைப் பொழுது இறங்குகிற வேளையிலோ வாத்தியார் இப்படி வந்து விடுவார். கல் பீடத்தில் வந்து உட்கார அவருக்குப் பிடிக்கும். வானின் நீலத்தையும் தோட்டத்துப் பச்சையையும் பார்த்துக் கொண்டே உட்கார்ந்து விடுவார். அவர் சம்சாரம் தவறியதிலிருந்தே இது தொடர்கிறது. வீட்டில் பிள்ளையா? குட்டியா? பள்ளிக் கூடத்தையும் மூடியாச்சு!

சுவாசிக்கத் தெரிந்தவர்கள்

பாரதிபாலன்

1

''வாத்தியாருக்கு உக்காரவா இடமில்லை? இப்படிப் போய் அந்தக் கோவிலில் விழுந்து கிடக்கிறார்!

"ரோட்டுக் கடையில் போய் உட்காருவது. நாலு மனுசா மக்களோடு பேசுவது!"

இது எதுவும் வாத்தியார் காதில் விழாது. எதையாவது கற்பனை செய்து கொண்டு, எதையாவது என்ன! அதைத்தான் கற்பனை செய்து கொண்டிருப்பார். ஒரே அமைதியுடன் மனத்தைக் குவித்து, உட்கார்ந்து விடுவார். அந்த மனது எங்கெங்கோ பேர்கும். இவரும் கூடவே போவார். எத்தனை தூரம் போகுமோ? களைப்பு மிகுந்தவுடன் கண்ணை மூடிக் கொள்வார்! நேற்று நடந்ததை நினைக்க நினைக்க களைப்புதான் மிஞ்சிற்று. அவள் சொன்னதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது! சிறிது நேரம் பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டார்.



"நிஜமாவா?"

''ம்.''

"தெய்வானையா?"

"பொறாமைக்கார கழுதை."

"அவளுக்கு என்ன பொறாமை?"

"என்னவோ?"

"எல்லாம் என்னாலதான்."

''அவ என்ன வார்த்தை எல்லாம் பேசுறா."

''பாவம் அவ! சின்னப் பொண்ணுதானே?''

"பாவமா? அவளா?"

''நீங்க இங்க வர்றது அவளுக்குத் தாங்கலை. அப்படியே வெறிச்சு வெறிச்சுப் பாத்துக்கிட்டு நிக்கும். இரண்டு கண்ணுலையும் கொள்ளி. வயிறு எரிஞ்சு எரிஞ்சு தேன் பாப்பா. எனக்கு இப்பல்ல எல்லாம் தெரியுது."

"ப்சு! வுடு, வசந்தி!"

"அவ செய்யுற அட்டூழியம். நம்மளைப் பத்தி என்ன சொல்லிட்டுத் திரியுறா தெரியுமா?"

வசந்தி கண்ணைக் கசக்கிக் கொண்டே, தெருவைப் பார்த்தாள். நல்லவேளை நடமாட்டமில்லை. வயிற்றைத் தள்ளிக் கொண்டு இரண்டு சிறுசுகள். கையில் ஒரு வாய் அகண்ட செம்பு. அதற்குள் வாயைக் கொடுத்து குரல் எழுப்பிற்று. திரும்புகிற எதிரொலி கேட்டதும் குதூகலம்! வாத்தியாரின் பார்வையும் ஒரு கணம் தெருவுக்குப் போயிற்று. அவர் ஒன்றும் பேசவில்லை. அவருக்குப் பயம்! இப்படி ஒரு சுழலா? வழியோடு போகிறவர்களை வம்புக்கு இழுத்தால்? வாத்தியாருக்கு அவனைத் தெரியும். அவர் சம்சாரம் உயிரோடு இருக்கும் போது கூடவே இருப்பாள். ஆனால் கள்ளத் தனம் ஜாஸ்தி! தனியாகக் கண்டால் ஒரு மாதிரி, சம்சாரத்துடன் கண்டால் ஒரு மாதிரி! தனிமையில் கண்டால் சேலை மாராப்பை அவசரமாக இழுத்து விட்டுக் கொள்வாள். வெட்கத்தில் குனிந்தாற்போல் நடப்பாள். அடிக்கடி உதடு குறும்பாய்ச் சுழியிடும். இவருக்குத்தான் வெட்கமாய் விடும்.

"அந்தக் கொரங்குதேன் ஊரக் கூட்டுது."

வாத்தியார் கண்ணீர் விடாத குறையாகப் பார்த்துக் கொண்டிருந்தார். நாற்காலியின் காலுக்குப் பக்கமாக உட்கார்ந்திருந்தாள் வசந்தி! அவள் தொண்டை கமறி விட்டது!

"ஒண்ணு கேக்கட்டுமா?"

"என்ன?"

"சரி. எதுவும் கேக்கலே. ஆனா எனக்கு

''அமெரிக்காவிலிருந்து மாப்பிள்ளை வந்திருக்காராமே... ஏன் வருத்தமா இருக்கீங்க? உங்களுக்கு ஒண்ணும் வாங்கிண்டு வரலியா...?"

''எனக்கு வாங்கிண்டு வரலைன்னாலும் பரவாயில்லை... அவருக்கே ரிடர்ன் டிக்கெட் வாங்காம வந்ததை நெனைச்சாதான் பயமா இருக்கு...!"

— எம்.ஆர். மூர்த்தி

ஒரு தீர்மானம். நீங்க எப்பவும் மாற மாட்டீங்கன்னு தோணுது..."

"திடீர்னு எதுக்கு?"

"திடீர்னு இல்லெ..."

"நீ தான சொல்ற..."

"நானா!"

"ரொம்ப மிரண்டு போயிருக்க" என்று அவளைப் பார்த்துச் சொன்னாரே தவிர, அவர் தான் மிரண்டு போயிருக்கிறார். உடல் எல்லாம் நடுங்கிற்று. 'நான் குற்றவாளி இல்லை' என்றது அவர் மனம்! அப்படிச் சொன்னால் மட்டும் போதுமா? விடுதலை ஆகவேண்டாம்? விடுதலை வாங்கினால் தானே சந்தோஷம்! நான் இங்கு இப்படி வருவதை இரண்டு மூன்று கண் நோட்டம் விட்டுக் கொண்டுதான் இருக்கிறது! யார் யாரோ ஏதேதோ சொல்லியிருக்க வேண்டும், இல்லாவிட்டால் இப்படிக் கருக மாட்டாள். அன்று ஒரே துயரம்! வெளியே போக அரை மனதுதான்! வீட்டுக்குள்ளே நிற்க முடியாமல் மனக் கச்சலையும் தாங்க முடியாமல் தவித்தார். ஏதாவது சாக்கை வைத்துத் தூரம் தொலை வாகப் போய்விட்டால்... அப்படிப் போனாலும் விடவா போகிறது! வெட வெடவென்ற அந்த மெல்லிய உடல். மாநிறம் தான் வசந்தி! ஆனாலும் ஊர்ப் பொம்பளைகளை விடப் பளிச்சென்று இருப்பாள். ஏதோ விசேஷத்துக்குத் துலக்கி வைத்த பாத்திரம் மாதிரி, எப்போதும் பளிச்சென்று இருப்பாள். அலை அலையாக ஓடுகின்ற தலைமுடி, எப்போதும் தலை யைப் பின்னி, நுனியில் ஒரு முடி போட்டி ருப்பாள்!

ஊரின் வறட்சி அவள் உடம்பில் இல்லை. தளதளவென்று பசும் நாற்று மாதிரிதான் இருப்பாள். மூன்று ஜில்லா, நாலு ஜில்லா சென்று தமிழ் பேசி, கவிதை பாடி சாதனை புரிந்த வாத்தியார் என்கிறார் கள். எவ்வளவு பெரிய சாதனை இவள்! பேசினால்தான் சாதனையா? கவி பாடி னால் தான் அழகா! இப்படி ஒன்றும் பேசாமல்... ஊமையாக ஊர்ந்து கொண்டு... அவள் எவ்வளவு பெரிய சாதனை! இவளை இப்படியே உட்கார்ந்து பார்த்துக் கொண்டே இருக்கலாம். தனிமையும் ஏக்கமும் மண்டிக் கிடக்கின்ற மனசுக்குக் கோவில் வெளிச்சமல்லவா இவள்!

இந்தக் கேலிச் சிரிப்புக்கெல்லாம் அழுதால்? என்ன அர்த்தம்! அவளைப் பார்த்தார். அவளும் பார்த்தாள். குழந்தை யைக் கை நீட்டிக் கூப்பிடுவோமே, அது மாதிரி வாஞ்சையுடன் கூப்பிடும் பார்வை.



பார்க்கப் பார்க்கத் தைரியம் பிறந்தது. மனத்தில் ஒரு சிலிர்ப்பு! இப்படியே உட் கார்ந்து அவளைப் பார்த்துக் கொண்டே ஆயுளைக் கழித்துவிட வேண்டும் போல் ஒரு வெறி வரும். ஏதோ உணர்ச்சியில் உருவாகும் எண்ணமில்லை. வெகுளித் தனமும் இல்லை. வெளியே சொன்னால் வேடிக்கையாகத்தான் தெரியும்! அனுபவிக் கிற மனசுக்கு அதுதான் விருந்து! நாங்கள் நிச்சயம் பண்ணிக் கொண்டுதான் இருக் கிறோம்! அதுக்காக ஊரிடம் உளறிக் கொள் ளவா முடியும்! அந்த உறுதியையும் கேலி பேசும். இப்படிக் கேலி பேசுபவர்களுக்கு நாங்கள் கூடுகட்டி வைத்திருப்பது தெரியுமா?

"நீ மனசுலே ரொம்ப சங்கடப்படுற வசந்தி!"

"உங்க ஓய்ஃப் உங்கள ஃபோன் பண்ணச் சொன்னாங்க சார்...!"

"ஓய்ஃபா?... 'நம்பர்' ஏதும் கொடுத் தாங்களா?"

"நம்பர் 'த்ரீ'ன்னு சொல்லச் சொன் னாங்க!"

— கிரிஜா மணாளன்

சபாபதிக்கு வேறு விளக்கம்!

'கல்கி' 11.5.2003 இதழில் இடம்பெற்ற 'க்ளீவ்லேண்டிலிருந்து கீவளூர்' என்னும் கட்டுரையில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 'ராம நீ சமான மெவரு' என்னும் கரகரப்ரிய ராக க்ருதியைக் கேட்டுவிட்டு, ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதி ஆபோகி ராகத்தில் 'சபாபதிக்கு வேறு தெய்வம்' என்ற பாட்டை இயற்றினார் என்கிற செய்தி சரியில்லை! நான் காலம் சென்ற பிரபல வித்வான் எஸ். ராமநாதனிடம் சில உத்சவ சம்ப்ரதாய க்ருதிகள் கற்றுக் கொண்டேன். அப்போது அவர் சொன்ன விவரம் இது: கோபாலகிருஷ்ண பாரதி ஸ்ரீ தியாகராஜசுவாமிகளைப் பார்க்க வந்த பொழுது அவருடைய சிஷ்யர்கள் 'மனஸு நில்ப' என்னும் ஆபோகி க்ருதியைப் பாடிக் கொண்டிருந்தார்களாம். ஸ்ரீ சத்குரு, கோபாலகிருஷ்ண பாரதியிடம் 'நீங்கள் இந்த ராகத்தில் ஏதாவது பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டாராம். 'கவனம் பண்ணியிருக்கிறீர்களா?' என்று அர்த்தம். உடனே கோபாலகிருஷ்ண பாரதி, 'இதுவரை பண்ணவில்லை' என்று சொல்லிவிட்டுக் கோவிலுக்குப் போனாராம். திரும்பி வந்ததும் சத்குருவிடம் "கோவிலில் கவனம் செய்தேன்" என்று சொல்லி ஆபோகி ராகத்தில் 'சபாபதிக்கு வேறு தெய்வம்' என்கிற பாட்டைப் பாடினாராம். இதே விவரத்தை எஸ். ராமநாதன் தன்னுடைய "A day with Sri Thyagaraja" எனும் விரிவுரையிலும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.



— சாரதா நாராயணன்

"ஒண்ணுமில்லே."

"சொன்னாத்தானே!"

அவள் தலையசைத்தாள்.

"ஜாடை மாடையா இருக்கிறத ஒரு நாள் கண்ணாலே பேசிக் காட்டத்தான் செய்யும்."

முழங்காலை மடக்கி உக்கார்ந்து இருந்தவள், தலையை உயர்த்தி வாத்தியாரைப் பார்த்தாள். வாத்தியாரின் கண் அகண்டது.

"உங்களை நாலு பேர் நக்கலாப் பாத்தா என் நெஞ்சு சுடாதா?"

குபுக்கென்று ஒழுகிய கண்ணீரை முழங்காலில் இழுகிக் கொண்டாள். வாத்தியார் பதறிப் போனார். 'ஏய்!' என்று நாற்காலியை விட்டு இறங்கினார். 'ம்ஹூம்' என்று எதையும் சொல்ல முடியாமல் தலையை ஆட்டினாள்.

"சாஸ்தா கோவில் திருவிழாவுக்கு மாவிளக்கு எடுக்கணும்."

"பேச்சு மாத்தாத!"

"முளப்பாரியும் தேன்."

"வேண்டுதலா?"

'இல்லெ. உங்க தெரு வழியாகத்தானே எல்லா ஊர்வலமும் வரும்."

"அத்தனை கூட்டத்துலையும் நீதானே துண்டாத் தெரிவ..."

"ஒங்க வூட்டு வாசல் கிட்ட வந்ததும் தெய்வானை ஒரு கனைப்பு கனைப்பா..."

"அந்தக் கழுதய வுடு. கெடா வெட்டு?"

"எங்கய்யா வெட்டுவோம்னார். நா எங்கமட்டாச் சொல்லி வேண்டாமுன்னுட்டேன்."

"ஒங்க சாமிக்கு அதானே விசேஷம்?"

"என் சாமிக்குப் பிடிக்காதே" என்று வாத்தியாரைப் பார்த்தாள். அவள் கண் தளும்பிற்று. வாத்தியாருக்கு முகம் பிரகாசத்தில் பொங்கிற்று.

"அப்படியே உன்னை என்ன செய்யணும் தெரியுமா?" என்று சந்தோஷ மிதப்பாக அவளை நெருங்கினார்.

(தொடரும்)



• விஜிதா – ராகுல்

சூப்பர் மேட்ச்!

கடந்த வாரம் பெங்களூரில் நடந்த திருமணம் பற்றித்தான் எங்கும் பேச்சு. முதலில் திருமணம் எங்கு என்பதே வெளியில் சொல்லப்படவில்லை. சஸ்பென்ஸ் என்றால் ஹிட்ச்காக் சினிமா கெட்டது! மணமகள் நாக்பூரிலிருந்து ரயிலில் வந்திறங்கினார். பெங்களூர் ஈஸ்ட் மற்றும் கன்டோன்மென்ட் ஸ்டேஷன்களில் நிருபர்களும் புகைப்படக்காரர்களும் தவமிருந்தனர். ஏஸி கோச்சிலிருந்த மணமகள் மீடியாவின் பிடியிலிருந்து தப்ப, சாதாரண ஸ்லீப்பருக்குத் தாவினார், சகோதரர் துணையுடன்! அப்படியும் கன்டோன்மென்டில் இறங்கி வேகு வேகுவென்று ஓடி, அம்பாஸிடரைப் பிடித்து உள்ளே ஏறி அமர்வதற்குள் புகைப்படக்காரர்கள் க்ளிக்கித் தள்ளி விட்டார்கள். கார் பயணம் செய்த திசையை யாராலும் யூகிக்க முடியவில்லை.

உறவினர்களுக்குப் பத்திரிகைகள் கொரியரில் அனுப்பப்பட்டன. பலருக்குத் தொலைபேசி மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டது. இந்திரா நகரிலிருக்கும் 'சிருஷ்டி' என்ற மணமகன் இல்லம் களைகட்டியிருந்தது. அக்கம் பக்கம், தெருவெல்லாம் கூட்டம். 'அட்சய திருதியை' புடைவை நகைகள் வாங்க மட்டுமே அல்ல, மங்கல நாண் பூட்டுவதற்கும் ஏற்ற மணநாள் எனக் கருதினர் மணமகனின் பெற்றோர்....

பல கல்லூரிப் பெண்கள் மனமுடைந்து போன நாள். இந்தியா முழுவதும் ஏகப்பட்ட பெண் விசிறிகள் இருக்க, அதிர்ஷ்டம் அடித்தது நாக்பூர் தேவதைக்கு...


சூப்பர் கிரிக்கெட் ஹீரோ ராகுல் திராவிட், விஜிதா பெண்டார்கரிடம் க்ளீன் போல்ட்! ஆனால் உம்மென்று முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு பெவிலியனுக்குத் திரும்புவது



• மீடியா பிடியிலிருந்து தப்பித்து...

போலில்லாமல், கொஞ்சம் வெட்கம், கொஞ்சம் தயக்கம் என சிரித்துக் கொண்டிருந்தார். ஒன் டே மாட்சுக்கு உண்டான அத்தனை விறுவிறுப்பு, சுவாரஸ்யம், சஸ்பென்ஸ் எல்லாமே தம் திருமணத்திலும் இருக்க

வாங்க, வந்து காதலிங்க!



நட்சத்திர அந்தஸ்து நாயகர்கள், முன்னணி கதாநாயகர்கள் என படாவாளக்கள் நடிக்கும் படங்களில் படச்சுருள் பெட்டிகளே, சூட்டோடு சூடாக "அவங்கவங்க வீட்டுக்கு, அவரைக்காய் சோத்துக்கு" என்று திரும்பிப் போய் விடுவதும், இளைய முகங்கள் நடிக்கும் படங்கள் "முதலுக்கு மோசமில்லை" என்ற ரேஞ்சில் நாலு காசு பார்ப்பதும் கோலிவுட்டின் நம்பிக்கை டார்ச் ஒளியாகத் திகழ்கிறது.

அதைத் தொடர்ந்து படத்துக்குப் படம் புது முகங்கள். 'கும்மாளம்' படத்தின் நான்கு கதாநாயகர்களில் ஒருவராகத் தலை காட்டிய மிதுன், 'ஆஹா... எத்தனை அழகு', 'இன்று முதல்' என்று பிஸியாகி விட்டார்.

கதிரின் உதவியாளர் இயக்கும் 'உள்ளம்' படத்திலும் இவர்தான் ஹீரோ!

"ஆக்ஷன், நகைச்சுவை, சென்டிமென்ட் என எந்த ரோல் கொடுத்தாலும் ஜமாய்ச்சுடுவேன், என்றாலும் லவ் சப்ஜெக்ட்தாங்க அதிகமா வருது" என்கிறார் மிதுன் கொஞ்சம் சந்தோஷமாக.

— ஸ்ரீ

வேண்டுமென விரும்பினார் போல! வெற்றிதான்!

எலஹங்கா அருகே பிளஸ்எல்ப் காம்பஸில் மராத்திய முறையில் ராகுல் விஜிதா திருமணம் நடந்தேறியது. அம்பயருக்கு பதிலாக புரோகிதர். திருமணச் சடங்குகள் எல்லாவற்றையுமே மனமுவந்து பின்பற்றினர் புதுதம்பதி. மீடியாவிற்கு கண்டிப்பாக அனுமதி நஹி. நெருங்கிய உறவினர்கள் கூட அழைப்பிதழைக் காட்டிய பிறகே உள்ளே அனுப்பப்பட்டனர். அனில் கும்ப்ளே, பிரசாத், பிரஜேஷ் பட்டேல் போன்றோர் திருமணத்திற்கு வந்திருந்து 'சூப்பர் மேட்ச்'ப்பா என வாழ்த்தினர்.

மாலை தாஜ் வெஸ்ட் என்டில் சுமார் நானூறு பேர் திரண்டு வர ரிஸப்ஷன். இருவருமே டின்னர் உடையில் கலக்கினார்கள். திராவிட் பளபள ஷெர்வானி உடை. அதில் தகதகக்கும் பட்டன்கள் அணிந்து மின்னினார். விஜிதா க்ரே – மரூன் காம்பினேஷனில் குஜ்ஜீ ஸ்டைலில் பட்டுப் புடைவை கட்டி 'ஹௌ ஈஸ் தட்' என அப்பீல் விட்டார்!

"எங்களுக்கு இது ஸ்பெஷலான நாள் இதை நாங்கள் மட்டுமே என்ஜாய் பண்ண விரும்பினோம். எங்களுக்குத் தொல்லை கொடுக்காமல் உதவி செய்ததற்கு நன்றி" என ஐஸ் வைத்தார் ராகுல்.

மே 6 அன்று இன்னொரு பலமான ரிஸப்ஷன் அதே தாஜ் வெஸ்ட் என்ட் ஹோட்டலில். கங்கூலி, சேவாக், ஹர்பஜன், முதல்வர் கிருஷ்ணா இன்னும் பல பெரும் புள்ளிகள் மெகா விருந்தில் கலந்து கொண்டனர். சுமார் அறுபது வகையான அயிட்டங்கள் கொண்ட ஸ்பெஷல் மெனு!

புது இன்னிங்ஸைத் தொடங்கியிருக்கும் திராவிட் – விஜிதா தம்பதி பல சச்சின்கள், கபில்தேவ்கள், பிராட்மென்கள் அண்ட் அஃப்கோர்ஸ் திராவிட்கள் உருவாக்க மனமார வாழ்த்துகள்!

— எல்.எஸ்.

பயணம்

வர்ஷா

நாகரிகம் அழிந்த வார்த்தைகளால் ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டார்கள். அவன் சார்பாக அவள் கன்னத்தில் இடி இறங்கியது. அவள் தரப்பில் அடுப்பங்கரைப் பாத்திரங்கள் அதி ஆவேசத்தோடு உருண்டன.

உருவப்பட்ட புடைவைகள் பீரோவை விடுத்துப் பெட்டிக்குள் திணிக்கப்பட்டன.

"எங்கேம்மா போறோம்?"

"பாட்டி வீட்டுக்கு."

"எப்பம்மா வருவோம்?"

"திரும்பி வரவே மாட்டோம்டா. ஒரேயடியாப் போறோம்."

மறைமுகமாக அறிவித்த வார்த்தைகளின் மோதல் தாக்குதலுக்குப் பதிலாக, அவன் கை செய்தித்தாள் விசிறிக் கடாசப்பட்டது.

எக்கச்சக்க நேரம் கழித்து வீடு திரும்பியவனின் கைகளில் பயணச் சீட்டுகள். அவள் முன்னே விசியடித்தான்.

அவளிடம் விசும்பல்கள், சில அடிக்குரல் முணுமுணுப்புகள்; சில ஒலி கூடிய ரௌத்ர ஏச்சுக்கள்...

அவனிடமோ, அவளது இருப்பையே அடியோடு நிராகரிக்கிற அலட்சிய அகங்கார மௌனம்.

காலம் தொடர்பின்றி நகர்ந்தது.

"**வா**டா போலாம்..."

சிவந்து கிடந்த ஈரப்பசைக் கண்களைத் துடைத்துக் கொண்டு, கைகளில் பெட்டியை எடுத்துக் கொண்டவள், மகனது கையைப் பிடித்து இழுக்க,

அனல் தகிப்பு...

"அய்யய்யோ..." பெட்டிகள் உதறப்பட்டன.

"என்னடா ஆச்சு...?" கன்னம், நெற்றி என்று தொட்டுப் பார்த்தவளிடம் கரிசனக் கலவரம்.

"இ... இப்படி கொதிக்குதே...?"

"என்னங்க, பையனைப் பாருங்களேன்..." வார்த்தைகளை வாய் பேசாமல் விழிகள் பேசின.

"டேய், இங்க வாடா..." மகனை ஸ்பரிசித்தான் தந்தை.

"..ஆமாம், ஜுரம்தான் அடிக்குது. மணி என்ன ஆறா? டாக்டர் கிளினிக்லதான் இருப்பாரு. பாத்துட்டு வந்துடலாம். எட்டரைக்குத்தானே டிரெயின்? அதுக்குள்ள வந்துடலாம்..."

டாக்டர், ஊசி, மருந்து இவற்றுக்குப் பின் இரயில் நிலையம் நோக்கி ஸ்கூட்டர் விரைந்தது. வழியில் நிறுத்தினான்.

"ஒரு ஃபோன் பண்ணிட்டு வந்துர்றேன்..", டெலிபோன் பூத் கண்ணாடிக் கதவை வெறித்தபடி சொன்னாள் அவள்.

"சீக்கிரமா வந்துடுங்க. டிரெயினுக்கு லேட்டாயிடப் போகுது..." அவளின் பார்வையோ, தூரத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த சோடியம் விளக்கின் மேல்.

முறைத்துத் தள்ளிவிட்டுப் போனாள்.

அவளது திரும்பலில் அதீதத் தாமதம்.

"**அ**வரு சம்சாரம் சீரியஸா இருக்காங்களாம். மகனுக்கு போன் பண்ணிச் சொல்லணும்னு துடிச்சார். சரி, நீங்க பேசிக்குங்கன்னு முன்னால விட்டா, மனுஷன் கால் மணி நேரம் பேசிக் கழுத்தறுத்துட்டார்." அவன் எதுவும் கேட்காமலே அவளாகவே முணுமுணுத்தாள்.

ஸ்கூட்டரைப் புறப்படச் செய்யவேண்டி சாவித் துவாரத்தை நாடியவனின் விழிகள் சட்டென்று சுருங்கின. கைகள் சட்டை, பாண்ட் பாக்கெட்டுகளைத் துழாவின. உடல் முழுக்கத் தேடல் உணர்வு. மறுபடியும் பூத்துக்குள் போனான். திரும்பி வந்தவன் ஸ்கூட்டரின் சுற்றுப்புறத்தரைப் பிரதேசத்

தைப் பார்வையால் சலித்தான். வண்டியை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக சாய்த்து சாய்த்துப் பார்த்தான். குனிந்து குனிந்து நிமிர்ந்தான்.

"என்ன தேடறீங்க?"

மெதுவாகக் கேட்டாள்.

"ம்... சதாம் உசேனைத் தேடுறேன். அடி ஏண்டி... ஸ்கூட்டர் சாவியைத் தேடுறேன். பார்த்தாத் தெரியலை...?"

"நல்லாத் தேடுங்க..." - கமுக்கமாக சொன்னவளின் விழிகள், எதையோ பேசப்போன மகனை அவசரம் அவசரமாக நிறுத்தின.

அவன் கவனித்து விட்டான். "என்னடா முழிக்கிறே?" மகனை உலுக்கினான்.

"அ...அது வந்து... ஒன்னுமில்லைப்பா..."

"உன் முழியே சரியில்லையே? என்ன விஷயம்? சொல்லு. சாவியை நீதான் எடுத்து வைச்சிருக்கியா...?"

"நா... நான் இல்லைப்பா. அம்மாதான் எடுத்து மறைச்சு வைச்சுக்கிட்டிருக்காங்க."

ஆத்திரம் கருகருவென்று அவனுக்குள் பொங்குவது உதடுகளின் அழுத்தத்தாலும், கன்னத் தசை துடிப்பினாலும் தெரிந்தது.

ஓர் உடனடி பயம் பரவ, சிவந்து வியர்த்தது அவள் முகம்.

ஒரு கணத்தில் வாசத்துடன் பூத்த விடியற் காலை மலரைப் போல சட்டென ஒரு புன்னகைக்குப் போனான் அவன். பார்வையில் புரிதலுடன் கூடிய கனிவு.

"டிரெயின் இந்நேரம் போயிருக்கும். வீடு போய்ச் சேரலாம். சாவியைக் கொடு!"

வழுமையானதொரு குலுக்கலோடு புறப்பட்டது ஸ்கூட்டர், மறுபடியும். ●





• கொள்ளை அழகு!

"'ரொம்பவும் சேட்டை பண்ற ஒண்ணரை வயசு குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆள் வேணுமாம். நீங்க போறீங்களா?' என்று 1974ம் வருஷம் எனக்குத் தெரிந்த ஒருத்தர் கேட்டதும் சம்மதிச்சேன். ஆனால் போன முதல் நாளே, அந்த குட்டிப் பிள்ளையைச் சமாளிக்க நான் பட்டபாடு. அப்பப்பா..! இன்னமும் எனக்கு மறக்கவில்லை" என்று மலரும் நினைவுகளில் மூழ்கிப் போகிறார் லட்சுமி பாய்.

இவரைப் பாடாய்படுத்திய குழந்தை வேறு யாருமில்லை, சச்சின்தான்!


"குழந்தை சச்சின் கொள்ளை அழகு. பார்க்கிற யாரும் ஒரு நிமிடம் குழந்தையை எடுத்து முத்தம் கொடுக்காமல் போகமாட்டாங்க. வாண்டுகளுக்கு சச்சினுடன் விளையாடுவதுன்னா, ரொம்ப ஆசை. சுருள் சுருளாய்த் தலைமுடி இருக்கும். அந்தத் தலைமுடியைப் பொறுமையாய் வாரி, குதிரைவால் கொண்டை போட்டு, கலர்கலராய் ரிப்பன் கட்டிவிடுவேன்.

குழந்தையைப் பார்த்து பலர், பையனா, பொண்ணான்னு கேட்பாங்க. பள்ளிக் கூடத்துக்கு முதல் நாள் கூட்டிட்டுப் போனப்ப, "இது ஆண் குழந்தைன்னு சொல்ல, சில டீச்சர்கள் நம்பலை! அப்போ மூணு மணி நேரம்தான் கிளாஸ். சச்சினை ஸ்கூலில் விட்டுட்டு, வீட்டுக்கு வராம நானும் அந்த ஸ்கூலிலேயே மூணு மணி நேரம் காத்திருந்து, சச்சினை வீட்டுக்கு அழைச்சுட்டு வருவேன். அப்பா, அம்மா இரண்டு பேரும் வேலைக்குப் போகிறவங்க. கூடப் பிறந்த பெரிய குழந்தைகள் ஸ்கூலுக்குப் போயிருவாங்க. நானும், சச்சினும் மட்டும் ஸ்கூல் விட்டு வந்து தனியாக வீட்டில் இருப்போம். கொஞ்சம் வளர்ந்த பிறகு, சச்சினை ஸ்கூலில் விட்டுவிட்டுத் திரும்பும்போது பல நாள் அழுதிருக்கிறேன்.

சச்சினுக்குக் கொண்டை போடுவேன்!"

"பள்ளி வயதில், ஸ்கூலிலிருந்து வந்ததும், பால், டிபன் ஒண்ணும் வேணாம். கிரிக்கெட் பேட், பந்துடன் விளையாடப் போய் விடுவான் சச்சின். 'வெயில் நேரத்தில் விளையாடப் போகக் கூடாதுப்பா'ன்னு சொல்வேன். கேட்டால்தானே. எனக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, விளையாடப் போயிடுவான். கூட விளையாட யாரும் இல்லைன்னா நான் பந்து போட, சச்சின் ஆடினதும் உண்டு.

"வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த குளத்திலிருந்து மீன்களைப் பிடிச்சுட்டு வந்து, வீட்டு மொட்டைமாடி தொட்டியில் போட்டு விளையாடுவது சச்சினுக்குப் பிடித்த விஷயம்.



• லட்சுமிபாய்



"சச்சினுக்குப் பன்னிரெண்டு வயசு இருக்கும்போது முதுமை காரணமா, வேலையிலிருந்து நின்னுட்டேன். பிறகு இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் சச்சினைப் பார்த்தேன். கல்யாணத்துக்கு என்னை மறக்காமல் கூப்பிட்ட சச்சின், எனக்கு தானே உணவு பரிமாறியதை மறக்கவே முடியாது" என்று நெகிழ்கிறார் சச்சினின் ஆயா லட்சுமிபாய்!

நன்றி : சண்டே டைம்ஸ்
- பாரதி

காற்றின் விரல்கள்



எரிந்த பேருந்துக் குறளில்
மிஞ்சிய வாசகம் :
தீயினாற் சுட்ட புண்...

'கண்ணீர் விட்டே வளர்த்தோம்
இத் தொடரை'
மெகா தொடர் இயக்குநரின் வாக்குமூலம்

ஒப்பனை கலைந்து
மீண்டும் அழகானாள்
மணப்பெண்.

உறங்கிய மொட்டுகள்
கண் திறந்து பார்த்தன
காற்றின் விரல்கள்

பொம்மைக்குத் தலைசீவுகிறது
குழந்தை
கலைந்த தலையுடன்

அமுதன்

பசுமை

கல்யாணி அருள்

குப்புசாமி, மகாலிங்கத்தின் மளிகைக் கடைக்குப் போனான்.

கடையின் கல்லாவில் கம்பீரமாக அமர்ந்திருந்த மகாலிங்கம், குப்புசாமியைக் கண்டதும் "எலே மணி, குப்புசாமிக்கு என்ன வேணும்னு கேட்டுப் போடு" என்றார் கடைப் பையனிடம்.

"எதுவும் வேணாம்ணே, கொஞ்சம் அரிசி வைச்சிருக்கேன். வாங்குவீங்களாண்ணே?" தயங்கித் தயங்கிக் கேட்டான்.

குப்புசாமியின் வார்த்தை மகாலிங்கத்தை வியப்பில் ஆழ்த்தியது. நேற்றுவரை அரைக்கிலோ அரிசிக்கு அல்லாடியவன் இன்று விற்க வந்திருக்கிறானே!

"ஒரு பத்து கிலோ அரிசி இருக்குண்ணே" கையிலிருந்த பையைத் தூக்கிக் காட்டினான்.

மகாலிங்கத்தின் பார்வையில் அலட்சியம் கூடியது.


"என்ன ரேஷன் அரிசியா?" சட்டென்று கணித்துக் கேட்டார்.

"ஆமாண்ணே... விவசாயி இலவச அரிசி.." என்றான் குப்புசாமி கொஞ்சம் வெட்கப்பட்டபடி.

"ஏம்பா, சாப்பிடத்தந்த அரிசியை இப்படி விக்கறியே நியாயமா?" என்று கேட்டார் மகாலிங்கம்.

"என் பசுமாடு லட்சுமி, சினையா இருக்குண்ணே. அதுக்கு சரியான தீவனம் இல்லை. அதான் எனக்குக் கிடைச்ச பத்து கிலோ அரிசியைக் கொடுத்து அதுக்குப் பதிலா மாட்டுக்கு புண்ணாக்கு வாங்கிட்டுப் போவாலாம்னு வந்தேன்" என்றான் கண்கலங்க.

கலங்கிய கண்களால் கடைப் பையனுக்கு ஜாடை காட்டினார் மகாலிங்கம். அவன் புண்ணாக்கு மூட்டையைப் பிரித்தான். பத்து கிலோ அரிசியின் கனம் குப்புசாமியின் கைகளை இழுத்துக் கொண்டிருந்தது. ●




நெல் கொள்முதலில் நெருடும் குழப்பங்கள்!

இந்த ஆண்டு நெல் கொள்முதல் செய்யலாமா வேண்டாமா என யோசித்தது மாநில அரசு. காவிரி டெல்டா பகுதிகளில் மிகக் குறைவான அளவில் மட்டுமே நெல் உற்பத்தியாகி இருந்தது. இருப்பினும் மாநில அரசின் மௌனம் கண்டு, விளைந்த நெல்லை என்ன செய்வதெனத் தவித் [illegible] நெல் உற்பத்தி செய்திருந்த விவசாயிகள். கம்யூனி சங்கங்கள், விவசாய அமைப்புகளின் கோரிக்கைப் போராட்டங்களுக்குப் பின்னர், மாநில அரசு ஒரு முடிவு எடுத்தது. அதுவும் வித்தியாசமாக!

பொதுவாக இங்கு இருப்பது இரட்டைக் கொள்முதல் முறை. ஒன்று தனியார் கொள்முதல் வியாபாரிகள். இவர்கள் அரசு நிர்ணயிக்கும் விலையை விடக் குறைந்த விலைக்கே விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்வர். பணமும் உடனே கிடைக்காது. மூன்று, நான்கு மாதங்கள் ஆகும். இதனால் இக்கொள்முதலை விவசாயிகள் பெரும்பாலும் விரும்புவதில்லை.

இன்னொன்று தமிழக அரசு, நுகர்ப் பொருள் வாணிபக் கழகம் மூலமாக கொள்முதல் செய்வது. கடந்த ஆண்டு வரைக்கும் இருபத்தைந்து சதவிகித ஈரப்பதம் முதல் மூன்றாம் தரம் வரை, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்திய உணவுக் கழகத்தின் வழிகாட்டுதலின் பேரில் பதினேழு சதத்துக்கும் கீழே ஈரப்பதம் கொண்ட நெல் மட்டுமே இந்த ஆண்டு கொள்முதல் செய்யப்படும், என அறிவித்தது தமிழக அரசு.

இரண்டு மாத தாமதத்துக்குப் பின் தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழக நெல் கொள்முதல் நிலையங்களில் இப்பொழுது நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. இங்கே நெல் தூற்றித் தரும் இயந்திரங்கள் இருக்கின்றன. மணல், பதர், கறுக்காய் நெல் போன்றவை தனியாகவும், நெல்மணிகளைத் தனியாகவும் பிரித்துக் கொடுத்து விடுகிறது.



• ஒரத்தநாடு தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழக நெல் கொள்முதல் நிலையம்

அது. உடன் அங்கு அலுவலகத்தில் ஒரு கருவி மூலமாக நெல்லின் ஈரப்பதம் அளவிடப்படுகிறது. ஈரப்பதம் பதினேழு சதவிகிதத்துக்கும் கீழே இருந்தால் மட்டுமே எடுத்துக் கொள்கிறார்கள். இந்த வகை அரசுக் கொள்முதலுக்கே விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் இந்த புதிய விதியான பதினேழு சதத்துக்கும் கீழே ஈரப்பதம் இருக்க வேண்டும் என்பதுதான் தங்களை மிகவும் பாதிக்கின்றது என்கின்றனர் விவசாயிகள்.


• காடு விளைஞ்சு என்ன...?



பட்டம் தவறிய சாகுபடிகளில் இந்த ஆண்டு நெல் விளைச்சலில் கூடுதலாய் கறுக்காய் விழுந்து விட்டதாகக் கூறுகின்றனர். ஒரத்தநாடு கொள்முதல் நிலையத்துக்கு முப்பத்தைந்து மூட்டை நெல் கொண்டு வந்த விவசாயி ஒருவருக்கு, முப்பது மூட்டையே தேறியுள்ளது. ஐந்து மூட்டை கறுக்காய் நெல் அத்தனையும் வீண்.

திருத்துறைப்பூண்டி கொள்முதல் நிலையம் எண்.இரண்டுக்கு பாலகிருஷ்ணன் (வயது 49) என்கிற திருத்துறைப் பூண்டி விவசாயி இருபத்திமூன்று மூட்டை நெல் கொண்டு வந்துள்ளார். ஈரப்பதம் பதினேழு சதவிகிதத்துக்கும் கீழே வர வேண்டும் என்பதற்காக நெல் தூற்றும் இயந்திரத்தில் அந்த நெல்லை மூன்று முறை தூற்றியுள்ளனர். கறுக்காய் போக கொள்முதல் தகுதிக்கு வந்தது பதினோரு மூட்டை நெல் மட்டுமே. "பாதிதான் கண்டதா?" எனக் கேட்டு அதே அதிர்ச்சியில் அந்த ஸ்தலத்திலேயே (20.4.03) அவர் இறந்து போனதாகக் கூறுகிறார்கள் திருத்துறைப்பூண்டி விவசாயிகள்.


"கடந்த ஆண்டு வரை தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதலில், இருபத்தைந்து சதவிகிதம் ஈரப்பதம் முதல் மூன்றாம் தரம் வரைக்கும் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் கொள்கையின் அடிப்படையில் இந்திய உணவுக் கழகத்தின் விதிமுறைகளின்படி பதினேழு சதத்துக்கும் கீழே ஈரப்பதம் கொண்ட நெல்லை மட்டுமே கொள்முதல் செய்து வருகின்றனர். இந்த வகையான நெல் பெரும்பாலோரிடம் இல்லை. இதனால் குறுவை சாகுபடியில் ஒரு கிலோ நெல்கூட அரசு கொள்முதல் செய்யவில்லை. 2001ல் 20 லட்சம் டன், 2002ல் 9 லட்சம் டன் சம்பா நெல் அரசு கொள்முதல் செய்திருந்தது. ஆனால் இந்த ஆண்டு இதுவரை 1,18,000 டன் சம்பா நெல் மட்டுமே கொள்முதல் ஆகியுள்ளது. காட்டு மன்னார்குடி, சிதம்பரம் போன்ற பகுதிகளில் விவசாயிகள் தங்கள் நெல்லை விற்கத் தயாராயுள்ளனர். அந்த நெல்லின் தரம் சரியில்லை எனக் கூறி, அரசு அதிகாரிகள் தவிர்த்து வருகின்றனர். கடந்த காலங்களைப் போல மூன்று



• சி.சந்திரகுமார்

வகையான தரப் பிரிவுகளில் அரசு நெல் கொள்முதல் செய்வதே விவசாயிகளுக்குப் பெரும் உதவியாக இருக்கும்" என்கிறார் தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளரான சி. சந்திரகுமார்.

கட்டுரை, படங்கள் :
இருள்நீக்கியான்



• தாய் சரோஜா, சகோதரி ஜெயந்தி, குடும்பத்தினர்



• ஜெயசீலன்

குடிசையிலிருந்து ஓர் ஐ.ஏ.எஸ்!

பனையோலை விசிறியொன்றை, தண்ணீரில் நனைத்தெடுத்து வந்து நம்மிடம் நீட்டுகிறார் அந்த அம்மா. கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து விசிறும்போது மிதமான ஈரம் கலந்த காற்று முகத்தில் வந்து மோதுகிறது. ஏழ்மையின் எளிய அடையாளங்கள் அக் குடிசை வீடெங்கிலும் சிதறிக் கிடக்கின்றன. இருந்தபோதிலும் ஒரு கனவு மெய்ப்பட்டு விட்ட ஆனந்தம் அந்தத் தாய்க்கு.

சமீபத்தில் வெளியான ஐ.ஏ.எஸ். தேர்வு முடிவுகளில் அகில இந்திய அளவில் தேர்ச்சி பெற்ற 284 நபர்களில் 19 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவங்கள். அதில் ஒருவர் அந்தத் தாயின் மகன் த. ஜெயசீலன். தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் அருகே கோவில்பத்து எனும் குக்கிராமத்து விவசாயக் கூலிக் குடும்பத்தில் பிறந்தவர். அப்பா தங்கப்பா எட்டு ஆண்டுக்கு முன்பாக இறந்து போய்விட, அம்மா சரோஜா, குடும்பத்தின் முழு பாரத்தையும் சுமக்க வேண்டியதாயிற்று. இரண்டு பெண்கள் இரண்டு பையன்கள். இதில் மூன்றாமவர் ஜெயசீலன்.

கீழ்மட்ட விவசாயக் கூலிக் குடும்பத்திலிருந்து ஓர் ஐ.ஏ.எஸ். உருவானது எவ்விதம்?

பூதலூர் அரசு நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படிப்பு. வீட்டில் மின்வசதி (இப்பொழுதும் இல்லை) இல்லாததால், தேர்வு சமயங்களில் ஒண்ணரை கி.மீ. நடந்து சென்று புகை வண்டி நிலைய பிளாட்பார விளக்கொளியில் பாடம் படித்துள்ளார். "நாத்து நட்டு, களை பறிச்சு எம் பையனைப் படிக்க வைச்சேன்" எனச் சொல்லும் சரோஜாவின் உள்ளங்கையில் ரேகைக் கோடுகள் காணவில்லை. காப்புக் காய்த்துப் போயுள்ளன.





• கோவில்பத்து வீடு



• பலித்தது கனவு

எட்டாவது முடித்தவுடன், முத்துப்பேட்டையில் வசித்து வரும் இரண்டாவது அக்காவின் வீட்டில் தங்கி, அரசு மேநிலைப் பள்ளியில் ப்ளஸ் டூ வரை படித்துள்ளார். அனைத்திலும் தமிழ் வழிக் கல்வியே. அதன் பின்பு, ரேங்க் அடிப்படையில் அரசின் நிதியுதவியுடன் இருச்சி ஈ.வெ.ரா. கல்லூரியில் இளங்கலை அறிவியல். முதுகலை விலங்கியல் பயின்றது திருச்சி ஜமால் முகமது கல்லூரியில். ஒரத்தநாடு அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பி.எட். தேறியுள்ளார். மேற்கண்ட மூன்றிலும் முதல் ரேங்க் எடுத்து கோல்டு மெடல் வாங்கியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், முத்தூர் அரசு மேநிலைப் பள்ளியில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் முதுகலை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இந்நிலையில் கடின உழைப்பால், ஐ.ஏ.எஸ். தேர்வெழுதி அதில் தேர்ச்சி பெற்றுள்ளார் ஜெயசீலன். அரசுப் பள்ளியில் தமிழ் வழிக்கல்வி பயின்று ஐ.ஏ.எஸ். ஆகலாம் என்பதை நிரூபித்திருக்கிறார் அவர்.

ஐ.ஏ.எஸ்.ல் முதன்மைப் பாடங்களாக அவர் எடுத்தது விலங்கியல் மற்றும் தமிழ் இலக்கியம். அம்மா சரோஜாவின் அன்பும் ஆதரவும், முத்துப்பேட்டை அக்கா, மாமாவின் உதவிகளும், தம்பி கென்னடியின் உழைப்பினால் கிடைத்த ஊதியமுமே ஜெயசீலனை இந்த அளவுக்கு உயர்வடையச் செய்துள்ளன என்கின்றனர் அவரது உறவினர்கள். அம்மா படித்தது ஆறாவது. அப்பா படித்தது எட்டாம் வகுப்பு. மகன் எட்டிப் பிடித்தது ஐ.ஏ.எஸ்.


“பரீட்சையிலும் சரி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டின்னு எது வெச்சாலும் சரி, அதுலே எல்லாத் துலயும் முதல் பரிசு வாங்கியாருவான் எம் மவன். அப்பவே இவன் நல்லா படிச்சு, உசந்த உத்தியோகத்துக்கு நிச்சயமா வருவான்னு கனவு கண்டுட்டு இருந்தேன். இப்ப அந்தக் கனவு பலிச்சுப் போச்சு!'' சந்தோஷத்தில் கண்கள் பனிக்கிறார் அம்மா சரோஜா.

“என்னோட தம்பி பல சிரமங்களுக்கு இடையே படிச்சு ஐ.ஏ.எஸ். ஆனது ரொம்ப சந்தோஷம். தான் எப்படி கீழ் மட்டத்துலேந்து வந்தோம்ங்கிறது அவனுக்கு எப்பவுமே தோணிக்கிட்டே இருக்கும். அதனால வருங்காலத்துலே அவன் வகிக்கப் போற அரசாங்கப் பணிகள் மூலமா, ஏழை எளிய ஜனங்களுக்கு நல்லது செய்வான் என்கிற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு!'' என்கிறார் த. ஜெயசீலனின் மூத்த சகோதரி ஜெயந்தி.

கட்டுரை, படங்கள் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

"நீங்க என் கணவரா வந்தது என் போன ஜன்மத்துப் புண்ணியத்தின் பலன்ங்க!"

"மெகா தொடர் பார்த்துட்டு நீ அழற போதெல்லாம் கூடவே அழறேன்ங்கிறதுக்காக இப்படியெல்லாம் உணர்ச்சி வசப்படாதே கமலா!"



"தெரியாத விஷயத்தை தெரிஞ்சவங்களிடம் கேட்கறதில் என்ன தப்பு?"

"அதுக்காக சும்மா சும்மா ஆபீஸுக்கு போன் போட்டு 'சாம்பாருக்கு எத்தனை ஸ்பூன் உப்புப் போடணும், மிளகாய் பொடி எத்தனை போகணும்'னு கேட்டுக் கழுத்தறுக்கணுமா?"



"சாப்பிடும்போது கையில் எதுக்கு புல்வெட்டும் கத்திரிக்கோல்?"

"நீ செய்த சப்பாத்தி பிய்க்கவே வரமாட்டேங்குதே கமலா!"

உ. ராஜாஜி



முறைக்கலாமா சும்மா...சும்மா...!



"சுபானுனு என்னவோ சொல்லிக்கிட்டிருந்தியே! யாருடா அந்தப் பொண்ணு?"

"அலையாதேடா? நடப்பு தமிழ்ப் புத்தாண்டின் பெயர்தான் சுபானு!"

"மனிதர்களுக்கு மறுபிறவி உண்டா குருவே?"


"ஹோட்டல் இட்லி மறுநாள் உப்புமாவாக மறுபிறவி எடுக்கிற வரை மனுஷக்கும் மறுபிறவி உண்டு! நம்பு!"





"என் தங்கையை நீங்க இப்படி முறைக்கிறது வெட்கக்கேடு!"

"சும்மா இருடி! அவ போட்டிருக்கிற ஜீன்ஸும் டிசர்ட்டும் என்னது!"



U

புன்னகை பூவே

தமிழ்ப் படம்தான் பார்க்க வந்திருக்கிறோமா, இல்லை. 'பூ ஹெவ் காட் மெயில்' போன்ற மென்மையான ஹாலிவுட் கதைப் படமொன்றை, தரமாக தமிழில் டப் செய்திருக்கிறார்களா என்ற சந்தோஷ சந்தேகம் வந்துவிடுகிறது. காரணங்கள் மொத்தம் ஐந்து.

1. பழைய சாயல் இல்லாத கதை மற்றும் காதலர்களின் மனத்திற்குள்ளிலிருந்து கசியும் இயல்பான வசனம்,

2. கிஞ்சிற்றும் கிராப்ட் ஒர்க் என்று சொல்ல முடியாத இயல்பான, இனிய நகர்தலோடு கூடிய திரைக் கதை மற்றும் திரைமொழியைப் புரிந்து கொண்டிருக்கும் சபா கைலாஷின் சபாஷ் போட வைக்கும் இயக்கம்.

3. பாத்திரங்களின் மனநிலை, பார்வையாளனின் மனநிலை, இயக்குநரின் படைப்பு மனம், ஒளிப்பதிவாளரின் திறமை... இத்தனை கோணங்களையும் தன் வயப்படுத்திக் கொண்டிருக்கும் சுரேஷ் தேவனின் சுந்தரக் கேமரா.

4. ஒவ்வொரு மெட்டுக்குள்ளும் யுவன் பூட்டி வைத்திருக்கும் மயிலிறகு இசை.

5. பாத்திரங்களை மனத்தில் வாங்கி இயல்பான உணர்ச்சிகளை முகத்தில் தேக்கி, 'புதுமுகங்களா!' என்று வியக்க வைக்கிற நந்தா, ரேகா, காவேரியின் குறைசொல்ல முடியாத நடிப்பு.

கத.. கத.. கதை என்னவென்று கேட்கிறீர்கள் தானே? இரு தோழிகள். எல்லா விஷயங்களிலும் ஒரே கருத்து, ஒரே பார்வை. ஆனால் 'காதல்' என்பதில் மட்டும் முரண்படுகிறார்கள்.

காதல் புனிதமென்று மதிக்கிறாள் ஒருத்தி. காதல் புரட்டு என மிதிக்கிறாள் மற்றொருத்தி. இவர்களது வாழ்க்கையில் குறுக்கிடும் ஓர் இளைஞனால் இருவரது கருத்துமே மாறுகிறது.

காதலை வெறுத்தவள் தொடு உணர்ச்சி தந்த, இன்ப அதிர்ச்சியில் அந்த வாலிபனையே காதலிக்கிறாள். காதலை மதித்தவளோ காலதாமதத்தால் காதலித்தவனையே தவற விடுகிறாள். இறுதியில் 'நட்பா, காதலா?' என்று வருகிறபோது, நட்பே அற்புதமானது என தூக்கிப்பிடிக்கிறாள் ஒருத்தி.

யதார்த்தமும் மென்மையுமான ஹீரோவை, பத்து ரவுடிகளைப் பந்தாடும் அசாத்திய பலசாலியாகக் கட்டி 'திடீர் அதிர்ச்சி வைத்தியம்' தருவது நல்ல படத்திற்குள் சின்ன பிளாக் மார்க். இருப்பினும் புன்னகை பூவில் புதிய வாசமுண்டு.

- விஷுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்

ஏறு நூறு-13



இனி என்ன செய்யணும்?

இதுவரை வந்த பன்னிரண்டு கட்டுரைகளும், மாணவர்களுக்கு கேரியர் பிளானிங் என்றால் என்ன? அதை முறையாகச் செய்வது எப்படி என அமைந்திருந்தன. மாணவப் பருவத்தில் இருக்கும்போதே, வளமான வாழ்க்கை அமைத்துக் கொள்ளும் வகைகள் பற்றியும் வலியுறுத்தப் பட்டன.

இனி வரப் போகும் கட்டுரைகள், வேலைக்கு விண்ணப்பிப்பது எப்படி, எந்த மாதிரி வேலை செய்ய உங்களுக்கு விருப்பம் இருக்கிறது. இன்டர்வியூவில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், வேலை கிடைத்த பின் அதில் முன்னேறுவது எப்படி, வெளியுலகில் என்னென்ன வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன, போன்ற தலைப்புகளில் அமையும்.

முதலில் 'பயோ-டேட்டா' அல்லது 'ரெஸ்யுமே' எனப்படும் உங்கள் கல்வி - பிற தகுதிகளைச் சொல்லும் விண்ணப்பம் அனுப்புவது எப்படி என்பதைப் பார்ப்போம்.

வேலை கிடைக்க வேண்டும் என்ற அவசரத்தில், சிலர் முக்கியமான விவரங்களை விட்டுவிடுவதுண்டு. இந்த விண்ணப்பப் படிவம்தான் உங்களை வேலை மார்க்கெட்டில் அழுத்தமாக அறிமுகம் செய்யும் கருவி. ஒருவகையில் பார்க்கப் போனால் உங்களின் தகுதி குறித்த விளம்பரம். விளம்பரம் எப்படி வாங்குகிறவரைக் கவர்கிற மாதிரி அமைகிறதோ, அதே போலத்தான் உங்கள் வேலைக்கான விண்ணப்பமும் அமைய வேண்டும். பிற விண்ணப்பங்களில் இருந்து உங்களுடையதை மட்டும் தனித்துக் காண்பிக்க வேண்டும். உங்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதால் அவர்களுக்கு என்ன பயன் என்பதை உங்கள் விண்ணப்பத்தின் ஒவ்வொரு வரியும் பறைசாற்ற வேண்டும்.

இருபது வருடங்களை இரண்டே பக்கங்களில் அடைப்பது அவ்வளவு எளிதல்ல. என்றாலும் நேர்காணலுக்கு உங்களை அழைக்கத் தூண்டுகிற மாதிரி இருந்தாக வேண்டும்!

- உங்களின் முழுத் திறமை, முற்றிலும் புதிய ஒருவருக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.
- சந்திப்புக்கு வழி வகுக்க வேண்டும்.
- உங்களைப் பற்றி ஏதும் அறியாத ஒருவருக்கு, உங்களைப் பற்றிய முழுத் தகவல்களும் கொடுக்கப்பட வேண்டும்.
- நேர் காணலுக்குப் பிறகும் உங்களை அவருக்கு நினைவு படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆரம்பத்தில், உங்கள் இலக்கு (அல்லது லட்சியம்) என்ன, எந்தப் பதவிக்கு நீங்கள் பொருத்தமானவர், உங்களை நீங்களே நன்கு அறிந்துதான் இதற்கு விண்ணப்பிக்கிறீர்கள் என்ற பாரா அமைய வேண்டும்.


உங்களுக்கு முன் அனுபவம் இருப்பின், அடுத்து

ஆர்.கண்ணன்



இராக்கில் வலைய வரும் ஜோக்கு!

சதாமின் அரண்மனை முற்றத்தில் அவருடன் ரமதன், தாரிக் அஸீஸ் உட்கார்ந்திருக்க, வானில் வாத்துகள் பறந்தன.



ஏ.கே. 47ஐக் கொடுத்து, "சுடு" என்றார் சதாம். மற்ற இருவரும் முயன்று தோற்ற பிறகு சதாம் தாமே துப்பாக்கியைத் தூக்கி வான் நோக்கி ஒரு ரவுண்ட் சுட்டார். ஒரு வாத்துகூட விழவில்லை. வானத்தைச் சுட்டிக் காட்டி தாரிக் அஸீஸ் சொன்னார். "பாருங்க அதிசயத்தை! செத்துப் போன பறவைக்கூட பறக்குது!"

- சதாம் இருந்த வரையில் இப்படிப் பட்ட ஜோக்குகளைச் சொன்னவர்களின் நாக்கு அறுக்கப்பட்டது!

- நன்றி 'நியூஸ்வீக்'

அதைக் குறிப்பிடுங்கள்.

கடைசியாக வேலை பார்த்த நிறுவனம், தேதிகள், பதவி, சுருக்கமாக - என்ன மாதிரியான வேலை என்று தொடங்கி, இறுதியில் முதலில் பார்த்த வேலை பற்றிய குறிப்புகளாக அமைய வேண்டும்.

கல்வித் தகுதிகளில், முதலில் உங்கள் உச்சமான டிகிரி, கல்லூரி, படித்த வருடங்கள் என்று ஆரம்பித்து, பிறகே பள்ளிக் கல்வி கடைசியில் வர வேண்டும். வேறு கூடுதலான கல்வித் தகுதிகள் இருப்பின் அவற்றை அதன் கீழ், பட்டியலிடுங்கள்.

அடுத்ததாக, பள்ளியிலும் கல்லூரியிலும் நீங்கள் பங்கு கொண்ட நிகழ்ச்சிகளைக் கூறுங்கள். நீங்கள் எந்தெந்த வகைகளில் அனுபவசாலி என்பதை அவை சொல்லும்.

உங்கள் அக்கறை எப்படிப்பட்ட விஷயங்களில் என்பது அடுத்து வர வேண்டும். அது உங்கள் ஆளுமையை வெளிப்படுத்தும்.

எந்தச் சங்கங்களிலாவது நீங்கள் உறுப்பினராக இருந்தால், அடுத்து அதைக் குறிப்பிடுங்கள். பங்கு கொண்ட கருத்தரங்குகள், தலைப்புகள் என்று வரிசையாகக் கூறுங்கள். பரிசுகள் பெற்றிருந்தால் அவற்றையும் கவனமாக எழுதுங்கள்.

உங்களைப் பற்றிய குறிப்பில், உங்கள் முகவரி (தற்காலிக, நிரந்தர), தொலைபேசி எண், ஈமெயில் ஐடி, தெரிந்த மொழிகள், பிறந்த தேதி ஆகியவற்றைக் குறிப்பிடுங்கள்.

ஒருவரை முதன் முதலில் பார்க்கும்போது உருவாகும் எண்ணம் எப்படியோ, அதே போலத்தான் விண்ணப்பத்தைப் படிக்கும் போதும் உருவாகும். விண்ணப்பத்தின் முதல் பகுதி சுவாரசியமாக இருந்தால்தான், அடுத்த பகுதியைப் படிக்கத் தோன்றும்.

- இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- எழுத்துகளும், வடிவமும் எளிதாகப் படிக்கும்படி இருக்க வேண்டும்.
- பெயர், முகவரி முதலியவை தடித்த எழுத்துகளில் அமைய வேண்டும்.
- மஞ்சள், நீலம் என்று வண்ணங்களில் அல்லாமல், நல்ல வெள்ளைத் தாளில், லேசர் அச்சில் இருத்தல் அவசியம்.
- குறைந்த பட்ச அளவுக்கே தாளை மடியுங்கள். நாலாக, எட்டாக மடித்துக் காகிதத்தைக் கசக்க வேண்டாம்.

இந்தக் குறிப்புகள்தான் 'பயோடேட்டா' அல்லது 'ரெஸ்யுமே'. இதற்கு ஓர் எளிமையான கடிதம் முன் பக்கமாக இருத்தல் வேண்டும். அதில், எந்த வேலைக்கு விண்ணப்பிக்கிறீர்கள், ஏன் அந்தக் குறிப்பிட்ட வேலையில் சேர விரும்புகிறீர்கள் என்பதோடு, நேர்காணலின்போது இன்னும் விவரமாக உங்களைப் பற்றிப் பேச விருப்பம் இருப்பதைக் குறிப்பிடுங்கள்.

நேர்காணலுக்கு அழைப்பு வந்துவிட்டால், ஒரு தடையைத் தாண்டி விட்ட மாதிரிதான்.

உங்கள் ஆர்வத்தைத் தெரிவிக்கும் 'ஆப்டிட்யூட் டெஸ்ட்', குருப் டிஸ்கஷன் இரண்டும் முடிந்து விட்டால், நேர்காணல்தான்.

ஆப்டிட்யூட் டெஸ்ட்டா, அப்படீன்னா?

ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் ஒரு நபரின் பொது அறிவை அல்லது சிறப்புத் தகுதியை மதிப்பிடும் ஒரு வகைத் தேர்வுதான் இது. இதுதான் நீங்கள் குறிப்பிட்ட வேலைக்குத் தகுதியான மனநிலை கொண்டவராக இருக்கிறீர்களா என்பதைக் குறிப்பாகக் காண்பிக்கும்.

இந்த மனப்பாங்கைக் கணிக்கும் தேர்வு பலவகைப்படும். இதை வெர்பல், நான்-வெர்பல், நியூமரிகல் எபிலிடீஸ் என்று மூன்று வகைகளாகச் சொல்லுவார்கள்.

முதல் வகையில், வார்த்தைகளை எப்படிப் புரிந்து கொள்ளுகிறீர்கள், அவற்றில் பொதிந்துள்ள ஐடியாக்களை எப்படி வெளிப்படுத்து

கிறீர்கள், கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியத்தில் மறைந்து கிடக்கும் அல்லது இல்லாத வார்த்தை எது, பொருத்தமில்லாத வார்த்தை எது என்பதை எவ்வாறு கண்டுபிடிக்கிறீர்கள்? - இவையே அமைந்திருக்கும்.

இரண்டாவதில் சில வடிவங்களை மட்டும் கொடுத்து அவற்றை எவ்வாறு தரம் பிரிக்கிறீர்கள் அல்லது புரிந்து கொள்ளுகிறீர்கள் என்பவை கேட்கப்படும்.

மூன்றாவது, எண்கள் சம்பந்தப்பட்டது. வேகமாகவும், சரியாகவும் நீங்கள் எப்படிக் கணிக்கிறீர்கள் என்பதைக் கண்டறியவே இந்தத் தேர்வு.

சில நிறுவனங்களில் ஆப்டிட்யூட் டெஸ்ட் இருக்காது. இருக்குமானால் அவை எப்படி இருக்கும் என்று, அதற்கான தகவல்கள் தர இயலுமா என்று கேட்டுக் கொள்ளுங்கள்.

அடுத்தபடி, குரூப் டிஸ்கஷன் - குழு விவாதம்.

இந்தக் குழு விவாதங்களில் அலசப்படும் விஷயங்கள் பெரும்பாலும் சமீபத்திய செய்திகள், பிஸினஸ், ஸ்போர்ட்ஸ் அல்லது பொது நிகழ்வுகள் பற்றி இருக்கும். எந்த அளவுக்கு நீங்கள் படிப்பதில் அக்கறை காண்பிக்கிறீர்களோ, அந்தளவுக்கு உங்களுக்கு நல்லது.

குரூப் டிஸ்கஷனில் பங்கு கொள்ளுமுன், சில டிப்ஸ்:

- பேச ஆரம்பிக்கு முன், விஷயத்தை முழுவதுமாகப் புரிந்து கொள்ளுங்கள்.
- பேச வாய்ப்புக் கிடைக்கிறதா என்று பாருங்கள். இல்லை என்றால் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- முடிந்தால் விவாதத்தை நீங்களே ஆரம்பித்து வையுங்கள்.
- விவாதத்தைச் செம்மையாக அமைத்துக் கொள்ளுங்கள். முன்னுக்குப் பின்னாகப் பேச வேண்டாம்.
- இறுதியில் முழு விவாதக் கருத்தையும் அழுத்தமாக, சுருக்கமாக எடுத்துச் சொல்லுங்கள்.
- குழு விவாதத்தில் சுறுசுறுப்பாகச் செயல்படுங்கள். உறுதிபடச் சொல்லுங்கள்.
- உங்கள் கருத்தை அர்த்தம் பொதிந்த வார்த்தைகளில், தெளிவாக வெளிப்படுத்துங்கள்.
- கவனமாகக் கூர்ந்து கேளுங்கள்.
- எவ்வளவு அதிகம் பேசுகிறீர்கள் என்பது முக்கியமல்ல. பேசுவது, எவ்வளவு முக்கியமானதாக, தரமானதாக இருக்கிறது என்பதுதான் கணிக்கப்படும்.

(தொடரும்)

காட்சி : 24

மாலை / தெரு

பாத்திரங்கள் : **கண்ணன், கீதா, தேவயானி, வெயிட்டர், தேவயானியின் அப்பா, அம்மா.**

மரங்கள் அடர்ந்த தெரு. பிளாட் பாரத்தில் நடந்து போகிறார்கள் கண்ணனும் கீதாவும். ஜனசந்தடி இல்லாத தெருவாக இருக்கிறது அது. குரல் ஓவர்லாப் ஆகிறது. காட்சியில், அவர்கள் இருவரையும் தவிர, தெரு, மரங்கள், தெரு சம்பந்தப்பட்ட காட்சிகள் இடம் பெறுகின்றன.

கீதா : அப்புறம், கிரீம்முக்கு சுலோகன் கண்டுபிடிச்சீங்களா?

கண்ணன் : பொய்தான் சொல்லணும் கீதா. சில நாட்கள்ல, அல்லது மாசத்துல, முகத்தோட 'கலரையே' மாத்துது ஒரு க்ரீம்னா, அது சரியா? மாத்த முடியுமா? மாத்த முடியும்னா, அது முக சருமத்துக்கு நல்லதுதானா? எல்லாத்துக்கும் மேல, ஏன் கலர் மாறணும்? இந்திய நிறமே பழுப்பும், கறுப்பும்தானே?

கீதா : கறுப்பும் பழுப்பும் தாழ்வான நிறம்னு, ஒரு வகையான தாழ்வு மனப்பான்மையையே ஏற்படுத்தி இருக்காங்க, வியாபாரிங்க. இதையெல்லாம் எப்படி அரசாங்கம் அனுமதிக்கலாம்?

கண்ணன் : சினிமா நடிகைகள் பயன்படுத்தற சோப்புன்னுதான் விளம்பரங்கள், அந்தக் காலத்துல வரும். இப்ப நீங்களே சினிமா நட்சத்திரங்களா மாறுங்கன்னு விளம்பரம் பேச ஆரம்பிச்சுடுச்சு. எல்லாரும் எதுக்கு சினிமா நட்சத்திரம் ஆகணும்? அதோடு, அழகுக்கும், நிறத்துக்கும் என்ன சம்பந்தம்? அழகுக்கும் உடம்புக்கும் என்ன சம்பந்தம்? அழகு, மனசோட மலர்ச்சி, இல்லியா?

(சுவர் மேல் காக்கைகள் வரிசையாக அமர்ந்து கூட்டம் பேசுகின்றன.)

நான் லேப்-சயின்டிஸ்டோட பேசினேன். முக சருமத்தை வெயில்லேந்து காக்கிற சேர்மானம், இந்தக் க்ரீம்ல இருக்கிறதாம். இது மட்டும்தான் உண்மை. இதை மையப்படுத்தலாமான்னு யோசிக்கிறேன்.

காட்சி மாறுகிறது. வெளிச்சம் மங்கலாக இருக்கிற, ரெஸ்டாரண்டில் இருவரும் எதிர் எதிராக அமர்ந்திருக்கிறார்கள். வெயிட்டர் வருகிறார். அவர் முகத்தில் பரிச்சய பாவம் தெரிகிறது.

வெயிட்டரிடம் கண்ணன் : ஸ்வீட்டுல, புதுசா என்ன சார் இருக்கு?

வெயிட்டர் : மைசூர்பாக், குலாப்ஜாமுன் புதுசு சார்.

கண்ணன், கீதாவைப் பார்க்கிறான்.

கீதா : எதுக்கு ஸ்வீட்டெல்லாம்?

கண்ணன் : சாப்பிடலாம் இல்லையா?

கீதா : சரி. எனக்கு மைசூர் பாக்.

கண்ணன் : எனக்கும் அதே.

(வெயிட்டர் அகன்றபின்)

கீதா : என்ன விசேஷம்?

கண்ணன் : உங்க உதவியில வேலை கிடைச்சு, ரெண்டு மாசம் சம்பளமும் வாங்கிட்டேன். இது ஒரு வகையில நன்றி சொல்லற பார்ட்டி....

(கீதா சிரித்துக் கொள்கிறாள்)

(சர்வர் இனிப்புகளை வைத்து விட்டுச் செல்கிறார்)

கீதா : வேலை பிடிச்சிருக்கா?

கண்ணன் : எனக்குப் பிடிக்காத வேலைன்னு ஒண்ணும் இல்லீங்க. பொறுப்பை ஏத்துக்கிட்டா, அதுக்கு உண்மையா இருக்கணும்.

கீதா : உண்மையா இருக்

ஜீவநதி 7

பிரபஞ்சன்



கீங்கன்னு அம்சா மேடம் சொன்னாங்க. உங்களை எம்.டிக்கு பிடிச்சிருக்குன்னும் சொன்னாங்க.

(ரெஸ்டாரெண்டின் கதவைத் திறந்து கொண்டு தேவயானி உள்ளே பிரவேசிக்கிறாள். இருட்டில் திதானிக்கிறாள். கீதா கையசைக்கவும், அவர்களுடன் வந்து அமர்கிறாள். கண்ணன், வெயிட்டரிடம் 'அதே' என்பது போல் சைகை செய்கிறான். அவளுக்கும் ஸ்வீட் வருகிறது.)

கீதா : என்னாச்சு?

தேவயானி : *(சாப்பிட்டபடி)* அம்சா மாமி பேசி இருக்காங்க.

(கண்ணன் புரியாமல் விழிக்கிறான்.)

கீதா : கண்ணன், தேவயானிக்கும் லாரன்சுக்கும் சினேகிதம். ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறாங்க. அப்பா அம்மா என்ன சொல்வாங்களோன்னு இவளுக்குத் தயக்கம். அம்சா மாமிக்கிட்ட சொல்லிப் பேசச் சொன்னோம்.

கண்ணன் : அவங்க ரெண்டு பேரும் விரும்பும்போது அப்பா அம்மா எதற்குத் தடை பண்ணணும்?

கீதா : நீங்க எந்த உலகத்துல இருக்கீங்க? இவ தேவயானி. அவர் லாரன்ஸ். இது போதாதா, பிரச்னைக்கு?

கண்ணன் : ரெண்டு மதக்காரர்கள், கல்யாணம் பண்ணிக்கிட்டா, குழந்தை பிறக்குதே. கடவுளுக்கு விருப்பம் இல்லேன்னா, குழந்தை பிறக்க முடியாதே! அப்புறம், மனுஷங்களுக்குள்ள ஏன் பிரச்னை?

(கீதாவும் தேவயானியும் சிரிக்கிறார்கள்)

கீதா : நீ சொல்லு.



தேவயானி : அம்மாதான் முதல்ல தை தைன்னு குதிச்சாங்களாம்.

(காட்சி மாற்றம். தேவயானியின் வீடு. அம்சா, தேவயானியின் அப்பா, அம்மா இருக்கிறார்கள். அம்மா, இவர்கள் பேச்சிலும் கலந்து கொள்கிறாள்)

அம்மா : செத்தாலும், எங்க குடும்பத்துல இதை அனுமதிக்கமாட்டோம். ஜாதிக் கலப்புன்னாலும் யோசிக்கலாம். இது மதக் கலப்பு. அதோடு, இவளுக்கு அடுத்து ஒரு பெண் இருக்கா. இதையெல்லாம் யோசிச்சுப் பார்க்கணும்.

அப்பா : மானக்கேடு! அவளுக்குத் தகுந்த மாப்பிள்ளையை நான் பார்த்து வைக்க மாட்டேனா? நாளையிலேந்து, வெளியே தலைகாட்ட முடியாது. நாங்க கௌரவமான குடும்பம்.

(காட்சி மாறுகிறது. மீண்டும் ரெஸ்டாரண்ட்).

தேவயானி : எனக்கு இவங்களைப் பத்தின அக்கறை இல்ல சார்.... அப்பா அம்மாங்கிற மரியாதைக்கு இவங்கக்கிட்ட சொல்லிட்டு இவங்க ஆசிர்வாதத்தோட கல்யாணம் நடந்தா நல்லா இருக்கும்னு நினைச்சேன். இல்லேன்னா, எனக்கு நஷ்டம் இல்லை சார். லாரன்ஸ் வீட்டுல என்னை எப்பவோ வரச் சொல்லிட்டாங்க. என்ன, கல்யாண மண்டபத்துல நடக்க வேண்டிய கல்யாணம், சர்ச்ல நடக்கப் போறது. அவ்வளவுதானே?

கண்ணன் : பரவாயில்லை. ரொம்பத் தெளிவா இருக்கீங்க. உங்க அப்பாவும் அம்மாவும் உங்ககிட்ட என்ன சொன்னாங்க?

காட்சி மாறுகிறது. தேவயானி, செருப்பைக் கழற்றிவிட்டு, வீட்டுக்குள் நுழைகிறாள். பையை மேசைமேல் வைத்துவிட்டு, பாத்ரூமுக்குச் சென்று முகம் கழுவிக் கொண்டு திரும்புகிறாள். காபி தம்ளரை மேசை மேல் வைக்கிறாள் அம்மா. தேவயானி, காபியை எடுத்துக்கொண்டு சோபாவில் அமர்கிறாள்.

அம்மா : ஏண்டி. இது உனக்கே நல்லா இருக்கா?

தேவயானி : எது?

அம்மா : யாரோ ஒரு கிறிஸ்துவப் பையனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியாமே?

தேவயானி : ஆமாம்மா. எனக்கு அவரைப் பிடிச்சது. நல்ல மனுஷன். அவர் எந்த மதமா இருந்தா என்ன? இதுல நல்லா இல்லாமே போறதுக்கு என்ன இருக்கு?


அம்மா : நம்ம சொந்தம், உறவுக்காரங்க என்னா சொல்வாங்க?


தேவயானி : குரோம்பேட்டை சித்தப்பாவும், மாயவரம் மாமாவும் கோவிச்சுக்குவாங்களா? கோவிச்சுக்கட்டும். என்ன போச்சு? உலகம் ரொம்ப பெரிசும்மா. அப்பாவுக்குச் சேர வேண்டிய சொத்தை மோசம் பண்ணவர் சித்தப்பான்னு நீயே சொல்றே. மனித தர்மத்தைக் காப்பாற்றாத மனுஷன், சாதி தர்மத்தை நான் காப்பாற்றலைன்னு கோவிச்சுக்க என்ன இருக்கு? எனக்கு யாரைப் பற்றியும் கவலை இல்லம்மா. கலப்புத் திருமணம், ரொம்ப சாதாரணமாப் போச்சும்மா. மனுஷனும் மனுஷியும் கலக்கிறது என்ன கலப்பு? இயற்கை தானே?

(காட்சி மாறுகிறது. மீண்டும் ரெஸ்டாரண்ட்)

கீதா : அப்பா என்னடி சொன்னார்?

தேவயானி : கோபப்படணுமே. அப்பாங்கிற ஹோதாவைக் காப்பாத்திக்க, கோபப்படற மாதிரி நடிக்கணுமே. அம்மாவுக்கு, ஏதோ அவங்கதான் இந்தியக் கலாசாரத்தை, தர்மத்தைக் காப்பாற்றுவதா புருஷனுக்குத் தெரிவிச்சுக்கணும். இவங்க ரெண்டு பேர் பிரச்னையும் இதுதான். நான் தெளிவா சொல்லிட்டேன். 'தோ... பாருங்க.





நீங்க முயற்சி பண்ணினாலும், லாரன்ஸ் மாதிரி ஒரு மாப் பிள்ளையைப் பார்க்க முடியாது. ஒண்ணும் பேசா தீங்கன்னு 'கட் அன்ட் ரைட்'டா சொல்லிட் டேன். யாரும் அப்புறம் வாயைத் திறக்கலை.

(காபி அருந்துகிறார்கள்)

கண்ணன் : உங்க தங்கை பற்றின பயமா இருக்குமோ, உங்க பெற்றோருக்கு.

தேவயானி : அதெல்லாம் ஒண்ணும் இல்ல சார். அது ஒரு சாக்கு போக்கு. அக்கா பற்றின கவலைதானே முதல்ல. தங்கைக்கு பிரச்னை இல்ல. நல்ல படிப்பு, நல்ல வேலை, நல்ல சம்பளம். கொத்திக்கிட்டு போயிடு வான்.

கண்ணன் : எப்படி? வெள்ளைக் குதிரையில, பட்டாக் கத்தியோட, பெரிய மீசை மதுரை வீரன் வந்து கொத்துவானா?

தேவயானி : இல்ல பென்ஸ் கார்ல, 'செல்' கைக்காரன் வந்து ஏத்திக்கிட்டு போவான். மீசை, ஃபேஷன் இல்லை, இப் பல்லாம்....

(சிரிக்கிறார்கள்)

காட்சி : 25

பகல் / அலுவலகம்

பாத்திரங்கள் : **கீதா, தெய்வநாயகி, மானேஜர்.**

அலுவலகச் சூழல். ஒரு ஃபைலுடன் கீதா, தெய்வநாயகியின் அருகில் வர, தெய்வநாயகி நிமிர்ந்து பார்க்கிறாள். அவளுக்கு மட்டும் கேட்கும் தொனியில் கீதா பேசுகிறாள்.

கீதா : மானேஜர் ஃப்ரீயா இருக்காரா பாரு தெய்வா. அவர்கிட்ட ஒரு முக்கிய மான விஷயம் பேசணும்.

தெய்வ : என்னம்மா?

கீதா : நடராஜர் சிலை ரொம்பப் பழசு. அதனால விலை கூடுதல்னு சில லட்ச ரூபாய் பில் போடச் சொல்றார் மானேஜர். அது பற்றிப் பேச ணும்.

தெய்வ : இந்த மனுஷன், ரொம்ப பேராசைக்காரர்ம்மா. இவர், அபாண்டமா சொல்றது, முதலாளிக் குப் பிடிக்குது.

கீதா : அவங்களுக்கு லாபம் கூடுது. அதனால, இவரோட 'பொசிஷன்' பாதுகாப்பாயிடறது.

(தெய்வா, டயல் செய்து மானேஜருடன் பேசுகிறாள்)

தெய்வா : சார். கீதா, உங்களோட 'டிஸ்கஸ்' பண்ணணுமாம்.

ஃப்ரீயா இருந்தா அனுப்பி வைக்கிறேன்.

(போனில் மறுமுனையிலிருந்து பதில் வருகிறது)

தெய்வா : ஓ.கே.சார்.

(இன்டர்காமிலிருந்து விடுபட்டு)

நீ போ, கீதா.

(கீதா... கதவை இலேசாகத் தட்டிவிட்டு, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறாள். மானேஜர் மத்திய வயதினர். அரைக்கை சட்டை, பேண்ட்டுடன் இருக் கிறார். 'கோட்' இல்லை)

மானேஜர் : உக்காரும்மா.

கீதா : சார்... நடராஜர் சிலைக்கு, பில் தொகை கூடுதல் மாதிரி இருக்கே.

கீதா கொடுத்த ஃபைலைப் பார்க்கிறார்.

மானேஜர் : எவ்வளவு போட்டிருக்கு?


கீதா : ரெண்டு லட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரம்னு போட்டிருக்கீங்க, சார்.

மானேஜர் : அதுல என்ன பிரச்னை?

கீதா : ரெண்டு விஷயம் சார். அந்தச் சிலை, பதினாலாம் நூற்றாண்டுதுன்னு போட்டிருக்கு. அது, போன மாசம் மாமல்ல புரத்துல செஞ்சு வந்தது. வெளிநாட்டுக் காரரை ஏமாத்தற மாதிரி இருக்கு. அப்புறம், விலை, மிக மிக அதிகம்.

மானேஜர் : இதுல, உங்களைப் பாதிக்கிற சமாசாரம் எது?

கீதா : *(திகைக்கிறாள்)* இந்தப் பொய்



படம் : ஸ்ரீஹரி

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'கல்கி' மற்றும் எஸ்.எஸ். மியூசிக் இணைந்து நடத்திய 'சூப்பர் சிக்ஸ்' போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்ற சென்னை வாசகி என்.விஜய லக்ஷ்மிக்கு, 21'' கலர் டி.வி. அன்பளிப்பாகத் தரப்படுகிறது.

என்னை உறுத்துது, சார்.

மானேஜர் : அவசியம் இல்லையே. இந்தப் பொய்யை நீங்களோ, நானோ சொல்லலை. 'கம்பெனி' என்கிற இயந்திரம் சொல்லுது. முதலாளிகள், இந்த விலை வைக்கப்படணும்னு நோட் அனுப்பறாங்க. நாம் அமல்படுத்தறோம்.

சீதா : விலைக்கு அப்புறம் வரலாம், சார். புது சிலையைப் பழைய சிலைன்னு ஏமாத்தலாமாங்கிறதுதான்...

மானேஜர் : கையில 'பிஸ்லெரி' தண்ணி பாட்டிலோட வர்ற வெள்ளைக்காரனுக்கு, எல்லாமே ஞானமயமா இருக்கும். திருநீறு இட்டு, காவி உடுத்தினவங்க எல்லாம் மாணிக்கவாசகரா, ஞானசம்பந்தரா தோணும். அந்த மயக்கத்துல, நாம் சொல்றதை அவன் நம்பிடுவான். சட்டப்படி, நாம் வாயால அது பழைய சிலைன்னு சொல்றோமே தவிர, எழுத்துபூர்வமா எழுதித் தரலை. எந்த இடத்திலும், நாம் 'கமிட்' பண்ணிக்கலை. அப்புறம் எதுக்குப் பிரச்னை? பிரச்னை ஏதாவது வந்தா, நான் பதில் சொல்லக் கடமைப்பட்டவன். நீங்க இல்லயே. என்ன பயப்படுறீங்களா?

சீதா : நான் எதுக்கும் யாருக்கும் பயப்படறது இல்லை சார். தப்பும் தவறும் பண்றவங்கதான் சார் பயப்படணும். கம்பெனி பண்ற தவறுகள்ளே நான் பங்கெடுக்கக் கூடாது. அதை நான் விரும்பலை. சிலைகளோட விலையை நீங்க ஃபிக்ஸ் பண்றீங்க. நான்தான், அதை விரிவா, கவர்ச்சியா எழுத வேண்டியிருக்கு. அப்படி எழுதும்போது மனசு கஷ்டப்படுது. நேத்து ஒரு வெள்ளைக்காரர் வந்து, பார்த்துட்டு, உண்மையா, பிரமிச்சு நின்னார், இதை கர்ம பூமி, ஞான பூமின்னு நம்பறார். அவரை ஏமாத்துறோம். எனக்குச் சங்கடமா இருக்கு.

(மானேஜர், டேபிள் வெயிட்டைச் சுழற்றியபடி இருக்கிறார்.)

மானேஜர் : சீதா, வியாபாரத்துல பொய் சகஜம்தானே? அனுமதிக்கப்பட்டதுதானே?

சீதா : இல்ல சார். பொய், எந்தத் தொழிலுக்கும், எந்த வியாபாரத்துக்கும், தனி மனிதருக்கும் சகஜமாகவே இருக்க முடியாது. சிற்பிகளிடம் ஆர்டர் பண்றோம். அவங்களுக்குச் சம்பளம் தர்றோம். சிலைகளை வாங்கி, ஒரு இடத்துல வைச்சி விக்கிறோம். ஏற்றுமதி பண்றோம். எல்லாத்துக்கும் பெர்சன்டேஜ் கூடும். என் மாதிரி வேலை பார்க்கிறவங்க இருக்கோம். எங்களுக்கும் சம்பளம் தரணும். எல்லாம், சிலை மேலதான் வைச்சி விக்கிறோம். பத்தாயிரம் ரூபாய்க்கு நாம் வாங்குகிற சிலை பதினைந்து ஆயிரம் அல்லது இருபது ஆயிரம் ஆகலாம். ரெண்டு லட்சமா எப்படி ஆகும்? அதோடு, இருபத்தோராம் நூற்றாண்டு சிலை, ஐந்நூறு வருஷம் பின்னால எப்படிப் போகும். எதுக்கும் நியாய, அநியாயக் கோடு இருக்கத்தானே இருக்கு?

(மானேஜர் தோளைக் குலுக்கிக் கொள்கிறார்.)

மானேஜர் : உங்களுக்கு நல்லா பேச வருது. இந்திய தத்துவம், தெரிஞ்சிருக்கு. அதுக்குத்தான் நீங்க செலக்ட் ஆகி இருக்கீங்க. இது முடியலைன்னா, இந்த ஆபீஸ்ல, வேற என்ன வேலை பார்க்க முடியும்?

சீதா : யோசிக்கிறேன், சார். நீங்களும் யோசியுங்களேன்.

மானேஜர் : சரி பார்ப்போம்.

(அவள் போவதையே பார்த்தபடி இருக்கிறார் மானேஜர்)

(தொடரும்)



அமரர் கல்கி நினைவு
இளமைச் சிறுகதைப் போட்டி-2003

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு – ரூ.10,000 இரண்டாம் பரிசு – ரூ. 7,500
மூன்றாம் பரிசு – ரூ.5000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு! எழுதுபவர், முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால் கூடுதல் போனஸ்! மற்ற நிபந்தனைகள் வழக்க மானவை.

கதை இளைஞர்களை மையப்படுத்தி எழுதப்பட வேண்டும் என்பது முதல் நிபந்தனை.

விதிமுறைகள்:


- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை யென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராயின் ஏதாவதொரு அத்தாட்சி (உம்: பத்தாம் வகுப்பு டி.சி.ஜெராக்ஸ்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2003' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 3 ஆண்டு மலரில் வெளியாகும்.


படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

– ஆசிரியர்



○○பிரான்ஸ் நாட்டில் ஒவ்வோர் ஆண்டும், இதுவரை அறியப்படாத ஒவ்வொரு நாட்டு இலக்கியம் பற்றிய விழா ஏற்பாடு செய்து, கருத்தரங்கம், சொற்பொழிவுகள் என்று நடத்துவார்கள். அந்நாட்டுக் கலா

இந்தியாவின் இலக்கிய



• குஷ்வந்த் சிங்



• இந்திரா பார்த்தசாரதி

சாரத் துறைதான் இதை நடத்துகிறது. சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை நடைபெற்ற இந்திய இலக்கிய விழாவுக்கு இருபது இந்திய எழுத்தாளர்களை ஃபிரெஞ்சு அரசு அழைத்திருந்தது. புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலர் அதில் கலந்து கொண்டனர். பல இந்திய எழுத்தாளர்களின் படைப்புகள் அதில் அலசப்பட்டன. அப்போது அந்த விழாவில் பங்கு கொண்ட அலிவியே கஸல் என்ற இளம் ஃபிரெஞ்சுப் புகைப்படக் கலைஞர், இந்தியாவுக்கு வந்து, சுமார் நாற்பது


• அம்பை





• கமலா தாஸ்

முகங்கள்!



• அசோகமித்ரன்

எழுத்தாளர்களின் புகைப்படங்களை எடுத்தார். (சில புத்தகக் கடைகளையும்கூட!)

சென்னை அலியான்ஸ் பிராங்கைஸ் வளாகத்தில் இந்தப் புகைப்படக் கண்காட்சியை, சென்ற வாரம் அசோகமித்திரன் திறந்து வைத்தார்.

• சிவகாமி



முதலில் கொல்கத்தாவில் இந்தப் புகைப்படக் கண்காட்சியை அலிவியே கஸல் தொடங்கி வைக்க, பின்னர் தில்லியில் ஃபிரெஞ்சு தூதரகமும், சாகித்ய அகாதமியும் இதே புகைப்படக் கண்காட்சியை நடத்தின. சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்லுகிறது இந்தப் புகைப்படத் தொகுப்பு.

இதற்கு முன்பு மோகன்தாஸ் படகரா என்ற சென்னை புகைப்படக் கலைஞர், இதே போல நம் தமிழ் எழுத்தாளர்களின்

• சஷி தேஷ்பாண்டே



கறுப்பு - வெள்ளைப் புகைப்படங்களைக் காட்சிக்கு வைத்திருந்தார். அதைப் பார்த்தவர்கள், இருவரது கோணங்களையும் மனசுக்குள் அலசிப் பார்க்க முடியும்!

- சித்தார்த்

படங்களைப் படமெடுத்தவர் : **வெங்கடேஷ்**

• யூ.ஆர். அனந்தமூர்த்தி



எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்..!

டாக்டர் சுதா சேஷய்யன்

பொருளும் பொருள் சார்ந்த வசதிகளும் உலக வாழ்க்கைக்குத் தேவை. ஆனால், பொருளைவிட அருளுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது இந்து மதம்.

கண்முன்னால் தெரியும் வாழ்க்கையை விட்டுவிட்டு, கண்ணுக்குப் புலப்படாத சொர்க்க - நரகம் பற்றிய சச்சரவுகள் தேவை தானா? இவை காலகாலத்துக்கும் பொருந்த முடியுமா?

கேள்வியின் நியாயம் சற்று தூக்கலாகவேதான் தெரிகிறது.

மனித வாழ்க்கைக்கு செல்வம் தேவையென்பதில், எந்தச் சந்தேகமும் சனாதன தர்மத்துக்கு இல்லை. காக்கும் கடவுள் மகாவிஷ்ணு. அவரின் மனைவிதான் செல்வத்துக்கு தெய்வமான மகாலட்சுமி. பூமியில் வாழ்க்கை சரியாகப் பேணப்பட வேண்டுமானால், லட்சுமி கடாட்சம் - செல்வப் பார்வை இல்லையெனில் நடக்காது என்பதை உணர்த்த இதைவிட வேறு என்ன வேண்டும்?

ஒவ்வொருவரின் வாழ்விலும் லட்சுமி கடாட்சம் பெறப்பட வேண்டுமென்பதற்காகவே சில வழிமுறைகளும் அன்றாட வாழ்வில் வழக்கங்களாக்கப் பெற்றன. லட்சுமி நித்யவாசம் செய்யும் இடங்களில் ஒன்று துளசி. ஒவ்வொரு வீட்டிலும் துளசி மாடமும், துளசிச் செடியும் இருக்கும்; அந்த துளசிக்குத் தினமும் பூஜையும் இருக்கும். மாலை வேளைகளில் விளக்கேற்றி வைத்தவுடன் வாயிற்கதவைத் திறந்துவிட்டுப் பின் கதவை மூடி வைப்பார்கள். விளக்கு வெளிச்சத்திற்கு மகிழ்ந்து உள்ளேவரும் லட்சுமி, பின்கதவு வழியாகப் போய் விடாமல் இருக்க முன்னெச்சரிக்கையான ஏற்பாடு!

கடவுளே காசு கொடுப்பவராக இருப்பார்.

திருவீழிமிழலை என்னும் ஊர். இங்கு வந்து வணங்கினார்கள் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும்! அந்த சமயத்தில் ஊரில் மழை பொய்த்து பஞ்சம் வந்தது. இரண்டு பெருமக்களின் கனவிலும் காட்சி கொடுத்தார் சிவ பெருமான். "தினந்தோறும் ஆளுக்கொரு காசு தருகிறேன். அதை வைத்து பொருட்கள் வாங்கி எல்லோருக்கும் சோறிடுங்கள்'' என்று சொல்லிப் போனார் சிவன். அந்த ஊர்க் கோயிலில் இரண்டு பலிபீடங்கள். மறு நாள் தொடங்கி கோயில் கிழக்கு வாசல் பலி பீடத்தில் ஒரு காசும், மேற்கு வாசல் பலி பீடத்தில் ஒரு காசும் இருக்கும். கிழக்குக் காசைத் திருஞானசம்பந்தரும், மேற்குக் காசைத் திருநாவுக்கரசரும் எடுத்து, பணியாளர்களிடம் கொடுத்து, வேண்டிய பொருட்களை வாங்கி வரச் செய்து எல்லோருக்கும் உணவு படைத்தார்கள்.

போகிற கோயில்களிலெல்லாம், பொருள் கேட்பாராம் சுந்தரர். பொன்னார் மேனியனே என்று சிவனைப் பாடியவர், அந்தப் பெருமானிடமே பொன்னும் பொருளும் பெற்றார். பெற்றதை என்ன செய்தார்? அன்னதானத்திற்கும் ஆலயத் திருப்பணிக்கும் அத்தனையும் செலவாயிற்று.

அப்படியானால், பொருளின் மீதோ பொருள் தேடுவதன் மீதோ எந்தக் காழ்ப்புணர்ச்சியும் காட்டப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் அடைய வேண்டியவை நான்கு புருஷார்த்தங்கள் என்று வகைப்படுத்திய இந்து மதம், இந்த நான்கில் இரண்டாவதாக செல்வத்தை வைத்தது.

புருஷார்த்தங்கள் நான்கு



இந்த நூற்றாண்டில் இந்து மதம் 7

அவையாவன; தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்பவை.

'அர்த்தம்' என்ற சொல்லுக்குப் பல வகையான விளக்கங்க்ள் உண்டு. நோக்கம், நிறைவு, பொருள், விளக்கம், செல்வம், பணம், வளமை என்பவை இவற்றுள் சில.

அர்த்தம் என்று வட மொழியில் சொன்னாலும் சரி, பொருள் என்று தமிழில் சொன்னாலும் சரி, ஒரு பக்கம் 'விளக்கம்' என்றும் பொருள் கொள்ளலாம், இன்னொரு பக்கம் 'செல்வம்' என்றும் பொருள் கொள்ளலாம். வாழ்க்கையின் அர்த்தமே அர்த்தத்திலுள்ளது. பொருளே பொருள் என்றுகூட இதனைப் புரிந்து கொண்டு விடலாம். ஆனாலும் முறையாகவே புரிந்து கொள்வோம்.

புருஷார்த்தங்கள் நான்கு என்று வகைப்படுத்தப்பட்டது, தரத்தின்படி அன்று. அவை அடையப்பட வேண்டிய வரிசையின்படியே ஆகும். முதலில் அறம் - அறத்தின் வழியில் பொருள் - பொருள் தரும் இன்பமும் சுகமும். இதுவே இகலோக வாழ்க்கை. அறம் பொருள் இன்பமான தர்மம், அர்த்தம், காமம் மூன்றையும் சேர்த்து 'அப்யுதயா' என்பார்கள். இளமையிலும் இல்லற வாழ்விலும் அப்யுதயாவின் மூன்று கூறு

களையும் ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ள வேண்டும். மோட்சம் என்னும் வீடு பேற்றுக்கு 'நிஸ்ரேயஸ்' என்றும் பெயருண்டு. நிறைவான மகிழ்ச்சியைத் தரும் நிஸ்ரேயஸ், அல்லது வீடு பேற்றுக்கான வழிமுறைகளைத் தவத்தின் மூலமும், இறையெண்ணங்களின் மூலமும், இல்லறக் கடமைகளை முடித்துவிட்ட மனிதன் தேட வேண்டும்.

பொருள் என்பது தன்னலத்திற்காகவும், சுயநலத்திற்காகவும் அல்ல. பொருள் என்பதே பொதுவுடைமைக்காக என்பது தான் இந்துமத இலக்கு. பெரிய பெரிய கோயில்களைக் கட்டிய பல்லவ, சோழ மன்னர்கள், தங்களின் அரண்மனைகளைப் பெரிதாக அமைத்துக் கொள்ளவில்லை. பல கிராமங்களை, வயல்வெளிகளை, அவற்றின் வருமானத்தைக் கோயில்களுக்கு நிவந்தங்களாக்கித் தந்தார்கள். கோயிலுக்கு வரும் வருமானம், திருவிழா என்றும் அன்ன தானம் என்றும் செலவழிக்கப்பட்டது. தங்குமிடமாகவும், உணவளிக்கும் மடப் பள்ளியாகவும், கலை வளர் அரங்கமாகவும் கோயில்கள் மக்கள் பணியில் ஈடுபட்டன.

இதைத்தான் வள்ளுவரும், 'செல்வத்துப் பயனே ஈதல்' என்றார். செல்வத்துப் பயன் சேகரித்தல் அல்ல.

செலவழிப்பது மட்டுமல்ல. சம்பாதிக்கிற முறைக்கும்கூட ஒரு நெறியுண்டு.

புருஷார்த்தங்கள் நான்கையும் எப்படி வகைப்படுத்தினார்கள்? முதலில் தர்மம். பின்னர் அர்த்தம். அதன் பின்னரே காமம். அதாவது அறத்தின் வழியில் வாழ்ந்து, அறவழியில் பணம் தேடி, அதன் பயனாக இன்பமும் சுகமும் வசதியும் துய்க்கும்போது, வாழ்க்கையே அறமாக விளங்கும். அறத்தை அடிப்படையாகக் கொண்டு வாழப் பழகி விட்டால், பின்னர் வரும் செல்வத்திலும் செயலிலும் அறம் தலைப்படும். ஆனால், அறம் இல்லாமல், முதலில் பணம் கிடைத்து விடுமானால், போகமும் மோகமும் மட்டுமே தலைதூக்கி வாழ்க்கையைச் சூறையாடிவிடும். இதனாலேயே மனித வாழ்வின் முதல் நோக்கமாக தர்மத்தைச் சொல்லி, பின் அடுத்த நோக்கமாகவே அர்த்தத்தை வைத்தார்கள்.

இந்து மதத்தின் இந்தக் கோட்பாடின் பயன் என்ன?

பணத்தைச் சம்பாதிக்கும் வழிமுறைகளும், சேகரிக்கும் வழிமுறைகளும் அதிகப்பட்டுவிட்ட இன்றைய நாட்களில் இந்தக் கோட்பாடு உதவுமா?

இருபதாம் நூற்றாண்டின் முன்பகுதியில் மட்டுமே இரண்டு உலகப் போர்களை பூமி சந்தித்தது. அதன்பின் பற்பல போர்கள். ஆயிரமாயிரம் வசதிகள், வாய்ப்புகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் என்று இருந்தாலும், உலகப்பந்தைப் போர் முகங்கள் உருட்டி மிரட்டிக் கொண்டேயிருக்கின்றன என்கிற உண்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சமயத்தில், முன்னேற்றங்கள் என்று கருதப்படுபவையே, யுத்த முரசு கொட்டிவிடும் போலவும் தோன்றுகிறது.

இத்தகைய போர்களின் காரணம் என்ன? என்ன நவீன பெயர் சொல்லி அழைத்தாலும், செல்வம், அதனால் வரும் செல்வாக்கு, பணம், பணத்தின் பலம், பலத்தின் அதிகாரம் ஆகியவற்றைத் தான் மட்டுமே அநுபவித்து, பிறர்மீது ஆதிக்கம் செலுத்த நினைத்த நினைப்புதான் சண்டைகளுக்கான சங்கநாதம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

செல்வ – செல்வாக்கின் ஆதிக்கம் அகங்காரமாக மாறினால், மனிதம் மரணமாகி விடும். இது புரிந்ததால்தான் சமூகப்பணியையே சமயப்பணியாக்கியது சனாதன

விளக்கு ஏற்றுவது ஏன்?

விளக்கேற்றுவது பற்றி ஹிந்து சம்பிரதாயம் இவ்வளவு பெரிதுபடுத்துகிறதே...ஏன்?

பலவகை நவீன விளக்கு..." வந்த பின்னாலும் இன்னமும் பழைய மாதிரி விளக்கேற்ற வேண்டியது அவசியம்தானா? இந்த வினா பல மனங்களில் தோன்றலாம்.

கோயில்களிலும், வீடுகளில் பூஜை அறைகளிலும் சுவாமி மாடங்களிலும் விளக்கேற்றப்படுவது அலங்காரத்துக்காகவோ, வசதிக்காகவோ அல்ல. ஒளி – மனித வாழ்க்கையின் வழிகாட்டி. ஆன்மிக வாழ்வில் ஒரு மனிதனுக்கு அக ஒளி தேவையென்றால், லௌகீக வாழ்வில் புற ஒளி தேவை. வெளிச்சம் இல்லையென்றால் எந்த வேலை நடக்கும்? ஒரு மணி நேரம் இருட்டில் வெறுமே உட்கார்ந்திருந்தால் கூட மனிதன் சோர்ந்து விடுவான்.

பற்பல உருவங்களில் இறைவனை வணங்கினாலும், ஜோதி வடிவோடு அந்த இறைவனை ஐக்கியப்படுத்துகிறது இந்து மதம். 'தமஸோமா ஜ்யோதிர் கமய' என்று தான் வேண்டுகிறோம். 'இருட்டில் இருக்கும் எங்களுக்கு ஒளியைக்கொடு, அஞ்ஞான இருட்டை நீக்கி ஞான வெளிச்சம் தா...' என்று கடவுளிடம் கேட்கிறோம். சுவாமி முன்னால் விளக்கேற்றி வைத்துவிட்டு உட்கார்ந்தால், விளக்கின் ஒளி மெல்ல மெல்ல உள்ளேயும் ஊடுருவும். ட்யூப் லைட், சோடியம் லைட், இன்னும் என்னென்ன வகை லைட்டுகள் போட்டாலும் அந்த அக ஒளி பரவுவதில்லை. ஏற்றும் தீபத்தின் ஒளி மட்டும் மேல் நோக்கியே சுடர்விடும். மற்ற விளக்குகள் அப்படியா? விளக்கு. அதில் ஒளி. விளக்கு மாதிரி நம் உடல் என்னும் பாத்திரம். ஒளி உள்ளிருக்கும் ஜீவன். ஆன்மாவை ஒளி உள்ளதாகச் செய்யவே விளக்கேற்றுகிறோம்.



தர்மம்.

வேனன் என்றொரு அரசன். யாருக்கும் எதுவும் கொடுக்காமல் தான் மட்டும் சுக போகத்தில் வாழுகிறான். 'நான்தான் அரசன். எல்லாச் செல்வத்தையும் கொண்டு வந்து என்னிடம் கொடுங்கள். எல்லோரும் எனக்குப் பணிவிடை செய்யுங்கள்' என்று ஆணையிட்டு அராஜகம் செய்கிறான். கொடுமையும் வறுமையும் வாட்ட, மக்கள் பசியிலும் பிணியிலும் துடிக்கிறார்கள்.

இந்த மன்னனை அழித்து மக்களைக் காப்பாற்ற கடவுளே அவதாரம் எடுக்கிறார். என்னவாக? அவனுடைய மகனாக - அடுத்த மன்னனாக! 'ப்ருது' என்கிற பெயரோடு பிறக்கிறார். காடு திருத்தி மேடாக்கி நாடாக்கி, வளத்தையும் நலத்தையும் மக்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுக்கிறார். ப்ருது என்னும் இந்த அரசன் ஆண்டதால், பூமிக்கும் 'ப்ருத்வி' என்று பெயரேற்பட்டது.

தர்மத்தின் வழி நின்றால் 'அர்த்தம்' அர்த்தமுடையது. இல்லையெனில், அதுவே அனர்த்தமாகும்.

கிருஷ்ணனை நினைத்து நோன்பிருக்கிறாள் ஆண்டாள். அந்த நோன்பை நிறைவு செய்யும் சமயத்தில், கிருஷ்ணனைப் பாடியதால் சன்மானம் கிடைத்தது. என்ன சன்மானம்? சூடகம், பாடகம், தோடு, செவிப்பூ என்று அணிகலன்கள். கூடவே சோறு, தயிர், பால், நெய்... ஆண்டாள் சொன்னாள், 'இவற்றையெல்லாம் நாங்கள் எல்லோரும் சேர்ந்து பகிர்ந்து அநுபவிக்கிறோம்' "கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்!"

அதோடு நிறுத்தவில்லை. நிரந்தர சொத்தும் கேட்டாள். சின்னச் சின்ன பொருட்களையெல்லாம் விட்டுவிட்டுப் பெரிதாகக் கேட்டாள். 'இறைவா! இன்று நீ கொடுக்கும் சன்மானம் வேண்டாம். ஆனால், எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்னோடு எங்களுக்கு உறவு வேண்டும்' - "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு உற்றோமே ஆவோம்".

அறம், அறத்தின் வழி பொருள், பொருளின் வழி இன்பம் என்ற பாதையில் பயணித்தால், வீடுபேற்றை அடைவது மட்டுமல்ல, எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் இறைவனை சொத்தாக்கிக் கொள்ளலாம்.

(தொடரும்)




ஜல்லு மல்லு

—கதிர்



என்ன? ஃபேஷன் ஷோல எனக்கு 'மேல்' மாடலா வரப் போறியா...?
ஏன் மேலுக்கு மேல் ஆசைப்படற!
தோடா... எனக்கு மேல் மாடலா வர எத்தனை பேர் 'Q'ல் நிக்கறாங்க தெரியுமா?
விட்டா 'ஆல்ஃபாபெட்'ல இருக்கற எல்லா எழுத்துலயும் நிக்கறாங்கன்னு சொல்லிடுவே.
டாப்பிக்க மாத்தாதே. இது என்ன டிரஸ்?
இந்த டிரஸ் பேர் 'சன்ஃப்ரீ' டிரஸ்...
... வெயில் காலத்துக்கு ஏத்த மாதிரி காத்தோட்டமாயிருக்கு பாரு...
இதுக்குதான் இவ்வளவு பில்டப் ஆ!
விலை மட்டும் வெயிலுக்கு மேல கொளுத்தியிருக்குமே...
ஹி...ஹி... ஃபிப்டி ருபீஸ் இருந்தா குடேன்...


கல்கி
25.5.2003
இதழுடன்
இலவச இணைப்பு
திருநள்ளாறு
நாயகன்!



22.5.03 சனிப் பெயர்ச்சி

நல்லதே செய்வார் நள்ளாறு நாயகன்!

வேத வொலி யார் திருநள்ளாறே
கோலமலர் நீர்க்குட மெடுத்து
மறையாளர்
நூலின் வழி நின்று தொழில் பேணிய
நள்ளாறே!
வேதியர்கள் வேள்வி யொழியாது
மறைநாளும்
ஓதியரன் னாமமு ணர்த்திடு
நள்ளாறே!

“திருநள்ளாறு என்ற திருத்தலத்தில் எப்போதும் வேதங்களின் ஒலி கேட்டுக் கொண்டேயிருக்கும். வேத விற்பன்னர்கள் திருமஞ்சன குடங்களைத்

தூக்கியபடியும், மலர்களைச் சுமந்தவாரும், பூஜைகளை நிகழ்த்த விரைந்த வண்ணம் உள்ளனர். தொடர்ந்து யாகங்கள் செய்தும், வேதங்கள் ஓதியும், ஈஸ்வரனைத் தியானித்து வாழ்கின்றனர்'' என்று பாடினார் திருஞான சம்பந்தர். அப்படிப்பட்ட பெருமை பெற்ற திருநள்ளாறு திவ்ய க்ஷேத்திரத்துக்குப் பல புராண வரலாறுகள் உண்டு..


ஆறுகளின் நடுவில் ஊர் இருப்பதால் இது நள்ளாறானது என்று வரலாறு உண்டு.

இந்தக் கோயிலுடன் நள சரித்திரம் பின்னிப் பிணைந்துள்ளதால் நளன் + ஆறு என்ற சொற்கள் இணைந்து நள்ளாறு ஆனது என்றும் சொல்வார்கள்.

இத்தலத்தில் எழுந்தருளி உள்ள ஈஸ்வரனின் பெயர் தர்பாரண்யேஸ்வரர். இங்கு ஒரு காலத்தில் தர்ப்பைப் பூக்கள் ஓங்கி வளர்ந்து வளமாகக் காட்சியளித்ததாம். அங்கு சுயம்புவாகத் தோன்றிய லிங்க மூர்த்தியே தர்பாரண்யேஸ்வரர். தர்ப்பையினால் ஏற்பட்ட வடுக்கள் லிங்கத்தில் உள்ளன. இத்தலத்து ஸ்தல விருட்சம் தர்ப்பை. ஈஸ்வரருக்கு, நள்ளாற்றீஸ்வரர் என்ற பெயரும் உண்டு.

பிரம்மன் தனக்கே தனக்காக வழிபட உருவாக்கிய ஸ்தலம் திருநள்ளாறு. ஒரு முறை, ரிஷிகள், பலர் பிரம்மனிடம் "நெடு நாட்களாக தாங்கள் வேத சாஸ்த்திர விமர்சனங்களைக் கேட்டு வந்ததால் வேத விதிப்படி ஒரு யாகம் செய்ய வேண்டும். பூலோகத்தில் அதற்குரிய தவத்தை தாங்கள் சொல்லியருள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். உடனே பிரம்மன் நைமிசாரண்யத்தைப் பற்றிச் சொல்ல, அங்கு செல்கிறார்கள் ரிஷிகள். அங்கு தவம் செய்யும் சூதக முனிவரின் வாயிலாக திருநள்ளாறு ஸ்தலம் பற்றி அறிகிறார்கள்.

ரிஷிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க



• பிராணேஸ்வரி

பிரம்மா, தர்ப்பைக் காடான தர்பாரண்யத் தலத்திற்கு எழுந்தருளினார். அங்கு தவம் செய்ய முற்பட்ட போது தற்செயலாக சிவபெருமான் லிங்க ரூபமாக அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டு ஆனந்தமடைந்து பூஜை செய்ய, ஈஸ்வரனும் காட்சியளித்து பிரம்மனுக்கு அருளியதாக புராண வரலாறு. அங்கேயே சிறிது காலம் தங்கி வழிபட்ட பிரம்மன் தன் தண்டத்தால் உருவாக்கியது தான் பிரம்மதீர்த்தம். அதே போல் சரஸ்வதி தேவியால் பாணி தீர்த்தம் உருவாக்கப்பட்டது.

ஒரு முறை கலிங்க மன்னன் அஸ்வமேத யாகம் நடத்தினான். இதற்கு உலகெங்கும் உள்ள வேத நெறி முழுதும் கற்ற, அந்தணர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தான். வந்தவர்களை நன்றாக உபசரித்து, பரிசுகளைக் கொடுத்து கௌரவித்தான். எல்லோரும் சென்ற பிறகு மகிழ்ச்சிக் களிப்புடன் அந்தப்புரம் சென்றான். ஆனால் பார்க்கவர் என்ற முனிவர்

மட்டும் சிறிது காலம் தாழ்த்தி வந்து விட்டார். பணியாட்களிடம் சொல்லி அனுப்பியும் அரசன் வராமல் போகவே முனிவரின் கண்களில் தீப்பொறி பறந்தது. "எனது பெருமையையும் தவத்தையும் உணராத கலிங்க மன்னன் காட்டில் யானையாகத் திரியக் கடவது" என்று சாபம் கொடுத்து விட்டார்.

கலிங்க மன்னன் குடும்பத்துடன் காட்டில் யானையாகத் திரிந்து வந்தான். ஒரு முறை யானை ரூபத்தில் இருந்த கலிங்க மன்னனை நாரதர் அடையாளம் கண்டு கொண்டார். மனிதனுக்கே உரிய ஆறாவது அறிவை அவனுக்கு உருவாக்கி போதனை செய்தார்.

"உன் முன் வினையால் தான் இப்படி யானையாகத் திரிகிறாய்; பார்க்கவரை இதற்காக சபிக்க வேண்டாம். உன் சாபம் நீங்க வேண்டுமென்றால் காவிரி கொழிக்கும் சோழ வள நாட்டில் தர்பாரண்யம் என்ற ஸ்தலம் உள்ளது. அங்கு பிரம்மனால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் ஒன்றும் உள்ளது. அந்த தீர்த்தத்தில் ஒரு துளி உன் மீது பட்டால் கூட நீ செய்த பாபம் நீங்கி விடும்" என்றார். உடனே யானையாக இருந்த கலிங்க மன்னன் தர்பாரண்யத்திற்கு விரைந்து வந்து பிரம்மதீர்த்த குளக்கரையில் நின்று கொண்டான். அங்கு நீராடிக் கொண்டிருந்தவர்களின் தலையிலிருந்து ஓரிரு துளிகள் அவன் மேல் விழ, யானை ரூபத்தில் இருந்தவன் மீண்டும் மனிதனாக கலிங்க மன்னனாக மாறினான். இது பிரம்ம தீர்த்த மஹிமையைச் சொல்லும் வரலாறு.

திருநள்ளாறு ஸ்தல நாயகர் தர்பாரண்யேஸ்வரர் என்றாலும், மக்களைக் கவர்ந்த நாயகராக இருப்பவர் சனீஸ்வர பகவான். அவரின் பிடியிலிருந்து நள மகராஜா விடுபட்டது இங்கேதான். நிடத



• தர்பாரண்யேஸ்வரர்

நாட்டு மன்னன் வீரசேனனின் மகன் நளன். இளவரசன் நளன் ஒரு முறை நந்தவனத்தில் உலாவச் சென்ற போது அங்கே ஒரு பொன்னிற அன்னத்தைப் பார்க்கிறான். "விதர்ப்ப நாட்டு அரசன் வீமசேனன் மகள் தமயந்தியைத் தான் உனக்கு மனைவியாக பிரம்மன் படைத்திருக்கிறார். நீ விரும்பினால் நானே முன்னின்று உன் திருமணத்தை முடித்து வைக்கிறேன்" என்றது.

அன்னம் விட்ட தூது காரணமாக நளன் – தமயந்தி காதல் வளர்ந்தது. இக்காதலைப் பற்றி அறியாத அரசர், மகள் தமயந்திக்குத் திருமணம் செய்ய சுயம்வரத்தை அறிவித்தார். பூலோகத்தில் உள்ள அரசர்கள் மட்டுமின்றி தேவலோகத்திலிருந்து இந்திரன், யமன்


அக்கினி, வருணனும் சுயம்வரத்திற்கு வந்தனர். ஆனால் தமயந்தி நளனை விரும்புவதை அறிந்து கொண்டனர்., உடனே நளனையே அவர்கள் சார்பாக தூது அனுப்பினார்கள். ஆனால் தமயந்தியோ, "நளனைத் தவிர வேறு யாருக்கும் மாலை சூடமாட்டேன்" என்று சொல்லி விட்டாள். சுயம்வரம் மூலமாக நளன் தமயந்தி திருமணம் நடந்தது. தேவர்கள் விண்ணுலகம் சென்றனர். நடந்ததைக் கேள்விபட்ட கலி புருடன் "தேவர்களை விட்டு விட்டு மனிதனையா விரும்பினாள் தமயந்தி? அவர்களை வாழாமல் பிரித்து வைக்கிறேன்" என்று சபதம் செய்து பூலோகம் வந்தான்.

நிடத நாட்டு மன்னன் நளன், நீதி வழுவாமல், ஆட்சி செய்து வந்ததால், கலி புருடனால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒருமுறை கால்களைச் சரியாக அலம்பாமல் அந்தி பூஜை செய்ய நளன் அமர்ந்தான். இது தான் சமயம் என்று கலி அவனைப் பற்றினான். அன்றிலிருந்து அல்லலும், துன்பமும் துவங்கியது நளனுக்கு.

கலியின் சூழ்ச்சி காரணமாக பங்காளியான புட்கரனுடன் நடந்த சூதாட்டத்தில் நாடு, நகரங்களைப் பறிகொடுத்து, கானகத்திலே உறங்கும்போது மனைவியைத் தனியே விட்டுப் பிரிந்தான்.

கார்க்கோடகன் என்னும் பாம்பை எரியும் நெருப்பிலிருந்து காப்பாற்ற, அது அவனைத் தீண்டுகிறது. "உனக்கு நன்மை செய்வதற்காகவே தீண்டினேன். உன் உருவத்தை மறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. நான் கொடுக்கும் அரவுரியை அணிந்து கொண்டால் தேவையான பொழுதில் மீண்டும் பழைய உருவத்தை அடையலாம்" என்று சொன்னது கார்க்கோடகன்.

அயோத்தி மன்னன் இருதுபன்னனி



• ஓவியத்தில் நளன் வரலாறு...

டம் வாகுகன் என்ற பெயரில் சாரதியாகவும் சமையல் காரனாகவும் பணி புரிந்தவன் நளன்.

காட்டில் அலைந்து கொண்டிருந்த தமயந்தியை மீண்டும் கண்டுபிடித்து அரண்மனைக்கு அழைத்து வந்தார் தந்தை வீமசேனன்.

மீண்டும் ஒரு சுயம்வரத்தை ஏற்பாடு செய்கிறார். ஆனால் தமயந்திக்கு அதில் உடன்பாடில்லை.

இரண்டாவது சுயம்வரத்துக்கு வருகிறார் அயோத்தி மன்னன் இருதுபன்னன். அவருடன் வந்த குதிரை சாரதி, நளன்தான் என்று அடையாளம் கண்டு கொள்கிறாள் தமயந்தி. அரவுரியை மீண்டும் மாட்டிக் கொள்ள, பழைய நளனாகிறான்.


மீண்டும் நளன் _ தமயந்தி வாழ்க்கை துவங்கியது. ஆனால் மன்னன் நளன் எதிலும் ஈடுபாடு காட்டாது சித்தப் பிரமை பிடித்தவன் போல் இருந்தான். எல்லோரும் கவலையுற்றனர். அந்த

சமயம் நாரதர் அங்கே வந்தார். "நீ இப்படி இருப்பது சனி பகவானின் செயல், அதனால் தலயாத்திரை, தீர்த்த யாத்திரை செய்'' என்று அறிவுரை சொன்னார். அதன்படி மனைவி, மக்களுடன் தீர்த்த யாத்திரையைத் துவக்கினான் நளன். இடையில் பாரத்வாஜ முனிவர் அவனைச் சந்தித்து, ''காவிரியின் தென்கரையில் திருநள்ளாறு என்னும் திருத்தலம் இருக்கிறது. அங்கே சென்று பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, தர்பாரண்யேஸ்வரரை வழிபட்டால் உன்னைப் பிடித்த பீடைகள் அகலும்'' என்றார்.

அது போலவே திருநள்ளாறு வந்து பிரம்மதீர்த்தத்தில் நீராடி, கோபுரத்தைக் கண்டு வணங்கி, உள்ளே செல்ல அடியெடுத்து வைக்கும் போது, காகக் கொடியும் சூலமும் தாங்கிய சனி பகவான் இனியும் இவனைத் தொடர்வோமேயானால், மார்க்கண்டேயனைத் துரத்திய காலனுக்கு நேர்ந்த கதிதான் நமக்கும் என்று எண்ணி, அந்த கணமே நளனை விட்டுப் பிரிந்தான்.

நளன் ஏதோ பெரிய சுமையை இறக்கியது போல தெளிவு பெற்றான். உடனே ஈஸ்வரனைத் தொழுது அதே ஸ்தலத்திலேயே சில காலம் வசித்து, "யான் பெற்ற பேற்றை எல்லோரும் பெற வேண்டும்'' என்ற எண்ணத்தில் தடாகம் ஒன்றை உண்டாக்கினான். "இத் தடாகத்தில் நீராடி உன்னை வணங்குகிறவர்களுக்கு எல்லாக் கஷ்டமும் நீங்குமாறு அருள வேண்டும்'' என்றும் ஈசனிடம் கேட்டுக் கொண்டான். அவரும் அவ்வாறே அருளினார். அந்த அருட்கடாட்சம் தான் இன்று வரை நள்ளாறு வரும் மக்களை துன்பத்திலிருந்த நீக்கி விடுகிறது என்பது ஐதீகம்.

அவந்தி நாட்டு மன்னர், பாரத்வாஜ முனிவரிடம், "தானத்திலே சிறந்தது எது?'' என்று கேட்க, ''அவர் தானத்திலே



• ஸ்ரீ சனீஸ்வரர் சந்நிதி

சிறந்தது அன்னதானம்; அதைக் காலமறிந்து செய்தல் விசேஷம். அதைவிடச் சிறந்தது பித்ருக்களுக்குச் செய்யும் அன்னதானம். அதைக் காவிரி நதிக் கரையில் உள்ள தர்பாரண்யேஸ்வரர் ஆலயத்தில் செய்வது உலகத்திலேயே மிக உயர்ந்த தானமாகும்'' என்றாராம்.

கொடுப்பாரும் இல்லை; கெடுப்பாரும் இல்லை!

"சனி பகவானைப் போன்று கொடுப்பாரும் இல்லை; கெடுப்பாரும் இல்லை என்று சொல்வார்கள். ஒருவர் மிகவும் சிரம தசையில் அவதிப்படும் போது 'அவனுக்கு சனி பிடித்து விட்டது' என்று சொல்வது இதனால்தான் என்கிறார் திருநள்ளாறு ராஜா ஸ்வாமிநாத குருக்கள்.

ஒரு சமயம் இந்திரன் சனீஸ்வரனை

அழைத்தார்: "என்னுடைய பதவியை மனத்தில் வைத்தாவது என்னை நீங்கள் விட்டுவிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் இந்திரன். "மனிதர்களாக இருந்தாலும், தேவர்களாக இருந்தாலும், விதி நிர்ணயித்தபடி ஒருவரை பிடித்தே தீருவேன்" என்று உறுதியாகத் தெரிவித்து விட்டார் சனீஸ்வரர்.

"தேவர்களுக்கு அதிபதியான என்னை வேண்டுமென்று அவமதிக்கிறாயே, உனக்குப் பாடம் கற்பிக்கிறேன்" என்று மனத்தில் கருவிக் கொண்டு, "எப்போது என்னை பிடிக்கப் போகிறாய்?" என்று கேட்க, சனீஸ்வரரும் சரியான நேரத்தைச் சொல்லி விட்டார். "அப்படியா சங்கதி?"



• ராஜா ஸ்வாமிநாத குருக்கள்.

என்று அந்த குறிப்பிட்ட நேரத்தில் இந்திரன் பெருச்சாளி உருவமாகத் தன்னை மாற்றிக் கொண்டு, சாக்கடைக் குழியில் பதுங்கி விட்டார். சனீஸ்வரர் பிடிப்பதாகக் சொன்ன குறிப்பிட்ட காலம் வரை பொந்திலேயே பதுங்கியிருந்து பின்னர் வெளிவந்த இந்திரன், சனீஸ்வரரிடம் "பார்த்தாயா? என்னை எதுவும் செய்ய முடியவில்லையே?" என்று மிக அகந்தையோடு கூறினார். அப்போது சனீஸ்வரர் சிரித்துவிட்டு, "அரியணையில் அமர்ந்து கோலோச்சி சுகமாக ஆட்சி செய்து வந்த நீ, சாக்கடைப் பொந்தில் வசித்தது எனது பாதிப்பினால் தான்" என்றதும் இந்திரன் பிரமித்து நின்றான்.



* நளன் குளம்

மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளில் ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை வருடங்கள் வரை தங்கி ஆட்சி செய்வார் சனி பகவான். அவர் ஒரு சுற்று வர 29½ ஆண்டுகள் பிடிக்கின்றன. ஜாதகத்தில் ஒருவரது ராசியின் கட்டத்திலிருந்து சனீஸ்வரன் ஆட்சி செய்யும் கட்டம் உள்ள இடத்தை கணக்கு வைத்து ஏழரைச் சனி, அஷ்டமத்து சனி, அர்த்தாஷ்டமச்சனி என்றெல்லாம் கூறுவார்கள். இப்போது 'சனி'யின் பல்வேறு நிலைகளைப் பார்ப்போம்.

அஷ்டமத்து சனி:

உங்கள் ராசிக்குரிய கட்டத்திலிருந்து சனி பகவான் சஞ்சரிக்கும் ராசி, எட்டாவது கட்டத்தில் இருந்தால் அதற்கு அஷ்டமத்து சனி என்று பெயர். இதன் பாதிப்பு இரண்டரை வருடங்கள்.

மங்கு சனி:

ஒருவரின் ஜாதகத்தில் ஜனன காலத்தி

லிருந்தே முதல் முப்பது ஆண்டுகளுக்குள் சனி பகவான் ஏழரைச் சனியாக சஞ்சரித்தால் அந்த முதல் சுற்றின் பெயர் மங்கு சனி. தீமையான பலன்கள் உண்டு.

பொங்கு சனி:

முப்பது வயதுக்கு மேல் அறுபது வயதுக்குள் ஏழரைச் சனியின் காலம் வந்தால் அதற்கு பொங்கு சனி என்று பெயர். நன்மைகளை அளிக்கும் காலகட்டம் இது.

ஏழரைச் சனி:

ஒருவரது ராசியிலிருந்து சனி பகவான் 12, 1 மற்றும் 2ம் ஸ்தானங்களில் சஞ்சரிக்கும் போது அதற்கு ஏழரைச் சனி என்று பெயர்.

இந்த சனிப் பெயர்ச்சியில் கடக ராசிக்காரர்களுக்கு சனிப் பெயர்ச்சி துவங்குகிறது. மிதுன ராசிக்கு ஜென்ம சனி (அதாவது ஏழரைச் சனியின் 2ம் பாகம்), துவங்குகிறது. அந்த ராசிக்கு இன்னும் ஐந்தாண்டு காலம் பாதிப்பு உண்டு. ரிஷப ராசிக்காரர்களுக்கு கண குடும்ப வாக்கு சனியாக 2ம் இடத்தில் சஞ்சரிப்பதால் பாதகச் சனி (ஏழரைச் சனியின் 3ம் பாகம்) இரண்டரை வருடம் பாதிப்பு.

கண்டகச் சனி:

ஒருவரது ராசியிலிருந்து சனி பகவான் ஏழாம் இடத்தில் சஞ்சரிக்கும் போது இரண்டரை ஆண்டு காலம் கண்டகச் சனியின் ஆட்சி துவங்குகிறது. இந்த சனிப் பெயர்ச்சியில் தனுசு ராசிக்காரர்களுக்கு கண்டகச் சனி உடல் ரீதியான பாதிப்பு இருக்கும். மருத்துவ மனை சென்று பூரண சுகம் அடைவார்கள்.

அர்த்தாஷ்டமச் சனி:

ஒருவரது ராசியிலிருந்து சனி பகவான் நான்காம் இடத்தில் சஞ்சரிக்கும் போது அவர்களுக்கு இரண்டரை ஆண்டு அர்த்தாஷ்டமச் சனி துவங்குகிறது. இந்த முறை



• சனிப் பரிகாரம் செய்கிறார் மகாலிங்க குருக்கள்...

மீன ராசிக்காரர்களுக்கு அர்த்தாஷ்டமச்சனி பாதிப்பு உண்டு. எதிலும் முடிவெடுக்க முடியாத நிலை ஏற்படும்.

ஒருவரது ராசியில் சனி பகவான் உச்சம் பெற்று இருந்தால் நன்மையான பலன்களைத் தருவார். நீண்ட ஆயுளைக் கொடுப்பதால் அவருக்கு ஆயுட்காரகர் என்ற பெயர் உண்டு. இந்தச் சனிப் பெயர்ச்சியில் ரிஷபம், மிதுனம், கடகம், தனுசு, விருச்சிகம், மீனம் ஆகிய ராசிக்காரர்கள் திருநள்ளாறு வந்து பரிகாரம் செய்து கொள்வது உத்தமம்'' என்கிறார் ராஜா ஸ்வாமிநாத குருக்கள்.

மற்ற ராசிக்காரர்களும் ஸ்தல மூர்த்தியான தர்பாரண்யேஸ்வரரையும், சனீஸ்வர பகவானையும் வழிபடுவதன் மூலம் கூடுதல் நன்மைகளையும், வர இருக்கும் சிரமங்களையும் குறைத்துக் கொள்ளலாம்'' என்றும் கூறுகிறார் அவர்.

சனீஸ்வரரை வழிபடுவது எப்படி?

சனீஸ்வரரின் ஆசி பெற திருநள்ளாறு வந்து விட்டீர்கள். இனி என்ன செய்ய வேண்டும்?

நள்ளாறு நாயகரின் சந்நிதியில் குருக்களாக இருக்கும் ஜெ. மகாலிங்கம் சொல்கிறார்.

"முதலில் நள தீர்த்தத்தில் தலையில் எண்ணெய் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும். பிறகு உடுத்தி வந்த ஆடைகளில் ஒன்றை (ஈரமாக) குளக்கரையில் விட்டுவிட்டு கோயிலுக்குள் வர வேண்டும்.

முதலில் தென்மேற்கு கோடியில், கன்னி மூலையில் அமர்ந்திருக்கும் தல விநாயகர் அருளைப் பெறுவோம். அவரை அடுத்து சோமாஸ்கந்தர். அப்படியே பக்திப் பெருக்குடன் வந்தால் வள்ளி தெய்வானை சமேதராகக் காட்சியளிக்கும் முருகப் பெருமானை வணங்குவோம். அடுத்து இத்தலத்தின் க்ஷேத்திர பாலகராக உள்ள பைரவரின் பாதம் பணிவோம்.

வட கிழக்குப் பக்கத்தில் சூரிய பகவான் காட்சியளிக்கிறார். கோயிலின் அன்றாட அனுஷ்டானங்கள் இவரை வழிபட்ட பின்புதான் துவங்குகின்றன.

இரண்டாவது பிராகாரத்தில் கொடி மரம். அதை தரிசித்துக் கொண்டு லிங்க வடிவில் உறையும் தர்பாரண்யேஸ்வரரைப் பிரார்த்திப்போம். இங்கே மூலவரின் உற்சவ மூர்த்திக்கு தியாகேசன் என்று பெயர். உற்சவரையும் தரிசித்துக் கொண்டு பிராகாரத்தை வலம் வந்தால் அன்னை துர்க்கையின் கருணைக்கு உள்ளாகலாம்.

மூலவருக்கு வடக்கே எழுந்தருளியுள்ள சண்டேஸ்வரரை வழிபட்டு, நள்ளாறு



* எள் முடிச்சுடன் அர்ச்சனைத் தட்டு...

நாயகர் சந்நதிக்கு வருவோம்.

கோபுரச் சுவரில் சிறிய மாடத்தில் அமர்ந்திருக்கிறார் சனீஸ்வர பகவான். அபயக் கரங்களுடன் கருணையே வடிவாய், ஒரு கரத்தை தொடையில் அழுத்தியவாறு நின்று காட்சியளிக்கிறார். கைகளில் எந்த ஆயுதமின்றி கருணா மூர்த்தியாக காட்சியளிக்கிறார்.

''என் சிரமங்களைக் குறைத்து அருள்வாய் சனீஸ்வரப் பெருமானே'' என்று மனமுருக வேண்டிக் கொள்ளுங்கள். நிச்சயம் பலன் உண்டு. சனீஸ்வரரை வணங்கி அனுக்கிரஹம் பெற்றுக் கொண்டு பக்கத்தில் உள்ள பிராணேஸ்வரி என்ற திருநாமம் கொண்ட அம்பாளின் சந்நிதிக்குச் செல்வோம். இவருக்கு 'போக மார்த்த பூண்முலையார்' என்ற பெயருமுண்டு.


இப்போது நாம் எல்லா சந்நிதிகளையும் பார்த்தாகிவிட்டது.

பிரம்மனுக்குப் பூஜை செய்தால் சனி பகவான்

மகிழ்வார். ப்ரீதி செய்த பின், அர்ச்சனை பின்னும் பிரஸாதங்களை, கோயிலிலேயே விட்டுச் செல்ல வேண்டும் என்று சிலர் பக்தர்களைத் தவறாக வழி காட்டுகிறார்கள். இந்தத் தலத்தில் சனி பகவான் அனுக்கிரக மூர்த்தியாகக் காட்சியளிப்பதால் பிரஸாதங்களை, தாராளமாக வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். பயம் ஏதும் வேண்டாம். இந்த தலத்தில் ஓரிரவு தங்கி ஈஸ்வரனையும் சனீஸ்வரப் பெருமானையும் வணங்குவது மிகவும் உத்தமம். சனீஸ்வரரை நேருக்கு நேராக நின்று தரிசனம் செய்யாமல், பக்கவாட்டில் நின்று தரிசனம் செய்யவும்.

தங்கக் காக்கையில் சனீஸ்வரர்

"எங்களுக்கு உதவுங்கள்; உங்களுக்குச் சேவை செய்கிறோம்" என்கிறார் கோயில் நிர்வாக அதிகாரியான கிருஷ்ணசாமி. இவர் பொறுப்பேற்ற பிறகு வரும் முதல் சனிப்பெயர்ச்சி என்பதால் மிகவும் நுணுக்கமாக தேவைகளை அறிந்து செயல்படுகிறார்.



• கிருஷ்ணசாமி

- இந்த முறை நாங்கள் எதிர்பார்ப்பது ஆறு லட்சம் பக்தர்கள்.
- முதலில் நள தீர்த்தத்தில் நீராடுங்கள். அங்கிருந்து ஒரு வழிப்பாதையாக கோயிலுக்கு வர ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. தர்ம



*தர்ப்பை: ஸ்தல விருட்சம்

தரிசனம், 30 ரூபாய் கட்டண தரிசனம், வி.ஐ.பி. டிக்கெட் 600 ரூபாய்.

- 22.5.2003 அன்று சரியாக காலை 8.27க்கு சனிபகவான் ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிக்குச் செல்கிறார். அந்த நேரத்தில் தான் சனீஸ்வரரை வழிபட வேண்டும் என்று சொல்வது சரியல்ல; சனிப்பெயர்ச்சி முடிந்த பின் எப்போது வேண்டுமானாலும் வணங்கலாம்.

- சனிப்பெயர்ச்சியன்று நகைகள் அணிந்து கோயிலுக்கு வரவேண்டாம்.

- தீர்த்தங்களில் நீராடும் போது கம்பித் தடுப்புக்கு அப்பால் செல்லக் கூடாது. (மீறிச் சென்று மூழ்குபவர்களைக் காப்பாற்ற படகும் ஆட்களும் உண்டு.)

- ரயில், பேருந்து வசதிகள் முழுமையாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

பக்தர்களுக்கு டிப்ஸ் கொடுக்கும் அதே சம

யத்தில் தர்பாரண்யேஸ்வரர் ஆலயத்தின் சில சின்ன சுவாரஸ்யங்களையும் பட்டிய லிடுகிறார் கிருஷ்ணசாமி :

- உற்சவர் தியாகேசர் சந்நிதியில் உள்ள மரகத லிங்கத்துக்கு தினசரி உச்சி காலத்தில் அபிஷேகம் உண்டு. இது போன்ற மரகத லிங்கங்கள் ஏழு கோயில் களில் தாம் உள்ளன. முசுகுந்த சக்கர வர்த்தியால் வழங்கப்பட்ட மரகத லிங்கங் கள் இவை.

- கோயில் பிராகாரச் சுவர்களில் நளன் சரித்திரம் ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளது.


- வருடத்திற்கொருமுறை தங்க காக்கையில் சனீஸ்வரர் வீதி உலா வருவார். அப்போது கண்களில் சந்த னத்தை வைத்து நேர் பார்வையை மறைப் போம்.

- ஏழாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட எண்ணெய்க்கால் மண்டபம், மற்றும் மகா மண்டபம் ஆகியவற்றின் சிற்ப வேலைப் பாடுகள் பழைமை வாய்ந்தவை.

- திருஞான சம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர் ஆகியோர் இத்திருத்தலத் தைப் பற்றி பாடியுள்ளனர். இப்பதிகங் களைப் பாடி வந்தாலே பிணிகள் நீங்கும்; வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கும்.

பன்னிரண்டு ராசிகளுக்கும் உரிய சனிப் பெயர்ச்சி பலன்களைத் தருகிறார் பண்டித காழியூர் நாராயணன்.

மேஷம்



இந்த சனிப் பெயர்ச்சி உங்களுக்குப் பலவித முன் னேற்றங்களைத் தரவல்லது.

நீங்கள் பட்ட கஷ்டங்கள், கண்ட தோல்விகள் எல்லாம் விலகும். பிரச்னைகள் படிப் படியாக மறையும். செல்வாக்கு உயரும். சிலர் வசதியான வீட்டுக்குக் குடிபுகலாம். சிலர் புதிய வீடு வாங்கலாம். நீண்ட நாட்களாகத் தடைபட்டு வந்த திருமணம் முதலிய சுப நிகழ்ச்சி கள் ஜூலைக்குப்பின் கை கூடும்.




• காழியூர் நாராயணன்

உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக் கும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். கடன் அடையும்; பணப் புழக்கம் பெருகும். கலைஞர்களுக் குப் புதிய வாய்ப்புகள் வரும். அரசு விருதுகள் கிடைக்கும். விவசாயிகள் இனி வளம் காணலாம். பெண்களுக்கு நீண்ட கால கனவு நிறைவேறும்.

ராகு பகவான் உங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதால், அவ்வப்போது ராகு பக வானுக்கு அர்ச்சனை செய் யவும். வசதியானவர்கள் திருநாகேஸ்வரம் அல்லது காளஹஸ்திக்குப் போய் வாருங்கள். ஏழைகளுக்கு உளுந்து தானம் செய்யவும்.

ரிஷபம்



ஏழரை நாட்டுச் சனியின் பிடியில் சிக்கி, எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து வந்த நீங்கள் விடியலை நோக்கிச் சென்று கொண்டி ருக்கிறீர்கள். ஆம்! இது ஏழரை நாட்டுச் சனியின் இறுதிக்கட்டம். எனவே சனி பகவான் உங்களுக்குப் பலு


வையும் கொடுப்பார்; பலனையும் கொடுப்பார்.

2004 ஆகஸ்ட்டுக்குப்பின் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரிகள் நஷ்டத்தைத் தவிர்த்து, நல்ல வருமானம் ஈட்டுவார்கள். பகைவர்களின் சதிகளை முறியடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் போடும் வாய்ப்பு கலைஞர்களுக்கு உள்ளது. மாணவர்கள் ஓஹோ என்று இல்லாது போனாலும், திருப்தியான வளர்ச்சி பெறலாம். உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் சீராக இருக்கும். பெண்கள் குதூகலமாய் இருப்பார்கள். கேதுவால், ஆகஸ்ட் மாதத்துக்குப்பின் பித்தம், மயக்கம், உஷ்ணம் தொடர்பான உபாதைகள் வரலாம்.




• பாவம் தீர்க்கும் முரசொலி

சனிக்கிழமை, சனீஸ்வரனுக்கு எள் சாதம் படைத்து, அதைக் காக்கைக்குப் போடுங்கள். சனீஸ்வர ஸ்தலத்துக்குச் சென்று வாருங்கள். ஊனமுற்றவர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.



• எள் தீப பரிகாரம்

மிதுனம்



சனி பகவான் உங்கள் ராசிக்கு வந்திருக்கிறார். இங்கு சுமார் இரண்டாண்டு தங்கி இருப்பார். இந்தக் காலம் உங்களுக்குச் சிறப்பானதாகவே அமையும். ஏழரை சனி உச்சத்தில் இருந்தாலும், அவரது கெடுபலன்கள் அதிகம் ஆட்டிப் படைக்காது.

2003 ஜூலைக்குப் பின் உங்கள் முயற்சியில் சில தடைகள் வரலாம். 2005ல் செலவு அதிகமாக இருக்கும். அது போலவே, வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். ஆனாலும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் – மனைவி இடையே அன்பு நீடிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். உத்தியோகத்தில், விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைத்தாலும், வேலை பளு அதிகமாக இருக்கும். சிலர் வேலை நிமித்தம் குடும்பத்தைப் பிரிய நேரிடலாம்.

வியாபாரிகளின் லாபத்துக்குப் பங்கம்

வராது. சில கலைஞர்களுக்கு வரக் கூடிய வாய்ப்பு, எதிரிகளால் தட்டிப் பறிக்கப்படலாம். மாணவர்களுக்கு எளிதில் வெற்றி கிடைக்கும். விவசாயிகளுக்குத் தானிய விளைச்சல் அதிகமாகும். பெண்கள் பிறந்த வீட்டிலிருந்து அதிக உதவியை எதிர்பார்க்க வேண்டாம்.

சனிக்கிழமை பெருமாள் கோவிலுக்குச் செல்லுங்கள். சனி பகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடுங்கள். சனீஸ்வரத் தலத்துக்குச் சென்று தரிசித்தல் நலம்.


கடகம்



உங்கள் ராசிக்கு உச்சமான குருபகவான் உங்கள் ராசியில் இருக்க, இந்தச் சனிப் பெயர்ச்சி நிகழ்கிறது. இப்போது சனி பதினோராம் இடத்திலிருந்து பன்னிரண்டாம் இடத்துக்குச் செல்கிறார். இது உங்களது ஏழரை சனியின் ஆரம்ப காலம்.


சனியால் அதிகச் செலவு ஏற்பட்டாலும், ராகு, குரு, கேதுவால் பண வரவும் இருக்கும். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்வரும் தடைகளை எதிர் கொள்ளும் மனோ தைரியம் வரும். வியாபாரிகளுக்குப் பொருளாதாரம் வளம் பெருகும். வேலை இல்லாமல் இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கலாம். மாணவர்களுக்கு, கல்வியில் எந்தத் தொய்வும் ஏற்படாது. போட்டிகளில் வெற்றி காணலாம்.

சனி பகவானுக்கு அர்ச்சனை செய்து, ஊனமுற்ற ஏழைகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.



• தருமை ஆதினம் கோயிலுக்குள்ளே

சிம்மம்



இந்தச் சனிப் பெயர்ச்சி உங்களுக்குச் சிறப்பானதாக அமையும். எடுத்த காரியம் கை கூடும். பணப் புழக்கம் அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும்; உங்கள் சொல்லுக்குப் பிறர் கட்டுப்படும் நிலை உருவாகும்.

2003 ஜூலைக்குப் பின் வெகு நாள் தடைபட்டு வந்த சுப நிகழ்ச்சிகள் கைகூடும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உங்கள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தவர்கள், சரணடைவார்கள். வேலை பளு குறையும். வியாபாரிகளுக்கு இருந்து வந்த தொய்வு நிலை மாறும். வீண் அலைச்சல் இருக்காது. சேமிப்பு அதிகரிக்கும். வக்கீல்கள் வாக்குவாதத்தில் சிறப்பார்கள். மாணவர்கள் கல்வியில் சாதனை படைப்பார்கள். விவசாயிகள் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நல்ல

மகசூல் காண்பார்கள். கேதுவால் சிற்சில உடல் உபாதைகள் வரலாம்.

சனி சாதகமாக இருந்தாலும் ராகு திருப்தியற்ற இடத்தில் இருப்பதால், மந்தாரை மலரால் அர்ச்சனை செய்ய லாம். சிவன் கோவிலுக்குச் சென்று, தட்சிணாமூர்த்தியை வணங்கி, கடலை படைத்து தானம் செய்யுங்கள்.

கன்னி




இதுவரை சனிபகவான், அத்தனை சிறப்பு இல்லாத ஒன்பதாம் இடத்தில் இருந் தார். இதனால் முயற்சிகளில் தோல்வி, பகைவர்களால் தொல்லை ஏற்பட்டிருக்கும். இப்போது பத்தாம் இடத் துக்கு வருகிறார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. என்றாலும், இதுவரை சனியால் வந்த தடைகள் அகலும். ஆனால் தொழிலில் சிறு பின்ன டைவு ஏற்படலாம். செல்வாக்குச் சற்று சரியலாம்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறையாது. தூரத்து உறவினர் வகையிலிருந்து விரும் பத்தகாத செய்தி வரலாம். செலவு அதி கரிக்கும். சிலர் பொருட்களைக் களவு கொடுக்க நேரிடலாம். மாணவர்கள் பலருக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசம் என்றாலும், சிலர் தீய பழக்க வழக்கத்தால் படிப்பு பாழாக நேரிடலாம். எச்சரிக்கை தேவை. விவசாயிகளுக்கு நெல், கோதுமை, கேழ்வரகு, சோளம் போன்ற பயிர்களில் லாபமே; எள், கரும்பு போன்றவற்றில் எதிர்பார்த்த அளவு லாபம் இல்லாமல் இருக்கும். பெண்கள் பொறுமையைக் கடைபிடித்து, விட்டுக் கொடுத்துப் போகவும்.

ராகு, சனி, அர்ச்சனை, துர்க்கை

வழிபாடு பலன்தரும். திருநாகேஸ்வரம் போய் வரவும்.

துலாம்




அஷ்டமத்தில் சனி பகவான் இருந்து கொண்டு செய்த இடையூறுகளால், நீங்கள் பட்ட கஷ்டம் சொல்லி மாளாது. குடும்பத்தில் பிரச்னை, விரிசல்கூட நிகழ்ந்திருக்கும். இனி உங்களுக்கு விடிவு காலம்தான். காரணம், சனி பகவான் ஒன்பதாம் இடத்துக்கு வந்துவிட்டார். இது சிறப்பானது என்று சொல்ல முடியாது; ஆனாலும் கெடுதல் இல்லை.

பொதுவாக வீண் விரயங்கள் இருக்கும் என்றாலும், அதைச் சமாளிக்கும் விதமாகவே இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்த்து விடுங்கள். பிரிந்த குடும்பங்கள் இனி ஒன்று சேரும். ஆனாலும் இதற்குச் சிறிது தாமதமாகலாம். படிப்பைப் பாதியில் நிறுத்தியவர்கள் தொடர வாய்ப்பு உண்டு. குடும்பத்துடன் சுற்றுப் பயணங்களுக்குச் சாத்தியம் உள்ளது.

சனி, கேதுவுக்கு அவ்வப்போது அர்ச்சனை செய்யுங்கள். விநாயகர் வழிபாடு பலன்தரும். சனிக்கிழமை காக்கைக்கு அன்னம் இடுங்கள். ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கு ஏற்றுங்கள்.

விருச்சிகம்




உங்கள் ராசிக்கு, ஏழாவது இடத்தில் இருந்துகொண்டு குடும்பப் பிரச்னை, அலைச்சல், பண விரயம், அவப்பெயர் என்று கெடு பலன்களைக் கொடுத்துக் கொண்டிருந்த சனிபகவான் இப்போது

அஷ்டமத்துக்கு வந்திருக்கும் போது என்ன பெரிதாய் நன்மை செய்து விட முடியும்?

பொதுவாக வேலையை அதிகம் சிரமப்பட்டே முடிக்க வேண்டியிருக்கும். சுப நிகழ்ச்சிகள் தாமதம் ஆனாலும் நடந்தே தீரும். சிலருக்கு உத்தியோகத்தில் வெறுப்பு ஏற்படலாம். வேறு சிலருக்கு வேலை இல்லாத நிலைமாறி, புது வேலை கிடைக்கலாம். வியாபாரிகளுக்கும் சங்கடங்கள் வரும்; ஆனாலும் லாபம் குறையாது. மாணவர்களுக்கு வெளி நாடு செல்ல வாய்ப்பு கிடைக்கும். பித்தம், மயக்கம், கண் தொடர்பான உபாதைகள் வரலாம்.

சனிக்கிழமைகளில், சனி பகவானுக்கு எள் சோறு படைத்து, காக்கைக்குப் போடவும். சனி ஸ்தலத்துக்குச் சென்று தரிசித்து வரவும்.

தனுசு




இதுவரை ஆறாம் இடத்தில் இருந்து கொண்டு பணப்புழக்கம். காரிய சித்தி, உடல் நலம், வியாபார விருத்தி என்று நற்பலனாக அளித்து வந்த சனி பகவான், இப்போது, ஏழாம் இடத்துக்குச் சென்றிருப்பது, சிறப்பானதாகக் கூறமுடியாது. அலைச்சல், தீயோர் சேர்க்கை, வீண் விரோதம் போன்றவை இருக்கும். எச்சரிக்கை தேவை.

சனி பகவான் முன்னே, பின்னே இருந்தாலும், மற்ற கிரகங்களால் நன்மை உண்டு. 2003 ஜூலைக்குப் பின் வீண் விரயங்கள் இருக்காது. செலவுகள் அதிகரித்தாலும், வீட்டில் வசதி பெருகும். வேலை பளு அதிகமாக இருந்தாலும், உத்தியோகத்தில் திருப்தி கிடைக்கும்.

எதிரிகளின் சவால்களைச் சமாளிக்கும் திறமை உங்களுக்கு உண்டு. மாணவர்கள் அதிக முயற்சி எடுத்து படித்தாலும், அதற்கேற்ப பலன் கிடைக்காது. சில பெண்கள் வேலை விஷயமாக, தற்காலிகமாக குடும்பத்தைப் பிரிய நேரிடலாம்.

சனி பகவானுக்கு அர்ச்சனை செய்யவும். துர்க்கை அல்லது பத்திர காளியை வணங்கவும். ராகு காலத்தில் எலுமிச்சை பழ விளக்கு ஏற்றி வழிபடவும்.

மகரம்



உங்களுக்கு இது சிறப்பான காலம். குடும்ப சச்சரவுகள் தீர்ந்து, ஆற்றல் பெருகும். நினைத்த காரியம் வெற்றிகரமாக முடியும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். புதிய மனை அல்லது வீடு வாங்க யோகம் உண்டு. உறவினர்களால் நன்மை ஏற்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு சற்றே தாமதப்படலாம். வேலை பார்த்தபடியே சுய தொழில் செய்பவர்கள் வருமானம் பெருகும். வியாபாரிகளுக்கு லாபமும், சேமிப்பும் அதிகரிக்கும். கூட்டாளிகள் மத்தியில் ஒற்றுமை பலப்படும். மாணவர்களின் முயற்சிகள் வெற்றிகரமானதாக இருக்கும். விரும்பிய பாடம் கிடைக்கும்; அயல்நாட்டு யோகம் கூட உண்டு. விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும்; கால்நடைச் செல்வம் பெருகும். புதிய சொத்து வாங்க முடியும்.

தடைகளை உடைத்து வெற்றி பெற காளி வழிபாடு செய்யவும். ராகு காலத்தில் துர்க்கைக்கு எலுமிச்சை விளக்கு ஏற்றவும். குரு பகவானுக்கு அர்ச்சனை; கடலை தானம் செய்யவும்.

கும்பம்




சனிபகவான் நாலாமிடத்திலிருந்து, ஐந்தாம் இடத்துக்குப் பிரவேசிக்கும் இந்தச் சனிப் பெயர்ச்சியால் சுமாரான பலன் தான் கிடைக்கும் என்றாலும் கவலை வேண்டாம். இதுவரை உங்களைப் பாடாய்ப் படுத்தி வந்த பிரச்னைகளின் தீவிரம் குறைந்து போகும்.

எடுத்த காரியம் தடை படுவது சாத்தியம் என்றாலும் அது ஒரு தீராத பிரச்னை இல்லை. வீண் செலவு ஏற்படும். எச்சரிக்கை! சிக்கனம் அவசியம். குடும்பத்தில் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் படிப்படியாக மறையும். புண்ணியத் தல யாத்திரைக்கு வாய்ப்பு வரும். வியாபாரம் மற்றும் விவசாயத்தில் கடுமையாய் உழைக்க வேண்டியிருக்கும் கணவன் மனைவி உறவு பலப்படும். மகப் பேறு கிட்டும்..

சனிக்கிழமை பெருமாள் கோவிலுக்குப் போய் வாருங்கள். சனி பகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றுங்கள். ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

மீனம்




மூன்றாம் இடத்தில் இருந்து கொண்டு பல்வேறு நன்மைகளைச் செய்து கொண்டிருந்த சனி பகவான், இனி குடும்பத்தில் சிற்சில பிரச்னைகளை ஏற்படுத்துவார்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சில சுப நிகழ்ச்சிகள் தள்ளிப்போகலாம். வியாபாரத்தில் கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டு, வியாபாரம் வளரும்.

பெண்களுக்குப் பொறுமை தேவை. பித்தம், மயக்கம், இருமல், சளி தொடர்பான நோய்கள் வரலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

சனி பகவானுக்கு எள் சோறு படைத்து வழிபடுங்கள். மோசமான நிலையில் இருக்கும் உடல் தேறும். கேதுவுக்கு வஸ்திரம் சாத்தி வணங்கலாம். பத்திர காளியை வணங்கினால் இடர்பாடுகள் நீங்கும்.



• தங்க காக்கை வாகனம்


தொகுப்பு : **ஸ்ரீநிவாசன், கௌதம்ராம்.**

படங்கள் : **ராஜன்**

ஓவியங்கள் : **தனுசு**


சனிக்கிரஹ
தோஷசாந்தி செய்முறை

சனி பகவானுக்கு சனிக்கிழமையில் அபிஷேகம் செய்வித்து கறுப்பு ஆடை, நீலக்கல் அணிவிக்கவும். கருங்குவளை மலர்களால் அலங்காரம் செய்யவும். சனிபகவானின் மந்திரங்களை ஓதி, எள் தானியம் சமர்ப்பித்து தீபாராதனை செய்யவும். நல்ல எண்ணெய்த் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து தூப தீப நைவேத்தியம் காட்டவும். யதுகுல காம்போதி ராகத்தில் சனிபகவான் கீர்த்தனைகள் பாடி பிரார்த்தனை செய்யவும். சனிக்கிரஹ தோஷம் நீங்கும்.



• நலம் தரும் நள்ளாறு நாயகன்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka.
Supplement to the Kalki issue Dated 25.5.2003



சனீஸ்வரரின் அருளைப் பெற சொல்ல வேண்டிய ஸ்லோகங்கள்

தியானம்

ஓம் நீலாஞ்சன சமாபாசம்
ரவி புத்ரம் யமாக்ரஜம்
ச்சாயா மார்த்தாண்ட சம்பூதம்
தம் நமாமி சனைஸ்சரம்!

காயத்ரி

காகத்வஜாய வித்மஹே கட்க
ஹஸ்தாய தீமஹி
தந்நோ மந்த: பிரசோதயாத்!

முதன்முறையாக டாக்டர்களால் நடத்தப்படும்

Health & Beauty Clinic

FDA Food and Drug Administration

La Praba V care repechage clinic
the ultimate health and beauty clinic





பொடுகு பிரச்சனையா? புழுவெட்டா?

கவலை வேண்டாம்! இந்தியாவிலேயே முதன் முறையாக Hair Scanner-ரால் பொடுகின் அளவைப்பார்த்து Imported Machines கொண்டு பொடுகிற்கு நிரந்தர தீர்வு அளிக்கப்படுகிறது.

முடி வளர வேண்டுமா?

முடி உதிர்தலினால் வழுக்கையாகி விடுமோ என்ற பயம் வேண்டாம். எங்களின் மருத்துவர்கள் முடி சாம்பிள்ஸ் எடுத்து Scalp Analysis மற்றும் Tricho Analysis செய்து Trichology* என்ற Latest Technologyயின் மூலம் முடி கால்களை வலுப்படுத்தி எந்தவிதமான முடி உதிர்தல் பிரச்சினைக்கும் தீர்வு அளிக்கப்படுகிறது.

உடல் எடையை குறைக்க வேண்டுமா?

Diet மற்றும் Exercise இல்லாமல் எந்தவித பக்க விளைவுகள் இன்றி FDA-வால் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறைகளை கொண்டு உங்களின் உடலை வசீகரமாக மாற்றிவிட முடியும்.

HAIR REMOVAL

இந்தியாவிலேயே முதன்முறையாக லண்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Latest Advanced Laser System மூலம் நிரந்தரமாக எந்தவித பக்க விளைவுகளுமில்லாமல் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

- உடல் எடையைக் குறைக்க ...
- வேண்டாத ரோமங்களை நீக்க ...
- மார்பகத்தை பெரிதாக்க, சிறிதாக்க ...
- அறுவை சிகிச்சையின்றி முகச்சுருக்கம் போக்க
- Acne, பரு, மங்கு மற்றும் மருநீக்க ...
- முகக்கருப்பை பொலிவாக்க ...
- ஹைடெக் ஃபேஷியல்ஸ்
- பெர்மெனன்ட் மேக்கப்

* Machines approved by FDA & European Economy Council

* Science of Hair & Scalp Problems

* Hair Scanning Free



AMERICAN HAIR BONDING & WEAVING SYSTEMS

வழுக்கை தலை உள்ளவர்களுக்கு Bonding & Weaving முறைகள் மூலம் நிரந்தர தீர்வு.

CHENNAI CLINIC :
#15, New Giri Road, G.N. Chetty Road, (near Apollo Clinic)
T.Nagar, Chennai - 17.
Ph: 28260064, 52125659 Cell: 98412 77688
Email: carolinpraba@yahoo.com

Mrs. Praba Reddy
(Member in British Association of Beauty Therapy and Cosmetology)
DTE, BTHD, MA, MS, Dip. in Bridal Dressing (Singapore)
Cinema Secrets Hollywood Makeup (London)

Praba's Herbal Beauty Clinic
115, Bussy Street, Pondicherry - 1.
Ph : 0413-2348820, 21
Cell : 98423 33777

ஆண், பெண், இருபாலருக்கும் Beautician Course மேலை நாட்டு முறைப்படி சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்படும்

வாரந்தோறும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு Sun T.V.-யில் 'உங்களுக்காக' நிகழ்ச்சியில் Praba Reddy அவர்களின் அழகு குறிப்புகள் பகுதியை காண தவறாதீர்கள்.

BABTAC

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

